# அறிவுக் கட்டுரை

THE MADURA TAMIL SANGAM

BY

V. DURAISWAMI,

(*Senior Tamil Pandit, P. S. High School, Mylapore*)

**BLACKIE & SON, (India) LTD.,**

**MADRAS**

1949

[விலை ரூ. 1—4

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

PRINTED AT THE LIBERTY PRESS, MADRAS

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | உலக சமுதாயம் | .... .... | 1 |
| 2. | நாணய வரலாறு | .... .... | 9 |
| 3. | பாலை வனம் | .... .... | 24 |
| 4. | வெற்றிக்கு வேண்டுவன.... | .... | 47 |
| 5. | கைத்தொழிலும் தேச முன்னேற்றமும் | | 61 |
| 6. | வசன நூல் வரன்முறை .... | .... | 76 |
| 7. | சீவக சிந்தாமணி | .... .... | 86 |

THE MADRAS TAMIL SANGAM

# அறிவுக் கட்டுரை

## 1. உலக சமுதாயம்

அண்மையில் முடிவுபெற்ற உலகப்போரால், சாம்பிராச்சியக் கொள்கையாலும் சர்வாதிகார ஆட்சியாலும் நேர்ந்துள்ள தீமைகளை நாம் உணரப் போதிய வாய்ப்புக் கிடைத்தது. வானவூர்திகளும் பரமாணுக்குண்டு முதலியனவும் மண்ணைச பிடித்து அலையும் நாட்டினரால் பயன்படுத்தப் பட்டால் உலக நாகரிகமே அழியக்கூடும் என்பதை நன்கு உணரலானோம்.

ஆகவே, ஏகாதிபத்திய மனப்பான்மையையும் சாதிசமய வேற்றுமையையும் நீக்கி உலகத்தாரெல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுமானால் "உலக சமுதாயம் புதிய முறையில் சீர்திருத்தம் பெறுவது இன்றியமையாதது; அவ்வாறு சீர்திருந்தும் உலக சமுதாயத்தால் நாடுகளில் வாழும் வகுப்பு வேற்றுமை முற்றிலும் நீங்கவும், சமூக அநீதிகள் களையப்படவும் வேண்டும். மக்களெல்லாரும் சுகாதாரம் கல்வி முதலியன பெறுவதற்கு எல்லா வகையாலும் இடம்பெறவேண்டும். பலதிறப்பட்ட மக்களும் தத்தம் திறமைக்கு ஏற்பப் பல்வேறு துறைகளில் வளர்ச்சியுற்று முன்னேற்றம் பெற இடமிருத்தல் வேண்டும். போரும் வியாபாரப் போட்டியும் சமூ

கத்தடைகளும் நீங்கி, அமைதியும், கூட்டுறவு மனப் பான்மையும், சகோதரவுணர்ச்சியும் நாட்டில் நிலவ வேண்டும். மக்கள் உடலுழைப்பால் நடைபெறும் வேலைகள் பலவும் எந்திரவுதவியால் செய்யப்படு தல் நலம். மக்களுக்கு ஓய்வு நேரம் அதிகரிக்க அதை நேர்மையான வழிகளிற் பயன்படுத்த அறி வுச்சாலைகள் பெருக வேண்டும்.

உலக சரித்திரத்தி னிடையிடையே தோன்றிய அசோகன் கீர்த்தி, குப்தரது பொற்காலம், எலிஜ பெத் அரசியின் ஆட்சி, கிரேக்க அரசியல் அறி ஞரான பெரிகில் என்பாரின் ஆட்சிச் சிறப்பு, அஜந் தாகலை முதலியன, உலக மக்களுக்குச் சிறந்த வசதிகளும் அமைதியும் அவற்றிற்கேற்ற அறிவும் விவேகமும் இருந்தால் என்ன என்ன காரியங் களைச் சாதிக்கக்கூடும் என்பதற்கு வழிகாட்டி களாக விளங்குகின்றன.

ஒரு காலத்தின் தொடக்கத்தில் தோன்றிய கல்வியின் மறுமலர்ச்சி, கப்பல் யாத்திரையால் நேர்ந்த புரட்சி முதலியன, சில அறிவாளர் பல இன்னல்களிடையே சாதித்த அருஞ்செயல்களின் தொகுதியாகும். இச் சிலரின் முயற்சியாலேயே சமூகப் பொருளாதார வாழ்க்கையில் நினைக்க முடியாத பல பெரும் மாறுதல்கள் தோன்றியுள் ளன. இக்காலத்தில் பெருகிவரும் விஞ்ஞானக்கலை வளர்ச்சி, இவர்கள் பெரு முயற்சியின் சிறந்த விளைவாகும்; ஆயினும் இப்பெருஞ்செயலைச் செய்த பெரியோர், பொருள் அழிவு, இடையூறு முதலிய வற்றால் ஒதுக்கப்பட்டும் சிறிதும் மனந்தளராமல்

உழைத்து, தம் முயற்சியில் வெற்றி பெற்றனர். இவர்களைப்போல் ஆற்றல் படைத்த பலர், தமது அறிவைப் பெருக்குவதற்கும் பயன் படுத்துவதற்கும் வசதியற்று உலகிலிருந்து மறைந்தனர் என்பதில் ஐயமில்லை. தக்க வசதிகளிருந்தால் கம்பன் காளிதாசன் போன்ற மகா கவிகளும், சமயாசாரியரும், அசோகனைப்போன்ற அரசரும், சாணக்கியரைப்போன்ற நூல் வல்லாரும், மார்க்கோனி முதலிய பல விஞ்ஞானக்கலைஞரும் தோன்றுவர். அவ்வாறு பலர் தோன்றவும் வேண்டும்.

உலக நாகரிகம் ஏற்படுவதற்கு முக்கிய இடையூறுகளாக விளங்குபவை, போரும், சமூக அநீதியும், முறையற்ற வியாபாரப் போட்டியுமேயாகும். போரில் தோல்வியுற்ற நாடுகளில் வாழும் மக்கட் சமூகம் சின்ன பின்ன மடைவதன்றி எல்லா மக்கட்கும் பொருட்சேதமும் ஆட்சேதமும் மறக்க முடியாத மனக்கசப்பும் ஏற்படுகின்றன. புன்முறுவல் பூத்த முகத்தில் சோகக்கண்ணீர் ஒழுகுகிறது. பசியும் பிணியும், உடல்வலிமையையும் மேனியையும் சீர்குலைக்கின்றன. விஞ்ஞானக் கலைவளர்ச்சியின் பயனை மனித சமூகத்தின் நன்மைக்காகப் பயன் படுத்த முற்படவில்லை. பரமாணுக்குண்டினல் ஏற்பட்டிருக்கும் நாசத்தாலும் தோன்றக்கூடிய பேராபத்தாலும் உலகமே நடுக்கமடைந்திருக்கிறது.

குறுகிய மனப்பான்மையையுடைய முதலாளித்வம் மற்ருெரு இடையூருகும்; அதனல் அநீதியான வியாபாரப் போட்டியும் எல்லையற்ற இலாபத்தில்

விருப்பமும் தோன்றுகின்றன. இந்த இலாபத்தின் காரணமாகத் தொழிலாளிகளுக்குத் தக்க ஊதியமும், கௌரவமும் வாழ்க்கை வசதிகளும் அளிக்கப்படுவதில்லை; அதனால் நாடுகளுக்கு இடையே வியாபாரத்தடைகள் தோன்றுகின்றன. வியாபாரப் பெருக்கம் பெரிதும் தடைப்படுகிறது.

சமூக வாழ்க்கையிலுள்ள வகுப்பு வேற்றுமைகளும், நிலைமை வேற்றுமைகளும் பல மக்களுக்குப் பெருந்தடைகளாக உள்ளன. தாழ்ந்த வகுப்பிற் பிறந்தோரும், பொருள் நலம் குன்றியவரும், அறியாமை, நோய், செல்வாக்கு முதலியவற்றிற்கெதிராகக் கடும் போர் நடத்தியே பெரும் பதவி பெற நேர்ந்திருக்கிறது. இப்போரிற் பலர் வெற்றி பெறுவதில்லை. "உலகம் ஒன்றே; நீதி ஒன்றே; எல்லோரும் ஓரினம் என்ற நோக்கம் பகற்கனு" என நினைப்போர் பலர்; அந்நோக்கம் செயலில் வருவது மிகவும் துணிகர முயற்சி என்று கலங்குபவர் சிலர். மனிதன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, விருப்பு, வெறுப்பு, சச்சரவு, அகந்தை, பொறாமைமுதலிய தீக்குணங்களிடையே அகப்பட்டு மயக்குற்று, தன் உண்மை யுயர்வை இழந்தான். கடவுள் அளித்த அறிவை, இவற்றிற்கு உரிமைப் படுத்திச் சிறுமைப்படச் சிறையில் அடைத்தான்.

ஆயினும் வாழ்க்கை உயர்ந்தது; அழிவற்றது; உடற் பிணியும் மனக்கவலையும் நீங்கினால் சிறந்த இன்பத்தை அளிக்கக் கூடியது. உடற்பிணியைப் போக்க நூதன சிகிற்சைகளும் மருந்துகளும் கண்டு

பிடிக்கப்பட்டுள்ளன. சேரிகளிலுள்ள அழுக்கையும் பிணிகளையும் அறியாமையையும் போக்குவதற்குச் சுகாதார முறையில் கட்டப்பட்டுள்ள குடிசைகளும், மருத்துவச் சாலைகளும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் இலவச வாசக சாலைகளும், சமூக முன்னேற்றச் சங்கங்களும் தோன்றியுள்ளன. உடல் உழைப்பால் ஏற்படும் வேலைகளின் கடுமையை நீக்கப் புதிய எந்திரம் முதலியனவும் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாறுள்ள சிறந்த வளர்ச்சியை மக்கள் தொகுதி, மேன்மேலும் பெருக்கவேண்டும். எதிர்காலத்தில் தோன்றும் சமூகத்தில் இயல்பாகக் கடின் வேலைகளை மனிதன் ஆற்றும் துன்பமே இரா. அவனுக்கு உற்சாகத்துடன் ஓய்வின்றியுழைக்கும் அடிமைகளாக எந்திரங்களே யிருக்கும். ஒப்பந்த வேலைகளில் அநீதிக்கு இடமே இருத்தல் ஆகாது. அறிவைப் பெருக்குவதற்கும், நேரத்தைச் சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்வதற்கும் இடம் இருக்கும். இயற்கைச் சக்திகளிடம் கட்டுண்ட மனிதன், அவற்றைத் தன் ஆளுகையின் கீழ்க் கொண்டுவரும் பெருமையைப் பெறுவான். பண்டைக்கால மக்களைப்போல் கலப்பையும் கையுமாக நின்று மழையை எதிர் பாராமல் நூதன எந்திரங்களின் மூலம் குறைந்த கால அளவில் சிறந்த வேலைகளைச் செய்து திட்டமான இன்பத்தையடைவான். அவன் மனம் பழங்கால நம்பிக்கையிலும், குறுகிய நோக்கத்திலும் ஊன்றியிராமல், புதிய நோக்குடன் நுண்ணிய அறிவு பெற்று விளங்கும். அவன் அறிவு வளர்ச்சிக்கு எல்லைகோல இய

லாது. நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்டப் பாடுபடுவதும், தொழிலாளி அரைவயிற்றுக் கஞ்சிக்குத் திண்டாடும் காட்சியும் இல்லையாகும். மருத்துவக் கூடமும் சிறைச்சாலைகளும் குறையும். போர்க் கருவிகளுக்கு எவ்வித வேலையுமே இரா. மக்களை ஏமாற்றி வியாபாரிகளும், சோம்பேறிகளும், நன்னடத்தையைக் கெடுக்கும் பல்வகைப் பேய்ப் பெண்டிரும், பிழைப்பற்று இருப்போரும் மறைவர். அமைதி யிலாகா உத்தியோகஸ்தரின் எண்ணிக்கை குறைந்து அறிவையும் ஒழுக்கத்தையும் சீரிய முறையில் அமையச் செய்யும் ஆசிரியர் கூட்டம் பன்மடங்கு பெருகும். உயிரையும் உடலையும் அழிக்கும் ஆயுதசாலைகள் அழிவுற்று மக்களுக்கு இன்பம் ஊட்டும் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மிகும். உலகத்துச் செல்வம் எல்லோருக்கும் அநீதியின்றிப் பங்கிடப் பெறும். கொல்லாமை, எல்லோரும் இயல்பாகவே பின் பற்றும் அறமாக விளங்கும். உணவிற்காகப் பிராணிகளைக் கொல்லுதல் நீங்கும். கொடு விலங்குகளைக் கண்டு அஞ்சுமியல்பு மாறி அவற்றிடம் எல்லையற்ற அன்பும் கருணையும் தோன்றும்.

இவ்வாறு சமுதாயத்தில் ஒற்றுமை தோன்றுவதால் உலகில் ஒரே வித நாகரிகமும், ஒரேவித அறிவும் வளருமென்று எண்ணுதல் தவறாகும். பஞ்சவர்ணக் கிளி ஒன்றானாலும் அதனிடமமைந்துள்ள ஐந்து நிறங்களும் சேர்ந்து அதற்குப் பேரழகைத் தருதல் போல, உலக சமுதாயம் ஒன்றாயிருப்பினும் ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் இயல்பிற்கும் சக்

திக்கும் ஏற்றவாறு வளர்ச்சி பெறச் சுதந்திர மிருக்கும். உலகிற்கு அழகையும் இனிமையையும் அளிக்கும் சித்திரம் சிற்பம் சங்கீதம் முதலிய கலைகள் முன்னிலும் அதிகமாக வளர்ச்சியுறும்.

உலக சமுதாயம் இத்துணைச் சிறப்புக்களுடன் தோன்றுவதற்கு நாடுகளிடையே உண்மையான கூட்டுறவு மனப்பான்மை அரும்புதலும், எல்லா நாட்டுமக்களும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற மன விரிவும் உண்டாகவேண்டும். இம்முறையை விட்டுப் பிறருரிமையைக் கவருவதில் மறுபடி இறங்கினல் ஆயுத பலமே வெற்றிபெறும். அணுக்குண்டால் உலகமே நாசமுறும். முற்காலத்தில் தெய்வங்களின் கோபத்தைத் தணிப்பதற்கு மனிதர் பலியாயினர். விலங்குகளும் பலியிடப்பட்டன என்பதை நூல்கள் வாயிலாக அறிகிறோம். உண்மையில் அச் சீவராசிகள் அனுபவித்த வேதனைகளை எண்ணிப் பார்த்தால் அருளாளர் உள்ளம் துடிக்கும். பண்டை நூலாசிரியர் யாகத்தைச் செய்வதால் சுவர்க்க இன்பம் கிடைக்குமெனக் கருதினர்; ஆயினும் அஃது இழிந்ததேபோலும் என இப்பொழுது விலக்கினர். தன்னலமற்ற செயல்களுக்கே கொல்லுதல் தவறென்று கூறின், மண்ணாசையாலும் வியாபாரக் தைத்தொழிற் போட்டிகளாலும் மயங்கிச் செய்யும் கொலைகள் உலகத்தினின்று அகலாமலிருப்பது கடவுள் திருவுள்ளத்திற்கு மாறானது எனக்கூறுதல் பிழையாகாது.

ஆகவே நாம் சிறந்த முறையில் மேற்கூறிய வழியில் நடக்கக் கடவுள் வேறு ஒரு சமயத்தைத்

தந்துள்ளார். இம்முறையாவது ஒற்றுமையுடனும் உயர்ந்த ஆழ்ந்த யோசனையுடனும் சீரியகொள்கையுடனும் உலகம் முன்னேற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!

## வினாக்கள்

1. உலகப் போரால் நாம் உணர்ந்தது யாது?
2. உலக சமுதாயம், சீர்திருந்தும் புதியமுறை யாது?
3. மக்களுக்குச் சிறந்த அறிவும் விவேகமும் இருந்தால் என்ன சாதிக்கலாம் என்பதற்கு வழிகாட்டிகளாக விளங்குவன எவை?
4. சில அறிவாளர் பல இன்னல்களிடையே சாதித்தன எவை?
5. கவிஞரும் சமயாசாரியாரும் சிறந்த அரசரும் நூலாசிரியரும் விஞ்ஞானக் கலைஞரும் எப்பொழுது தோன்றுவார்?
6. உலக நாகரிகம் ஏற்படுவதற்கு இடையூறுகளாக விளங்குவன எவை?
7. உலகம் நடுக்கமடையக் காரணம் என்ன?
8. வியாபாரத்தடை தோன்றக் காரணம் என்ன?
9. வாழ்க்கை, இன்பத்தை அளிப்பது எப்பொழுது?
10. எதிர்காலச் சமூகம் எப்படி இருக்கும்?
11. உலக நாகரிகம் தோன்றுவதற்கு வழி என்ன?
12. கடவுள் திருவுள்ளத்திற்கு மாறுனது எது?

## 2. நாணய வரலாறு

"அருளிலார்க் கவ்வுலக மில்லை; பொருளிலார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு"

"முனிவருமன்னருமுன்னுவபொன்னால்முடியும்"

என ஒழுக்க நூலாரும், முற்றத்துறந்த முனிவரும் செல்வச் சிறப்பைப் புகழ்ந்து கூறியுள்ளனர்.

"நடுவண தெய்த விருதலையு மெய்தும்"

என்பதனால் அறத்தையும் இன்பத்தையும் அளிக்கவல்லது பொருள். பொருளில்லாதார் அடையும் துன்பம் ஓரளவுடையதன்று. உலை நீருள் இட்ட ஆமை எவ்வளவு வருந்தி யழியுமோ அந்த அளவுக்குப் பொருளில்லாதவர் மனம் வருந்துவர். பண மதிப்புக் குறைவால் அரசாங்கம் அழிவதையும் உலகின் செல்வ நிலையில் தோன்றும் மாறுதலையும் காண்கிறோம்.

உலகியல் வாழ்வில் ஈடுபட்ட எவரும் செல்வத்தால் மயங்குகின்றனர். அதன் சூழலிலகப்பட்ட மக்கள், அதிற் சிக்கித் தம்மை மறக்கின்றனர். சிலர் பொருளைச் சேர்க்க வாழ்வைத் துரும்பெனக் கருதி உழைக்கின்றனர். அவருட் பலர் இம்முயற்சியால் உயிரினும் அரிய தம் மதிப்பினையும் ஒழுக்கத்தையும் விட்டுக்கொடுக்கப் பின் வாங்குவதில்லை.

இத்துணைச் சிறப்புள்ள செல்வம் என்பது வாழ்க்கையின் கருவியே; அக்கருவியைக் கைக்கொள்ளும் ஆற்றலுக்கு,—உரிமைக்கு,—அறிகுறி

பணம். பண்டமாற்றுச் செய்யும் முறையில் கைம் மாறுவனவும் எவராலும் ஒப்புக் கொள்ளப் படு வனவும் ஆகிய நிலைத்த மதிப்புடைய செலாவணி நாணயங்களையே பணமென வழங்குகிறோம். இது நிக்கல், செம்பு, வெள்ளி, பொன் முதலிய உலோ கங்களாற் செய்யப்படுவதாகும்; அன்றி, துரைத் தனத்தாராலேயோ சேமநிதிகளாலேயோ வெளி யிடப்படும் நாணயச் சீட்டுக்களாகவும், உண்டியல் போன்றனவாகவும் இருக்கலாம். நாணயமென் பது நாட்டில் வாழ்பவருள் ஒருவரிடமிருந்து பிற ரிடம் தட்டுத் தடையின்றிக் கைம்மாறுதல் வேண் டும். அந்நாட்டில் எவரிடமும் அது நிகரற்ற மதிப் பைப் பெறவேண்டும். இப்படிப்பட்ட இலக்கணத் தைப் பெற்றிருப்பதே நாணயம்.

இத்தன்மை வாய்ந்த நாணயம் முற்காலத்தில் வழக்கில் இல்லை. ஒரு பண்டத்தைக் கொடுத்து வேறொரு பண்டத்தை வாங்குவதே பழைய வழக் கம். இதுவே பண்டமாற்றென வழங்கியது. இம் மாற்றம் உலகெங்கும் பரவி யிருந்தது. அக்காலத் தில் வகுப்புத் தலைவர் பரிசுகள் கொடுத்து, பரிசு கள் பெற்றதாலும், வியாபார முறை தோன்றிய தாலும் இப்பழக்கம் பெரிதும் வளர்ந்தது. அரி சியோ நொய் நுறுங்குகளோ கொடுத்து, கறிவேப் பிலை கீரை முதலியவற்றை வாங்குவதை இந்நாளி லும் நாட்டிலேயன்றி நகரங்களிலும் காணலாம்.

பண்டமாற்றத்துட் சில இடையூறுகள் நேர்ந்தன நெல் வைத்திருப்பவனுக்குச் சட்டை வேண்டுமானல் சட்டை வைத்திருப்பவனைத் தேடிக் கண்டுபிடிக்க

வேண்டும். சட்டைக் குரியவனும் நெல்லைப்பெற்று, தன்னிடமுள்ள சட்டையைக் கொடுக்க உடன்பட வேண்டும். சட்டையுடையவனுக்கு நெல் வேண்டுவ தில்லையென்றால், நெல்லுடையானுக்குச் சட்டை கிடைக்க வழியே இல்லை. இதில் வேறொரு தடையும் உண்டு; அஃதாவது சட்டை ஒன்றுக்கு இத்தனை மரக்கால் நெல் கொடுப்பதென்னும் நியதியும் இல்லை. ஒருமரக்கால் நெல்லுக்கு ஒரு சட்டை என்று கொண்டாலும் சட்டை வைத்திருப்பவன் அரைமரக்கால் நெல்லுக்குமேல் விரும்பாவிடில் அதைக்கொடுத்து பாதிச் சட்டையை வாங்கிக் கொள்ள எவன் விரும்புவான்? பாதிச்சட்டையாற் பயன் என்ன? ஆதலால் உழவரும் தொழிலாளரும் தம்மிடம் உள்ள பொருளுக்கு ஈடாக வேறொன்றைப் பெறப் பிறர் ஒப்புக்கொள்ளக் கூடியதொரு கருவியைத் தேடலாயினர்.

இப்படி நேரும் தடைகளைப் போக்கவே இன்றியமையாதனவும் எவரும் போற்றி விரும்புவனவுமான சிலவற்றை நாணயமாக மக்கள் வழங்கலாயினர். இந்த நாணயம் இடத்துக்கு இடமும் காலத்துக்குக் காலமும் மாறுபட்டது. ஒரே இடத்திலும் காலத்திற்குத் தக இது மாறுதலடையும். மக்கள் வேட்டையிற் கிடைத்த பொருள்களையும் கருவாடுகளையும் நாணயமாக வழங்கி வந்த காலமும் உண்டு. சில காலத்தில் தோலும் தந்தமும் நாணயமாக வழங்கி வந்தன. வட அமெரிக்காவில் சிவப்பிந்தியர் மணிகளையும், ஆசியாவில் இருந்தவர் பலகறைகளையும் சங்கு மணிகளையும் நாணயப்பொருளாகப்

பயன்படுத்தினர். இவை வாழ்க்கையில் நேரிடையாகப் பயனற்றவை; அழிவுறுவன; மலிவாகக் கிடைப்பன ; ஆதலால் மதிப்பிழந்துவிடக் கூடியவை.

அரிசி முதலிய தானியங்கள், இரும்பு, எண்ணெய், கல், கல்லுப்பு, சிப்பி, துணி, தேயிலை, பாய், புகையிலை, பேரீச்சம்பழம், போர்வை, மணிலாக் கொட்டை முதலியன நாணயமாக நாகரிக நீரோட்டம் சென்று எட்டாத நாட்டுப் புறங்களில் இன்றும் பயன்பட்டு வருகின்றன.

மக்கள் நாகரிகத்தில் வளர்ந்து பயிரிட்டுவாழ்ந்த காலத்தில் அடிமைகளேயன்றி ஆடுமாடுகளும் நாணயங்கள் ஆயின. பல்வேறிடங்களிற் பல்வேறு பொருள்கள் நாணயங்களாயின. மக்கள் ஆனினங்களிலிருந்து பாலும் நெய்யும் பெற்றதனால் அவற்றைச் செல்வமாகக் கொண்டனர். இதை விளக்க வந்தவர்போல ஆசிரியர் திருவள்ளுவர்.

'கேடில் விழுச்செல்வங் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''

எனச் செல்வத்தைக் குறிக்க மாடு என்றார். அக்காலத்தில் மேற்கூறியவை இடையீட்டுப் பொருளாயிருத்தல் இயல்பே. ஆனால், ஆன் இனத்தை இடம்விட்டு இடம் கொண்டு போவது எளிதன்று; நோய் முதுமை இறப்புகட்கு அவை ஆளாயின; ஆதலின் அவை நிலைபரமான மதிப்பைப்பெற முடியவில்லை. நெல்லும் அரிசி முதலியனவும் பயனுடையவை. சிறு மதிப்பளவில் எளிதிற் கொண்டுபோகக் கூடியவை; ஆனால்,

இவை அழிவுபெறக் கூடியன; ஆதலால் நிலைத்த மதிப்பைப் பெறுவன அல்ல.

ஒரு நாட்டார் பிறநாட்டினரோடு வாணிபஞ் செய்யத் தொடங்கியபோது அந்நாட்டினர் பிறநாட்டுப் பொருள்களை நாணயமாக மதிக்க மறுத்தனர். போக்கு வரவு சாதனங்கள் இல்லாத அக்காலத்தில் இப்பொருள்களை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு எடுத்துப்போவதும் எளிதாகவில்லை. காவலற்ற அக்காலத்தில் தானிய தவசங்களை இடரான வழிகளிற் கொண்டுபோவது பெருந்துன்பம். அப்படியே எடுத்துப்போனாலும் வழியிற் கள்வர் அவற்றைக் கொள்ளையடித்துப் போக நேரலாம். எடுத்துப்போகும் பொருள்களைச் சேர்த்து வைப்பது எளிதன்று. சேமித்து வைத்தாலும் அப்பண்டங்கள் நெடுங்காலம் கெடாமல் இரா. ஆகையால் பல காலங்களிலும் பல இடங்களிலும் பல பண்டங்களைச் செல்வத்தின் அறிகுறியாகக் கொண்டு நீண்டநாள் நிகழ்ந்த நடைமுறை அறிவினாலேயே மக்கள் உலோகங்களை நாணயமாக வழங்க விரும்பினர். வாணிபத்திற்கு நாணயங்கள் இன்றியமையாதனவெனக் கண்டனர். செம்பும் இரும்பும் அழியாமல் நீடித்திருக்கக்கூடிய உலோகங்கள்; ஆகையால் இவற்றால் முதன் முதல் நாணயங்கள் செய்யலாயினர். நாளடைவில் வெள்ளியும் பொன்னும் உயர்ந்த நாணயங்களாகும் நன்மதிப்பைப் பெற்றன.

நாணயத்திற்கு உரிய சிறப்பியல்புகளைச் சிறிதளவு ஆராய்வோம்:—நாணயத்திற்கு ஏற்ற

உலோகங்கள் பல நூற்றாண்டுகளாயினும் அழியா யாமல் நீடித்திருப்பனவாயும், ஒளியாலும் ஒலியாலும் எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளத் தக்கனவாயும், உள்ளத்தைக் கவரும் அழகிய நிறமும் பளபளப்பான தோற்றமுடையனவாயும், எவ்வளவு சிறிதாகப் பகுத்தாலும் அவ்வளவு பகுப்புக்களுக்கும் இடந்தரத் தக்கனவாயும், எளிதில் உருக்கிப் பொறிப்பிடக் கூடியனவாயும், சிறிய எடையில் பெருமதிப்பினவாயும், நிலைத்த விலையினவாயும், கையடக்கமுள்ளனவாயும் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்டவை வெள்ளியும் பொன்னுமே யன்றி வேறில்லை. அவை இரண்டும் எந்த நாட்டிற் கிடைப்பினும் ஒரே மதிப்பியல்புடையன. இக்காரணங்களாலேயே எல்லாத் தேசமக்களும் அருகலுமாகாமல் மலிவுமாகாமல் ஒப்புயர்வற்ற தனி வாய்ப்புடைய இடையீட்டுப் பொருளாகவும் மதிப்பளவாகவும் அவ்விரு வுலோகங்களையே நாணயங்களாக வழங்குகின்றனர். தமிழகத்தில் ஆதியில் வழங்கி வந்தவை பொன் நாணயங்களே. அதனாலேயே நாணயத்தைக் காசு என இந் நாளிலும் வழங்குகின்றர்.

நாணயத்தை வியாபாரமுறையில் முதன் முறையில் வழங்கிய பொழுது பொன் வெள்ளிப் பொடிகளும் சிறுசிறு கட்டிகளுமே நாணயங்களாக இருந்தன. வியாபாரிகள் இவற்றின் எடை, பெறுமானம், சுத்தம் முதலியவற்றை நிறுத்துப்பார்த்தும் உரைகல்லில் உரைத்துப் பார்த்துமே தெரிந்து கொண்டனர். இவ்வாறு பொன் நாணயங்களைச்

சோதித்து உணர்ந்தவர்க்குப் பழந்தமிழகத்தில் **வண்ணக்கர்** என்ற பெயர் வழங்கி வந்தது; இவ்வாறு செய்வது எல்லோருக்கும் எப்பொழுதும் எளிதாக இல்லாமையால் வியாபாரிகளும் காசுக்கடைக்காரரும் ஒலியையும் எடையையும் உணர்த்தும் அடையாளமாகப் பொன் வெள்ளிக் கட்டிகளில் முத்திரையிட்டனர். நாளடைவில் துரைத்தனத்தாரே நாணயம் செய்தலைத் தம் கடமையெனக் கருதினர். இப்போது துரைத்தனத்தார் பொன் வெள்ளி செம்பு நிக்கல் முதலிய உலோகங்களால் வட்டம் சதுரம் முதலான உருவங்களாகச் செய்து ஒரு புறம் சக்கிரவர்த்தியின் தலையுருவமும் மற்றொருபுறம் $1, \frac{3}{4}, \frac{1}{2}, \frac{1}{4}$ என்ற பெறுமானமும் தோன்றச் செய்து, அழகிய விளிம்பமைத்து, பிறர் கத்தரித்தும் தேய்த்தும் ஏமாற்றாமலிருக்கும்படி நாணயங்களை வெளியிட்டு வருகின்றனர்.

சில நாடுகளில் துரைத்தனத்தார் மக்கள் கொண்டுவந்து கொடுக்கும் பொன்னையெல்லாம் சிறிதளவு கூலியும் பெறாமல் நாணயங்களாகச் செய்து அவர்களிடமே திருப்பிக் கொடுத்து விடுகின்றனர். சில நாடுகளில் நாணயங்களை அவ்வாறு பொறிப்பமைத்துக் கொடுப்பதற்காக அரசியலார் சிறிதளவு கட்டணம் வாங்கிக்கொள்வதும் உண்டு. நம் நாட்டில் இவை எவையும் நடைபெறுவதில்லை. துரைத்தனத்தாரே வேண்டும் அளவு நாணயங்களை வெளியிடுகின்றனர். இவை இந்திய அரசாங்கத்தார் மதிப்பையே பெற்றுள்ளன.

**நாணயங்களின் பகுதிகள்:**—கால் அணு, அரை அணு, ஒரு அணு, இரண்டணு, கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் ஆகியவைகளைக் குறிக்க நாணயங்கள் முத்திரிக்கப் படுகின்றன. இவைகளுள் காசே நம் நாட்டு ஆதார நாணயமாகக் கருதப்படுவது. பொற் காசுகள் உலகெங்கும் செல்லுபடியாகும்; காரணம், அவற்றின் விலை உண்மையில் தங்கத்தின் மதிப்பி லிருந்து மிகுதியும் குறையாதிருப்பதே யாகும். அம் மதிப்பீட்டில் தனி மனிதர் அளவிலோ மாற்றிலோ ஏமாற்ருமலிருக்கக் காவலாக அரசியலார் பொறிப்பு இடுகின்றனர். பிற நாணயங்களெல்லாம் காசினது சிறு சிறு பாகங்களைக் குறிக்கும் குறிப்பு நாணயங் களே.

**குறிப்பு நாணயங்கள்:**—குறிப்பு நாணயங்கள் எடையால் மதிப்பைப்பெரு. அவற்றிற் **பொறிக்கப் பட்ட** தொகையின் மதிப்பையே பெறுவன. ஒரு ரூபாயில், ரூபா எடை வெள்ளியிராது. வெள்ளி ரூபாயொன்றில் 180 தானியமணி எடை அல்லது 165 தானியமணி எடையும் பிற உலோகக் கலப்பும் உள்ளன. அணு நிக்கல் நாணயத்தில் நிக்கல் ஓரணு விலை பெறுமானமுள்ளதன்று. அதன்மேல் ஓரணு என அரசியலார் முத்திரித்திருப்பதாலேயே அதற்கு அப்பெறுமானம் உண்டு. இப்படிப்பட் டனவே குறிப்பு நாணயங்களாம்.

ரூபாய், குறிப்பு நாணயமா யிருப்பினும் அதற் குத் தனி மதிப்புண்டு. சட்டப்படி ஓரளவு சிறு தொகைக்கு மேல் எந்தக் கடனையும் செப்பு நாண யங்களாகக் கொடுக்க நமக்கு உரிமை இல்லை. நாம்

ரூபாயாகக் கொடாமல் செப்பு நாணயங்களாகக் கொடுத்தால் கடன் கொடுத்தவன் அதனைப் பெற மறுத்து ரூபாயாகக் கொடுக்க வற்புறுத்தலாம். எவ்வளவு பெருந் தொகையாயினும் ஒரு பவுனும் இல்லாமல் வெள்ளி ரூபாயாகவே கொடுத்துக் கடனைத் தீர்க்கலாமெனச் சட்டம் கூறுகிறது. ரூபாய், குறிப்பு நாணயமெனினும் தனிமதிப்புடைய நாணயம் என்பது இதனால் விளங்கும்.

**குறிப்பு நாணயங்களை அழிப்பது தீமை**:—இக் குறிப்பு நாணயங்களை மனிதன் தனக்கும் பெண்மையுலகிற்கும் பூண்களாகவோ பாத்திரமாகவோ அழித்துச் செய்வதால் இலாபம் சிறிதுமில்லை. ரூபாய் கொடுத்து பொன் வெள்ளிக் கட்டிகளை வாங்கி நகையோ பாத்திரமோ செய்யலாம். உண்ணவுணவும் உடுக்கவுடையும் இல்லாமல் அல்லற்படும் இந்நாளிலும் **பொன்னின் விலையும் நாணய மதிப்பும் சமமா யிருப்பதால்** எத்தனைக் காசுகள் வெளி வந்தாலும் அவ்வளவும் நகைப் பயித்தியங்களாகிய நம்மவரால் அழிக்கப்படுகின்றன. அளவற்ற காசுகளை உருக்கி எல்லையற்ற **பூண்களைச்** செய்வது நஷ்டமான செயலே. தங்கத்தின் பயனெல்லாம் இன்ப வாழ்விலும், வாழ்க்கையின் உயர்தர நிறைவுகளிலுமே உள்ளன. நகைகள் செய்யச் செலவிடும் பணத்தைப் புதைபணம் (Hidden Weatlh) எனப் பொருளியலார் கூறுவர். இந்தச் செல்வம் வளர்வதில்லை. புதைத்துவைத்த பணத்தைப் போலப் பயனற்றுப் போகிறது. இதைத் தபாலாபீஸ் பாது

காப்பு நிதியிலோ வேறு சேம நிதிகளிலோ கட்டி வைத்தால் வட்டி கிடைக்கும்; பணமும் பெருகும்.

**விலை மதிப்புத்தாள் அல்லது நாணயச் சீட்டு:**—நாகரிகம் மிகுந்த இக்காலத்திலும் பொன் வெள்ளி நாணயங்களை இடம்விட்டு வேறிடம் அனுப்புவது துன்பமாயிருப்பதால், சேமநிதியாளராலும் துரைத் தனத்தாராலும் வெளியிடப் பெறும் நாணயச் சீட்டுக்களே வாணிப முறையில் நாணயம்போல் வழங்குகின்றன. இந்த மதிப்புத்தாள் நாணயங்கள் உலோக நாணயங்களுக்கு உதவியாயுள்ளன.

நாணயச் சீட்டென்பது, 'இதனைக் கொண்டு வருபவரிடம் இதிற் குறித்த தொகையைக் கேட்ட உடனே கொடுப்போம்' என்று எழுதிய துரைத் தனத்தாரது வாக்குறுதியோடு பொறுப்பு ஏற்று வரும் தாள் துண்டேயாகும். அரசியலார் பொறிப்பு வாயிலாக மதிப்புப் பெற்றுள்ள இந் நாணயச் சீட்டை எவரிடம் கொடுத்தாலும் அவர் தவறாமல் உடனே அதிற் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க முன்வருவர். உண்மையில் இந்நாணயச் சீட்டு அரசாங்கத்தின் உறுதி மொழியே எனலாம்.

**நாணயச் சீட்டின் நன்மைகள்:**—நாணயச் சீட்டால் நன்மை பல உண்டு; நாணயச் சீட்டுக்கள் வழங்குவதால் உலோக நாணயங்கள் மிச்சமாகும். மிஞ்சும் இந் நாணயங்களை வாணிபம் கைத்தொழில் வளர்ச்சிகளுக்குப் பயன்படுத்தலாம். எவருக்கேனும் பணம் கொடுக்க வேண்டியிருந்தால் நாணயச் சீட்டுக்களை எளிதில் ஆயிரக் கணக்கில் எண்ணிக் கொடுக்கலாம். நாணயச் சீட்டுக்கள் கனமாயிரா. சட்டைப்பையுள்

வைத்தாலும் அவை இருக்குமிடம் தெரியா. அள வற்ற நாணயச் சீட்டுக்களை ஓரிடத்திலிருந்து பிறி தோரிடத்துக்கு எடுத்துச் செல்லலாம்; அல்லது குறைந்த செலவில் அனுப்பலாம். மதிப்புத்தாள் கள் தோறும் எண்கள் குறிக்கப்பட்டிருப்பதால் ஒருநாணயம் திருடுபோனாலும் அதை எளிதிற் கண்டுபிடித்து விடலாம்; ஆனால் மதிப்புத்தாள் களின் எண்களைச் சரியாகக் குறிப்புப் புத்தகத்திற் பதிவு செய்துவைத்தல் நலம். இதை அச்சிடுவதில் நாணயங்களுக்குச் செலவிடுதல் போல் அதிகச் செல வும் உழைப்பும் துரைத்தத்தாரும் கொள்ள வேண்டு வதில்லை. இவ்வளவு நன்மைகள் இருப்பதனால் உலகமெங்கும் மக்கள் நாணயச் சீட்டுக்களையே வழங்கி வருகின்றனர்.

**நாணயச் சீட்டின் வெளியீடு:**—நம் நாட்டில் ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து, நூறு ரூபாய் நாணயச் சீட்டுக் கள் உண்டு. இந்த சீட்டுக்களெல்லாம் துரைத்தனத் தார் உத்தரவு பெற்ற ரிஸர்வ் பாங்கால் வெளியிடப் பெறுகின்றன. இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பொறுப்புள்ள சேமநிதிகளே நாணயச் சீட்டுக்களை வெளியிடும் உரிமை பெற்றுள்ளன.

**நாணயச் சீட்டு வெளியீட்டில் அளவுண்டு:**—எந்த அரசியலாரும் தாள் நாணயங்களை அளவின்றி வெளியிட்டால் தீங்குவிளையுமென்பதில்ஐயமேயில்லை. ஆகையால் அரசியலார் எவ்வளவு தொகைக்குத் தாள் நாணயங்களை வெளியிடுகின்றனரோ அத் தொகையிற் பாதி உலோக நாணயங்களாகப்

பொக்கிஷ சாலையில் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். உதாரணமாக 50,000 ரூபாய்களை உலோக நாணயங்களாக வைத்துக்கொண்டே லக்ஷ ரூபாய் தாள் நாணயங்களை வெளியிட முடியும். நூற்றுக்கு 50 விகிதம் உலோக நாணயங்கள் இருக்கவேண்டும் என்பது சட்டமாகும். இப்படியே இந்தியத் துரைத்தனத்தாரும் செய்து வருகின்றனர். பிற நாடுகளில் வெவ்வேறு வகை நிபந்தனைகளுண்டு.

இந்நிபந்தனைகளை அல்லாமல் அரசியலார் அளவு கடந்த தாள் நாணயங்களை வெளியிட்டால், குடிகள் அத் தாள்நாணயங்களுக்குப் பணம் பெற விரும்பிவந்து கேட்கும் பொழுது கொடுப்பதாக வாக்குறுதி செய்த தொகையைக் கொடுக்கமுடியாமல் திண்டாட நேரும். இதனால் அரசாங்கத்திடம் அவநம்பிக்கை தோன்றும்.

**உண்டியல்கள்**:—இவற்றின் மூலம் வியாபாரம் வியக்கத்தக்க முறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. நாணயச் சீட்டைப் போலவே இதுவும் வாக்குறுதித் தாளாகும். இந்தத்தாள் ஒருவர் மற்றொருவருக்கு ஒருசேமநிதி மூலமாகப் பணம் கொடுப்பதற்கு அளிக்கும் வாக்குறுதியாகும். பணம் கொடுப்பதாக வாக்களிப்போருக்குப் பணமுடையோர் கொடுக்கும்படி உத்தரவிட்டிருக்கும் சேமநிதியில் அவர் கணக்கில் அதற்கு வேண்டிய பொருள் இருக்கவேண்டும்; எனவே, இம்முறை வளர்ச்சி பெற வேண்டுமானால் வியாபார நன்னடத்தையும், நாணயமும் இருத்தல் இன்றியமையாததாம். இன்றும்

பெரும் வியாபாரக் கம்பனியார் இம்முறையைப் பெரிதும் விரும்பிப் போற்றி வருகின்றனர். மேனாட்டில் பொது மக்களும் தாம் வாங்கும் பொருள்களுக்கு உண்டியல்களைக் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. இதனால் கடைக்குச் செல்லுவோர் பணம் கொண்டு போக வேண்டுவதில்லை. வியாபாரிகளுக்கும் சில்லரை கொடுக்கும் துன்பம் நேருவதில்லை. பணத்தை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு அனுப்பச் சேம நிதிகளில் உண்டியல்கள் கொடுக்கப்படுகின்றன. இவற்றால் பெரும் தொகைகள் ஓரிடமிருந்து மற்றோரிடம் எளிதாகக் குறைந்த செலவில் அனுப்பப்படுகின்றன. உதாரணமாக நூறு ரூபாய் அனுப்புவதற்கு ஒரு சிறு தொகை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. பெருந்தொகைக்கு விகிதம் இன்னும் குறையும். இதே தொகையை போஸ்டாபீஸ் மூலம் அனுப்புவதற்கு அதிகச் செலவு நேரும். மேலும் வியாபார வளர்ச்சிக்குத் தவணையுண்டியலும், தரிசன உண்டியலும் இருக்கின்றன. இவற்றைப் பற்றிப் பின் விரிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

**போலி நாணயங்கள்** :—செம்பு வெள்ளி முதலிய நாணயங்களைப் போன்ற நாணயங்களைச் செய்து மோசம் செய்ய மக்களுக்கு விருப்பமுண்டாவதில்லை; ஏனென்றால் உழைப்புக்கேற்ற பயன் இவற்றால் கிடைப்பது அருமை. ரூபாய்களையும் தாள் நாணயங்களையும் செய்து மோசஞ் செய்யச் சிலர் விரும்புவர். பிறரெவரும் எளிதிற் செய்ய முடியாத விதமாகவே அரசியலார் தாள் நாணயங்களையும் வெள்ளி நாண

யங்களையும் வெளியிடுகின்றனர். போலி ரூபாய்களை ஓசையாலும் தோற்றத்தாலும் உணரலாம். போலித் தாள் நாணயங்களைச் செய்து வெளியிடுபவர்க்குக் கடுந்தண்டனையுண்டு; எவரிடமாவது போலிநாணயம் எப்படியோ தெரியாமல் வந்துவிடுமானால் அந் நாணயம் அவரிடத்திலேயே அடங்கிப் போகவேண்டும். 'நாம் மோசம் போனோமே; பிறரை மோசம் செய்வோம்' என்று அவர் அயலாரை ஏமாற்றக் கூடாது. அப்படிச் செய்தால் அவர் தண்டனைக்கு உள்ளாவார். வேண்டுமானால் எவர் தம்மிடம் அந்தப் போலி நாணயத்தைக் கொடுத்து மோசஞ் செய்தாரோ அவரிடமிருந்தே மோசஞ் செய்யப்பட்ட பணத்தைப் பெற வழிதேடலாம்.

முடிவுரை :—நாகரிகத்தின் வரலாறும், மனிதன் இயற்கையுடன் பழகி, பயனும் வெற்றியும் பெற்றுவரும் வரலாறும் மேனாட்டு அறிஞரும் ஆராய்ந்திருப்பனவே; ஆகவே பொருளாதார வளர்ச்சிக்குப் பணமும், அதன் தொடர்பான சேம நிதிகளும், அவற்றின் சிறப்பியல்புகளும் கருவிகளாகக் காணப்பட்டன. மனிதனுக்குத் தன்னை ஆளுபவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், தன் வாழ்க்கையின்பத்துக்கு வேண்டிய பொருளும், ஊழியரைத் தேடிக்கொள்ளும் உரிமையும், தன் அறிவுக்கும் சக்திக்கும் ஏற்ப இவற்றின்மூலம் பெறும் உரிமையும்மிகவும் அவசியமானவையே. கையிலுள்ள கத்தியினால் எதனையும் தம் வயப்படுத்தலாம்; அல்லது தம் உயிரையே மாய்த்துக் கொள்ளலாம். அப்படியே மனித சமூகம் இச் சிறந்த கருவிகளிலுள்ள பல குறை

பாடுகளை நீக்கி மக்களுக்குப் பயன்படுமாறு செய்தால் செல்வம் பெருகும். பெரியோர் உறுதிப் பொருள்களாக வகுத்த நான்கினுள் ஒன்றாகிய பொருள் பெற்று வாழ்க்கையின்பம் எய்துதல் எளிதென்பதில் ஐயமில்லை.

## வினாக்கள்

1. செல்வத்தின் சிறப்புக்கள், எவ்வெவ்வாறு கூறப்பட்டுள்ளன?
2. செல்வம் என்பது எது?
3. பண்ட மாற்று, தோன்றிய வரலாற்றைச் சுருக்கி எழுதுக.
4. பண்டமாற்றில் உள்ள துன்பங்கள் எவை?
5. நாணயங்கள் தோன்றக் காரணம் என்ன?
6. உலோகங்கள் நாணயங்களாக வழக்கில் வந்தது ஏன்?
7. உயர்ந்த நாணயத்தின் இயல்பு யாது.
8. நாணயங்களின் வடிவமைப்பு எத்தகையது?
9. துரைத்தனத்தார் நாணயங்களை எவ்வாறு வெளியிடுகின்றனர்.
10. நாணயங்களின் பகுதிகள் எவை.
11. குறிப்பு நாணய மென்பது யாது?
12. குறிப்பு நாணயங்களை அழிப்பதால் உண்டாகும் தீமை என்ன?
13. நாணயச் சீட்டென்பது எது; அதனால் உண்டாகும் நன்மை என்ன?
14. உண்டியலாவது யாது?
15. போலி நாணயம் என்பது எது?

## 3. பாலைவனம்

பாலைவனம் என்றால் என்ன? மக்களற்ற,—சாகுபடி செய்ய இயலாத மணல் நிரம்பிய இடம் என்றும், அங்கும் இங்குமாக ஓரிரண்டு பசும்புல் பூண்டுகள் முளைத்திருக்கும் இடமென்றும் நினைப்பது இயல்பு; ஆனால் உண்மை யப்படி யன்று; உதாரணமாகச் சகாரா பாலைவனத்தை யெடுத்துக் கொள்வோம்:

அது, மண், மண்மேடு, கனிவர்க்கத் தோட்டங்கள், கோதுமைப் பயிர் விளையும் நிலம், பெருமலைகள், பேரீச்சம் பழங்கள் நிறைந்த (ஒயஸிஸ்) பாலைவனச்சோலை முதலியவை கொண்ட இடம். அங்கு உலகத்தின் வியப்புக்குரிய மக்கள் வாழ்கின்றனர். கொதிக்கும் மண்ணிலும், தாங்க முடியாத வெப்பத்திலும், கடுங்காற்றிலும், மனிதர் வாழமுடியுமா என்ற நினைவைத் தோற்றுவிக்கும் அவ்விடத்தில் எவ்விதமோ ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சில மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

உலகத்தில் இரண்டாவதாக மதிக்கப்படுவது கோபி பாலை வனமாகும். இது பயனற்ற மண் பரந்த இடமன்று; ஆயிரக்கணக்கான ஏகர்களில் புல் வளர்கிறது. தண்ணீர் வழிகளும் அழகிய காடுகளும் நிரம்பிய இவ்விடத்தை எவ்விதம் பாலை என்று கூறலாம்? மூன்றாவது பாலை, கலகாரி என வழங்கும்.

இப்பாலைவனம் நிரம்பிய இடம், உலகத்தின் நிலப்பரப்பில் பத்தில் ஒருபங்காகும். துருவமுனையில் உள்ள குளிர்பாலை வனத்தில், மக்கள் என்றும் வாழ்ந்ததில்லை; ஆனல் வெப்ப மிகுந்த பாலையில் சரித்திர காலத்திற்குள் செழுமையும் வனப்பும் கொண்ட இடத்தில் முன்னேற்றமடைந்த நாகரிக மக்கள் பலர் வாழ்ந்து வந்தனர்.

முற்காலத்தில் சகாரா, பரந்த புல்தரை நிரம்பியதாக இருந்தது. கோபி பாலையிலும் இப்பொழுது உள்ளதைக் காட்டிலும் பெருமை வாய்ந்த மக்கள் முன்பு வாழ்ந்து வந்தன ரென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன.

**பாலைவனம் உண்டாவது எதனல்?** மழையே பெய்யாததனல் பாலை தோன்றுவதில்லை. உலகிற் சிறிதும் மழை பெய்யாத இடமே இல்லை. பெரு தேசத்தின் தெற்கே இருக்கும் பாலைவனமே உலகத்துள் மிகவும் வறண்ட இடமாகும். அங்குச் சில சமயங்களில் ஒரு மழைபெய்து மறுமுறை பெய்ய ஏழீராண்டுகள் செல்லுகின்றனவாம்.

பாலை வனத்துள் ஓரிரண்டிடங்களில் மழை கொட்டுகிறது; பரந்து பெய்வதில்லை. சில பாலை வனங்களில் மணலும் சுண்ணும்பும் மிகுந்த கண்கள் உள்ள நிலம் இருப்பதால் மழை நீர் பூமியின் கீழ்ச் சென்று ஊறிவிடுகிறது. பூமியின் மேற்பாகம் எப்பொழுதும் வறண்டே காணப்படும். சூரிய வெப்பம், வறண்ட இந் நிலத்தில் படுகிறது. தாவர வர்க்கங்கள் இவ்வெப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள முடிவதில்லை; அதனல் சூரிய வெப்பம்

காற்றை உஷ்ணப்படுத்தி உலகிற்கு வேண்டிய மழைக் காற்றைத் தோற்றுவிக்கிறது; ஆகவே உலகில் வளமுள்ள நிலம் இருப்பது பாலை வனங் களாலேதான்.

உலகத்தில் பாலைவன விஸ்தீரணம் பெருகி வரு கிறது. ஒருநூற்றாண்டுக்கு முன் வளமுள்ள சிறந்த நிலப்பகுதிகளாக இருந்தவை இன்று எதற்கும் பயன்படா வெறும் நிலமாக மாறிக் கிடக்கின்றன. பூதத்துவக்கலைஞர் சில நூற்றாண்டுகளுக்குள் இவ் வுலகம் முற்றும் ஒரே பாலைவனமாக மாறிவிடக் கூடுமென்று கருதுகின்றனர். இங்ஙனம் ஏற்படு வதற்கு மனிதனே பொறுப்பாளியாவான்; ஏனெ னில் அவனே பாலைவனத்தை உண்டாக்குகிறான். பூமிக்குள் ஊறிப்போகும் நீரைக்காட்டிலும் பூமியி லிருந்து அதிக நீரை எடுப்பதால் பாலைவனம் தோன்றி விடுகிறது. இங்ஙனம் தோன்றும் பாலை நிலங்கள் உலகம் முழுதும் பரவிக் கிடக்கின்றன. சீனாவில் காடுகளை அழித்தமையால் இன்று பல இடங்களில் பயனற்ற நிலங்கள் தோன்றியுள்ளன. இப்படிக் காட்டழிவால் நிலத்தில் உள்ள ஈரம் மாறி உலர்ந்து விடுகிறது. துருக்கியர் தாவரச் செழிப் பைக் கவனியாமையால், ஒருகாலத்தில் பாலும் தேனும் வழிந்தோடிய இடங்களான இராக், சிரியா, பாலஸ்தீனம் போன்ற நாடுகள் வறண்ட பூமியாக மாறிவிட்டன.

மக்களால் தோன்றிய பாலைவனங்கள் இன்று அமெரிக்காவில் பலவாக உள்ளன. பத்தொன்ப தாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் மக்கள் குடி-

யேறத் தொடங்கினர். இப்படிக் குடியேறும் போது பரந்த காடுகளை அழித்துச் சிறு சிறு நிலங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இதனால் நேரக் கூடிய விளைவுகளை அவர்கள் அப்பொழுது சிந்திக்கவே இல்லை; தெரிந்துகொள்ளவும் முயன்றிலர். பல்லாண்டுகள், எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்று வந்தன. மண்ணில் தோன்றிவரும் வறட்சியை எவரும் கவனித்திலர். சில காலம் பெரும் பயனைப் பெற்று மகிழ்ந்தனர். ஆனால் படிப்படியாகக் கடுங் குளிர் காற்றும், பொரிந்து தள்ளும் கோடை வெயிலும் தத்தம் உண்மை வடிவைத் தெரிவிக்கத் தொடங்கின. நிலத்தில் நீரூற்று குறையத் தொடங்கியது. ஒரு நூற்றாண்டிற்குள் சுமார் இருபதடி ஆழம் வரையில் நீர் குறைந்து விட மேல் பூமி கடினமாயிற்று.

காடுகளை இப்படி யழித்ததன் பயன், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் நன்கு புலப்படலாயிற்று. இப்படிச் செய்வதனால் நேர்ந்த தீமையைக் கண்டு துரைத்தனத்தார், காடுகளை அழிக்காவண்ணம் கடுமையாக நடவடிக்கை எடுக்கலாயினர். ஆயிரமைல் தூரம் நூறுமைல் அகலம் கொண்ட நிலப்பரப்பில் பல மரங்களை வளர்த்தனர். பேரணைகளைக் கட்டி, பாலை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்தனர். இப்படி மக்கள் தம் முயற்சியாலும் உறுதியாலும் இவ்வுலகம் பாலைவனமாவதைத் தடுக்க முடியுமென மெய்ப்பித்தனர்.

இப்பொழுதுள்ள பாலைவனங்களுள் மிகக் குறைந்த அளவில் மழைபெய்யும் இடங்களும் உள்

ளன. இவை பெரும்பாலும் பாலைவனங்களை அடுத்திருப்பன. இவ்விடங்கள் பாலையாக மாறக் கூடும். இந்த நிலப்பகுதியை, கிட்டத்தட்ட பாலை என்றே கூறலாம். மரங்களே இல்லாத களர் நிலம்; சிறிதளவு மழைபெய்யும் இவ்விடங்கள், உலகத்தின் முழுப் பரப்பில் சுமார் நான்கில் ஒரு பாகத்திற்கு மேல் இருப்பதை நினைத்தால் நாம் நிச்சயமாக அஞ்ச நேரும். வருடத்தில் சிலநாள் பசும்புல் தலை நீட்டி னும் பிறசமயங்களில் வறண்டே கிடக்கிறது. இப்படி நிலம் ஈரப்பசையற்றுப் போவது, படிப்படி யாக நடைபெறுவதால் அது நமக்கு எளிதிற் புல னாவதில்லை. ஒரு வருடத்தைக் காட்டிலும் மறுவரு டம் மழையளவு குறைந்து விடுகிறது. ஆறுகளும் ஏரிகளும் குறைந்த அளவு நீரைப் பெறுகின்றன. நீர்நிலைகளைத் தோண்டினால் பூமியில் மிக ஆழத்தி லேயே தண்ணீரைக் காணமுடியும். இப்படி திடீ ரென்று இந் நிலை வருகிறது. தாக்குண்ட நிலப் பகுதி, தட்ப வெப்பநிலைகளிலும், செழுமையிலும் மாறி எங்கும் வறட்சி தோன்றுகிறது.

பாலை, மக்கள் வாழ்வுக்கு ஏற்ப அமைவதில்லை. அவர்கள் ஆக்கத்திற்கு ஊக்கமளிப்பதாகவும் இல்லை; ஆயினும் அங்குச் சுரங்கப்பொருள்கள் பல கிடைக்கலாம். ஆனால் உழவர்க்கு வேண்டுமளவு நீர் கிடைப்பதில்லை. நைல்நதியும் யூப்ரடீஸ் நதியும், பாலையாக இருக்கக்கூடிய நிலப்பகுதிகளை உழவர் நிறைந்த மருத நிலமாக மாற்றிவிட்டன.

பாலைநிலத்தில் வாழும் மக்களுட் பெரும் பாலோர் நாடோடிகள். ஆபத்தும், துன்பமும்

நிறைந்த வாழ்வையே அவர்கள் மேற்கொண்டிருத்தலால் உறுதியான உடலையும், போர்க்குணத்தையும், சுதந்திரத்தில் விருப்பத்தையும், ஓரிடத்தில் நிலைத்து வாழ்வதில் வெறுப்பையும் உடையராயிருக்கின்றனர். 'பாலைவனக் கப்பல்' என வழங்கும் ஒட்டகங்களையே இவர்கள் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர்.

தெற்கில் திபேத்தும், வடக்கில் சைபீரியாவும், மேற்கில் அட்லாக் மலையும் கிழக்கில் மஞ்சூரியாவும் கோபி பாலையைச் சூழ உள்ளன.

**கோபி பாலை**:—கோபி என்பதற்குப் 'பெரும் பாலை நிலம்' எனப் பொருள் கூறுவர். குறுக்கு நெடுக்குமாக 12,000 மைல்களும், வடக்குத் தெற்காக அறு நூறு மைல்களும் சில இடங்களில் கடல் மட்டத்திற்குமேல் 5000 அடி உயரம் கொண்டும் தனித்திருக்கும் இந்தப் பாலை நிலம் உலகிற் பாழடைந்த இடங்களில் ஒன்றாகும். கீழ்ப் பகுதியில் வெறும் மண்ணும் மண் மலைகளும் நிரம்பியுள்ளன. ஆனால் நடுப்பகுதியும் மேற்பகுதியும் புல், முட்புதர் முதலியவை விளைவனபோல் தோன்றும் மண்ணைக் கொண்டுள்ளன. இப்பாலையில் வாழ்பவர் மங்கோலியரே. எல்லாப் பாலையிலும் உள்ளது போலவே நீரில்லாக் குறையே பெருந் துன்பமாகும். கிழக்கில் கிணறுகளில் நீரைக் காணலாம்; அதுவும் உப்பு நீர். மேற்கில் வியவசாயத்திற்கு ஏற்றபடியும், ஆடுமாடுகளை வளர்ப்பதற்கு உகந்தபடியும் அமைந்த ஆறுகளும் ஏரிகள் பலவும் உள்ளன.

இப் பாலை நிலத்தில் ஒட்டகமே சிறந்த விலங்கு; ஆயினும் உலகத்திலேயே பெரிய விலங்கு இங்

குத்தான் இருந்ததாம்; நூறு மிலியன் ஆண்டுகட்கு முன் (சரித்திரக் காலத்திற்குமுன்) வாழ்ந்த டினஸர் என்ற விலங்கு இங்கே இருந்ததாக அறிஞர் கூறு கின்றனர். டினஸர் இட்ட முட்டைகள் அழுகிப் போய்க் கிடந்தனவாம்; அக்காலத்தில் உலகில் பனியோ குளிரோ இல்லையாம்; வெப்பந்தான் எங்கும். பின் தோன்றிய குளிர்காலத்தில் இந்த டினஸர் செத்து அழிந்ததாம்.

கோபிப் பாலையின் தென் எல்லைப்புறத்தில் ஒருபாகம், சீனவின் வியக்கத்தக்க பெருஞ்சுவர் ஆகும். வான நூலாராய்ச்சியாளர் கருத்துப்படி, சந்திரமண்டலத்திலிருந்து பார்த்தால் மனித சிருட்டியில் தோன்றிய பொருள்கள் இப்பூமியில் தெரிவதுள் சீனவின் இப்பெருமதிற் சுவரொன்றேயாம். இது மிகப் பெரியசுவர்; 1900 மைல்கள் உள்ளது; சரித்திரவுலகின் அதிசயப்பொருள்களில் இது ஒன்றாகும். ஈஜிப்டில் உள்ள பிரமிட்டுக்களைத் தவிர இச்சுவர் ஒன்றுதான் நிலைத்திருப்பது; மற்றவை அழிந்தொழிந்தன. பாபிலோனில் இருந்ததாகக் கூறப்படும் தொங்கு தோட்டங்கள் இப்பொழுது காணப்படுவதில்லை. ஈப்ஸிஸில் இருந்த டயானவின் கோயிலில் ஒருசில தூண்களே இப்போது மிச்சமாக உள்ளன. பிடியாஸில் இருந்த ஜூபிடர் ஒலம்பஸ் இருந்த சுவடே தெரியவில்லை. அழகிய பெரிய வெண்கலச்சிலை,—கொலாஸ்ஸ் சிலை—பூகம்பத்தால் வீழ்ந்து விட்டது. சிதறிய வெண்கலத் துண்டுகளைப் பலர் திருடிப்போயினரென்பர்.

உலக அதிசயங்களுள் பிறவெல்லாம் மிகப் பெரிய கட்டடங்கள்; வியக்கத்தக்கபடி டாம்பிக மான வீண் பொருள்கள் அவை. ஆனால் சீனாவின் பெருஞ்சுவர் பயனுள்ளதாகவே அமைந்தது. வில் அம்புகளால் போராற்றிய காலத்தில் இச்சுவர், வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் பகைவர் படை யெடுப்பதைத் தடுத்து நின்றது. துரதிஷ்ட வச மாக இச்சுவரைக் கட்டிமுடித்த அரசன் இதனால் உண்டான புகழைப் பெறும் பேறு பெற்றிலன். அவன் செய்த சிறுபிழைக்குச் சீனர் இட்ட தண் டனை இதுவே. இம்மூடமன்னன் முதல் சக்கரவர்த்தி என்ற பெயரைத் தானே சூட்டிக் கொண்டான். இதற்காக ஐந்நூறு பண்டிதர் அவனைக் கோபித் துக் கொண்டனராம். இதன்பொருட்டு அவ்வர சன் அப்பண்டிதரையும் பழைய நூல்களையும் நெருப்பிலிட்டானாம். சீனருக்கு, பழைமை போற்று தலில் விருப்பம் அதிகம். அதற்கு மாறாக அரசன் செயல் அவர்களைக் கலக்கி விட்டதாம்.

சீனப் பெருஞ்சுவர், பகைவர் படையெடுப்பைத் தடுப்பதற்காகக் கட்டப்பட்டது; இது, சீனரின் பொறுமைக்கும் விடாமுயற்சிக்கும் உதாரணமாகும். பாலைவனமும் பெருஞ்சுவரும் ஒன்றற்கொன்று எல்லா வகையிலும் பிணைக்கப்பட்டிருத்தலால் பூகோள முறையிலும் தேசரீதியிலும் அச்சுவரின் பெருஞ்சிறப்பு விளங்கும்.

கிறிஸ்து பிறப்பதற்கு 219 வருடங்களுக்கு முன், சீனாவில் ஷின்ஷி ஹுவாங் டி என்ற அரசன் ஆண்டுவந்தான். ஹூணரின் நாசப்படையெடுப்பு

சீனாவிலும் பரவத்தொடங்கிற்று. அவர்கள் உபத்திரவத்தினின்றும் விடுதலை பெறவே இவ்வரசன் தன் நாட்டின் வடக்கே நீண்டதொரு பெருஞ்சுவர் எழுப்ப உறுதிகொண்டான். நேருக்கு நேராக நடக்கும் போர்களில் ஹூணர்களைத் துரத்தியடிக்க முடியாமையால் இவ்வழியில் நாட்டையும் குடிகளையும் காக்கும் துறையை மேற்கொண்டான். பிறரெவரும் இங்ஙனம் செய்யத்துணியார்; ஆனால் இவ்வரசனோ 'தான் யாது செய்யவேண்டும்; அதை எப்படி முடிக்கலாம்' என்பதை நன்கு உணர்ந்தவன். வரலாற்றின்படி, அவன் தேச படமொன்றை எடுத்து மஞ்சட்கடலில் இருக்கும் ஷான் ஹாய் க்வானிலிருந்து நேராக ஒரு கோடு சைனா துருக்கிஸ்தான் வரையில் இழுத்து 'இவ்விதம் ஒரு பெருஞ்சுவர் கட்டப்படவேண்டும்' என்றான். இவ்வுத்தரவு பிறந்தவுடனே சுவரைக் கட்டிமுடிக்க வேண்டிய வழிகள் கோலப்பட்டன. உயர்ந்த மலைகளையும் தாழ்ந்த பள்ளத்தாக்குக்களையும் கடந்து வறண்ட கோபி பாலைவனம் தொட்டு, பிற இயற்கை இடையூறுகளையும் தாண்டிச்செல்ல நேர்ந்தது; ஆனால், ஷின்ஷி ஹூவாங் ஒரு சிறிதும் யோசிக்கவே இல்லை. இரண்டரை லட்சம் தொழிலாளரை இதற்கென நியமித்தான். போரிற் பிடித்து வந்த கைதிகளையும் சிறைச்சாலையில் உள்ள பிறரையும், சீனாவில் பல பகுதிகளிலிருந்த மக்களையும் வேலைக்கு வைத்துக் கொண்டான். பிரிவு பிரிவுகளாக வகுத்துக் கொண்டு இடையிடையே தொழிலாளரை அமர்த்திப் பெருஞ்சுவரைக் கட்டத் தொடங்கினான். அளவு அற்ற தொழிலாளர்க்கு வேண்டிய உணவையும்

உடைகளையும் கருவிகளையும் திரட்டி, இரண்டாயிரம் மைல் அளவில் அங்கங்கே நிறுவியிருக்கும் டிபோக்களுக்கு அனுப்பிவந்தான்.

சுவரைக் கட்டுவதற்காக உழைத்த தொழிலாளருக்கு வேண்டிய சாமான்களைக் கொடுப்பதற்காக அரசன் நியமித்த வேலைக்காரரின் தொகை மிகுதியாய்த்தான் இருந்திருக்கும். சீனரிடையே வழங்கும் பழங்கதைகளின்படி 50 வண்டிகளுக்கு ஒரு வண்டியே குறித்த இடம் போய்ச் சேர்ந்ததாகத் தெரிகிறது.

எங்கெங்கு நிலம் இருந்தனவோ அவையெல்லாம் நன்கு பயன் படுத்தப் பட்டன. விதைகள் விதைக்கப்பட்டன. காலாகாலத்தில் அறுவடை செய்து தொழிலாளர் தத்தமக்கு வேண்டுவனவற்றைத் தாமே பயிரிட்டுக் கொண்டனர். இச்சுவழி நிலத்தைப் பயிரிட உதவியாயிருந்தது. கோபி பாலைவனத்தின் சில பகுதிகள் மீட்கப்பட்டன. இதனால் சீனரின் தூரதிருஷ்டியும் பொறுமையும் நன்கு புலனாகின்றன. தங்களுக்கு இடையூறாக இருந்த தடைகளையும் கவனியாமல் எடுத்த காரியத்தில் வெற்றிபெற முடிந்தது. இப் பெருஞ்சுவரைக் கட்டி முடிக்க 15 ஆண்டுகளாயினவாம். இதற்கு ஈடாகச் சரித்திரத்தில் எதையும் ஆச்சரியமுடையதாகக் கூற முடியாது. செங்கல்லும், கருங்கல்லும் சுண்ணம்பும் மக்களுழைப்பும் இதனளவு வேறு எவற்றிலும் செலவான தில்லையாம்.

அவ்வப் பொழுது இச்சுவர் பழுது பார்க்கப் பட்டு வந்தது. 20 நூற்றாண்டுகள் கழிந்த பின்னும்

வியக்கத்தக்க முறையில் (முக்கியமாகக் கோபியின் எல்லை) அது காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. நெடுந்தூரம் வரையில் சுவரின்மேல் ஒரு வண்டியைச் செலுத்த முடியுமாம். கோபியருகில் சிற்சில இடங்களிற் சேர்ந்தாற்போல் இரண்டு வண்டிகள் கூட ஓட்டிப்போவதுண்டாம். அச்சுவரின் நீளத்தில் 18,000 கோபுரங்கள் உள்ளனவாம். கோபுரம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறு கோட்டைகளாகும்; ஒவ்வொன்றிலும் ஆகாசதீபம் ஒவ்வொன்று ஏற்றப்பட்டிருந்தனவாம். ஏதாவது ஒரு பகுதியில் சண்டை நேர்ந்தால் பிற இடங்களிலிருந்து படை வீரரையும் போர்க்கருவிகளையும் உணவுப் பண்டங்களையும் அனுப்புவது இவற்றால் எளிதாயிற்றாம்.

கோபி பகுதியில் உள்ள பெருஞ் சுவரை மட்டில் கவனிப்போம்; ஷான் - ஹாய்-க்வானில் (கடலையடுத்து) நீரோரத்தில் தொடங்கும் சுவரானது சமவெளியைவிட்டு 300 மைல் தூரம் மலையை நோக்கி 5000 அடி உயரம் வரை செல்லுகிறது. அங்கிருந்து பார்ப்பதற்கு இயற்கைக்காட்சி மிக்க அழகாக இருக்கிறதாம்; ஆயினும், உயிர்வாழும் அறிகுறி எவையும் நெடுந்தூரம் வரையிலும் இல்லை. அங்கும் இங்கும் அருகி வாழும் சில பறவைகளின் அழகும் நிச்சப்தமுமே நிலவி இருக்கும். அச்சுவரின் கீர்த்தியிற் சிறிது சிறிதாகக் குறைவு நேர்ந்தாலும் சீனரின் விவேகத்திற்கும் ஊக்கத்திற்கும், உயர்ந்ததும் ஒப்பற்றதுமானதொரு ஞாபகச்சின்னமாக அது விளங்குகிறது.

**மங்கோலியர்:**—மங்கோலியர் என்ற பெயரைக் கேட்ட வுடனே நாம் பாலே வனத்தையே நினைத்துக் கொள்ளுகிறோம். இப்பாலேவனத்திலிருந்து புறப் பட்ட குதிரைப்படையினர் பல நூற்றாண்டுகளுக்கு முன் செங்கிஸ்கான், குப்லாய்கான், தாமர்லேன் போன்ற தலைவரின் கீழ், சீனு முதல் மாஸ்கோவரை யிலும், சைபீரியா முதல் டில்லிவரையிலும் வெற்றி பெற்று ஆண்டனர். மங்கோலியா பயனற்ற பாலே வனமட்டு மன்று; காடுகளும் ஆறுகளும், ஏரி களும், வளப்ப மிகுந்த புல்தரையும் அங்கு உண்டு.

மங்கோலியாவில் வாழும் ஜனத்தொகையைக் கணக்கு எடுப்பது சிறிதளவு கஷ்டமான செயலே. சுமார் 40லட்சம் எனக் கணக்கிட்டிருக்கின்றனர். இந் நில மக்கள் ஒரே இடத்தில் நிலைத்து வாழ்பவரல்லர். அவர்கள் ஒருவகைக் கம்பளியால் நெய்யப்பட்ட ஆடை கொண்டு கூடாரம் அமைத்துக் கொள்கின்ற னர். உள்ளே வெப்பமும் பிற நலன்களும் அமைந் திருக்கும். புகை புறம்போக, கூடாரத்தின் உச்சி யின் நடுவில் ஒரு வழியுண்டு. இந்தக் கூடாரங்களுட் சில மிகப் பெரிதாக இருக்கும். ஒட்டகத்தின் சாணியை இவர்கள் எருமுட்டையாக்கி அடுப்பு எரிக்கின்றனர். அஃது எரியும் போது காரமான ஒருவித நாற்றம் வீசுகின்றது. தேநீர் நிரம் பிய ஒரு பாத்திரம் இருக்கும். மங்கோலியர்க்கு அது தெவிட்டாத பானமாகும். நாம் போடும் தேநீர்போல் அஃது இருப்பதில்லை; செங்கல் போல் இருக்கும், தேயிலையை ஒருவகைப் பசையாகச் செய்யவும், உறுதிப் படுத்தவும் ஒரு சாமானை உடன்

சேர்க்கின்றனர். அதன்பின் ஓரளவில் செங்கல் போன்ற உருவாக்கப்பட்ட இத்தேயிலைக் கட்டிகள் நாணயமாகவும் வழங்குகிறது. ஆறுகட்டிகளுக்கு ஓராடு விலையாகும்.

மங்கோலியர் எதையும் உண்பர். உலர்ந்த ஊன் கோபியில் சிறந்ததோ ருணவாகும். இதைக் குல தனமாகக் கருதுவர். இந்த ஊன் பல்லாண்டுகள் கெடாமல் இருக்கும். வந்த விருந்தினருக்குச் சிறந்த மரியாதையாக இந்த ஊனையே கொடுப்பர். ஆனால் அது பின்பு சொந்தக்காரரிடமே திரும்பக் கொடுக்கப்பட்டு விடும்.

ஒரு மங்கோலிய கூடாரத்துள் நுழைந்தவுடன் மூக்குப் பொடியை வழங்குவர். சில சிட்டிகைப் பொடி போட்ட பின்னரே சம்பாஷணை தொடங்கும். மங்கோலிய ரெவருமே பொடி டப்பி இல்லாமல் இரார். அழகிய பல நிறம் தீட்டப் பெற்ற பொடி டப்பிகளை மங்கோலிய மேன்மக்கள் வைத்திருப்பர்.

அளவின்றி உண்பதை விட வேறு எவ்வித தீய பழக்கங்களும் மங்கோலியரிடம் இல்லை யென்பர். பெண்குதிரைப் பாலைப் புளிக்கவைத்து, சில சமயம் அதைக் குடித்து விட்டு மயங்கிக் கிடப்பராம்.

அழுக்கு, அவர்கள் உடன்பிறப்பாகும். மிக்க அவசியம் நேர்ந்தாலன்றி மங்கோலியர் பிறந்தது முதல் இறக்கும் வரையில் உடல் குளிப்பதில்லை. ஒட்டக வெண்ணெயை உடலில் பூசிக்கொள்வர். அவர்கள் உடையைப்பற்றி விவரிப்பது சிறிது துன்

யந் தருவதாகும். சாதாரண பஞ்சாலோ பட்டாலோ கம்பளியால் கரை போடப்பட்டு முழந்தாள் வரை தொங்கும் இளகியதொரு கௌன் அவர்கள் ஆடையெனலாம். இடையைச் சுற்றி ஒரு அரைக்கச்சுக் (Belt) கட்டிக் கொண்டிருப்பர். கம்பளியாலான தொரு காற்சட்டையும் அணிவர். ஆண் பெண் இருபாலரும் இம்மாதிரியே உடுப்பணிவர். மகளிர்க்கு அரைக் கச்சு இல்லை. உண்மையில் 'அரைக் கச்சு இல்லாதவள்' என்பதே மங்கோலியப் பெண்களுககு ஒரு பெயராக வழங்குகிறது. அவர்கள் தொடுதோலுக்குள் கரண்டி தேயிலைக் கட்டிகள் முதலிய பல சாமான்களை வைத்திருப்பர்.

பிறநாட்டு மகளிரை யொப்பவே மங்கோலியப் பெண்டிரும் கூந்தலை வாரி முடிப்பர்; ஆனல் நாடோறுமன்று; எட்டு அல்லது பத்து வாரங்களுக்கு ஒருமுறையே. ஒருவகைப் பசையைத் தடவியே கூந்தலை வாருவர்.

நாமறிந்த வரையில் மக்களுக்குப் படிப்பு எதுவும் இல்லை. குதிரை யேற்றம், குத்துச் சண்டை, வேட்டையாடல், ஆடு மாடுகளை வளர்த்தல் முதலியவற்றுள் நன்கு பயில்கின்றனர். காடு, மலை, பாலை முதலியவற்றைக் கண்டு மகிழ்வதில் விருப்பங்காட்டுகின்றனர். விருந்தினர் வருகையை ஒரு சிறந்த நிகழ்ச்சியாகக் கருதுவர். அப்பொழுது மங்கோலியன் தன்னை யுயர்ந்தவனுக நினைத்துக் கொள்ளுகிருன். காலத்தைக் கழிப்பதற்கு அவர்கள்நற்றுணைவராவர். ஆனல் குடும்ப விவரங்களைப் பற்றி அவர்கள் கேள்வி கேட்கும்போது விடையளிப்பதில் நாம்

சங்கடப்பட நேரும். ஒளி மறைவு இல்லாதவர் அவர்கள். இதனால் பிறர் ரகசியங்கள் எல்லாவற்றையும் அறிய முயல்வதைக் குற்றமாகக் கருதுவதில்லை.

ஆடு குதிரை முதலியவற்றின் எண்ணிக்கையைக் கொண்டே பணமும் செல்வாக்கும் உள்ளவரென மதிப்பிடுவர்; ஆகவே, குதிரை திருடுபவர் இழிந்த குற்றவாளியாகக் கருதப்படுகின்றனர். பால், மாமிசம், பாலாடை முதலியனவே அவர்கள் உணவு. மூன்று அல்லது நால்வர், ஓராட்டை முழுமையாக அப்படியே பொரித்து உண்பர். குறித்த வேளையில் சாப்பிடார். எப்பொழுது பசியெடுக்கிறதோ அப்பொழுதே உண்பர். சாப்பாட்டுக்கு முன் தேநீர்க் கெட்டிலிலிருந்து இரு துளிகளை நெருப்பிற் சிந்துவர். தேநீரில் விரல்களைவிட்டு, சில துளிகளைத்தெளிப்பர், இவ்வாறு செய்வதை, கடவுளுக்குச் சாந்தியாகவும் தம்முடன் விருந்தினராகக் கலந்துகொள்ளக் கூப்பிடுவதாகவும் கருதுகின்றனர். உண்ட பிறகு தாலத்தை நாய் நக்குவதுபோல் நக்குகின்றனர்.

பெண்டிரே சமைக்கின்றனர். பால் கறப்பதும் வெண்ணெயெடுப்பதும், கணவரது தேவைகளைக் கவனிப்பதும் பெண்டிர் தொழிலாகும். புகையிலையால் ஹுக்கா பிடிப்பர்; சிறுவரும் அப்படியே. அபினியருந்துவது பொதுவாக இல்லை; ஆனால் கோபியில் அபினியுண்பது உண்டு. முடிந்த அளவு அவர்கள் நடப்பதே இல்லை. குதிரையோ ஒட்டகமோ இல்லாவிட்டால் எருதின்மேல் ஏறிச் சவாரி செய்வர். குதிரைப் பந்தையம் இங்கு ஊக்கத்துடன் நடைபெறு

கிறது. குதிரைச் சவாரியில் திறமைவாய்ந்த இம்மக்களே குதிரைப்படை தோன்றியதற்குக் காரணமாக இருக்கலாம். செங்கிஸ்கான், தாமர்லேன், குப்லாய் கான் முதலியோர் குதிரைப் படையையே மிகுதியாகக் கொண்டிருந்தனர். விரும்பிய பொழுது அவர்களே காலாட்படையினராக மாறிப் போர்புரிவர். இவர்கள் முன்னேற்றம் வியக்கத்தக்கது. பத்தே நாட்களில் ஆயிரக்கணக்கான மைல்களை எளிதில் இவர்கள் கடந்து போவர். இவர்கள் உலகையே ஒரு குலுக்குக் குலுங்கச் செய்தனர். பிற நாட்டார், மங்கோலியர் படையெடுத்து வர ஒன்று அல்லது ஒன்றரை மாதம் ஆகுமென நினைத்திருப்பர். அதற்கு மாருகத் திடீரென அவர்கள் படையெடுத்துவந்து நிற்பதைக்கண்டு மயங்கி நிற்பர்; அம்மயக்கம் திகிலாக மாறும். அந்நிலையில் மங்கோலியர் அந்நாட்டாரைத் தாக்கி வெற்றி பெற்று மேன்மேலும் முன்னேறிச் செல்வர். தங்கள் படைகள் எங்கு இருந்தாலும் மங்கோலிய அரசர் தலைநகரத்தோடு தொடர்புவைத்திருந்தனர். அஞ்சல் முறையில் மாறு குதிரைகளைக் கொண்டு ஒரே நாளில் 400 மைல்களை எளிதிற் கடந்து போவர். செங்கிஸ்கானுக்குப் புதிய மாமிசம் உண்பதில் விருப்பம் அதிகம். அவன் தன் தலைநகரிலிருந்து 900 மைல் தூரத்தில் உள்ள மஞ்சட் கடலில் பிடிக்கப்படும் மீன்கள், தன் சமையற்காரரிடம் இரண்டாம் நாளேவந்து சேரும்படி பனிக்கட்டியாலும் பசும் புல்லாலும் கட்டியனுப்பச் செய்திருந்தான்.

மங்கோலியர் மின்னல் வேகமாகச் சென்றதே அவர்களைக்கண்டு அயல்நாட்டினர் அஞ்சியதற்குக் காரணமாகும். எதற்கும் அஞ்சாத் தீரமும், முதுகு காட்டி ஓடாத வீரமும், முன்னோர் வீரப் பிரதாபங்களைப் போற்றுவதில் பெருமையும் அவர்களிடம் இருந்தன.

பதின் மூன்றும் நூற்றாண்டின் முதலில் உலக சரித்திரத்திலேயே நடந்ததாகக் கேட்டிராத ஒரு பெருஞ்சம்பவம் நிகழ்ந்தது; கோபியில் வாழ்ந்த நாடோடிகள், செங்கிஸ்கான் தலைமையில் பெருங் கீர்த்தி பெற்றனர். குதிரைப் படைகளுடன் ஆசியாவிலிருந்து தென் ஜர்மனிவரை, தம் ஆளுகைக்கு உட்படுத்தி 1227ஆல் செங்கிஸ்கான் உயிர் நீத்தான். அவன் எங்கு உயிர்விட்டான் என்பதை உறுதிப் படுத்தும் ஆதாரம் எதுவும் இல்லை; அவன் உடல், கோபி பாலைவனத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

போர் முறையில் சண்டமாருத வழிகளைக் கடைப்பிடித்தவன் செங்கிஸ்கான். பிறர் நினைக்க முடியாத வேகத்தில் தன் படையைச் செலுத்தினான். தன் போர்வீரரிடம் இரும்பைப் போன்ற மனவுறுதியை ஏற்படுத்தினான். போர் தொடங்குவதற்கு முன், தன் முழுக் கவனத்தையும் நேரத்தையும் படையைச் சேர்த்து ஒழுங்குபடுத்துவதிலேயே கழிப்பான். பகைவர் தத்தம் நாட்டுக்கு நேரப்போகும் ஆபத்தையறியாமல் உல்லாசமாக இருப்பர். நாளொன்றுக்கு இருபதுமணி நேரம் வேலைசெய்து மனிதரால் நினைக்கமுடியாத வேகத்

திற்சென்று எதிரிகளை முறியடிப்பான். மங்கோலிய சேனைவீரர் நன்கு போர்ப் பயிற்சி பெற்றவர். யுத்த தந்திரங்களில் கைதேர்ந்தவர். போர்செய்ய எந்த இடத்தில் முடியுமோ அவ்விடத்திலே அவர்கள் போரிடத்துணிவர். செங்கிஸ்கானைப் பொறுத்த வரையில் இவ்வழியையே மேற்கொண்டான்; அஃது யாதெனில், தன் சேனையும் பகைவர் படையும் முட்டி மோத நேர்ந்தால் தன் சேனைக்கு அதிக சௌகரியங்கள் இருக்கும்படி பார்த்துக்கொள்வதேயாகும். எந்த நாட்டின்மேல் படையெடுக்கக் கருதுகிறானோ, அந்த நாட்டைப்பற்றிய எல்லா விவரங்களையும் முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்வான். அந்தநாட்டின் நிலைமை, அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் முதலியவற்றைப்பற்றி ஒற்றர் அவ்வப்பொழுது அவனிடம் அறிவித்து வந்தனர். பகைவர்க்கோ செங்கிஸ்கானுடைய நோக்கங்களும் நடவடிக்கைகளும் சிறிதும் உணர முடியா. முன்னேறிவரும் படைவீரரைக்கண்ட அயல் நாட்டினர், மங்கோலியர் மந்திரவித்தையில் வல்லவரெனக் கருதினர். வைகறையில் சாந்தமும் அமைதியும் நிலவும். பகைவர் பயமற்று மக்கள் தத்தம் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருப்பர். இப்படி மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை ஏன் நடத்திச் செல்ல முடியாதென்று செருக்கி நிற்பர். அன்று மாலைப் பொழுதிற்குள் பெரும் புயலைப்போலத் தோன்றும் மங்கோலியப்படை, எவரும் எதிர் நில்லாதபடி அந்நாட்டை அடிமைப்படுத்தும்.

இங்ஙனம் பெருமை படைத்த மங்கோலியர் சீரழிந்தது ஏன்? இதற்குப் பல காரணம் கூறலாம்; ஆயினும், லாமாயிஸம் என வழங்கும் மாறுபட்ட ஒருவித புத்தமதம் முக்கிய காரணமெனலாம். லாமாயிஸம், மங்கோலியர் மதமானபின் அவர்கள் போர்த்திறமும் குணங்களும் குறையலாயின. சமாதானத்தைப் பரப்பும் இடம் மதமே. மங்கோலியருட் பெரும்பாலோரை மடங்களில் சோம்பேறிகளாக வாழும் லாமாக்களாக மாற்றி விட்டது அதுவே.

சண்டைக்காகவே சண்டையிட்டவர் மங்கோலியர். தாங்கள் வெற்றிபெற்ற நாடுகளில் தங்கள் பண்பாடுகளும் வழக்க வொழுக்கங்களும் குண முதலியனவும் நிலைத்து நிற்கும்படி அவர்கள் எதையுமே செய்யவில்லை. சரித்திரத்திலேயே அவர்களைப்போன்ற வீரரைக் காணமுடியாது. செங்கிஸ்கான் தாமர்லேன் போன்றவரை அவர்கள் தலைவராகப் பெற்றபோது அவர்களுக்கு எதிராக எவரும் நிற்கமுடியவில்லை. மங்கோலியருக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியாது. நிலப்போரில் அவர்களுக்கு இருந்த திறமை, கடற்போரில் பயன் படவில்லை. கடலில் துருப்புக்களையும் சாமான்களையும் உணவுப் பண்டங்களையும் கப்பலில் ஏற்றிச் செல்வது அவர்கள் அறியாத போர்முறையாகும்

**மணிமந்திர ஔஷதங்கள்:**—மங்கோலியாவில் மாயாசாலமும் மாந்திரீகமும் இன்னமும் உள்ளன. கோபியின் தெற்கு மேற்கு முனைகளில் உள்ள மலைகளில் முனிவர் சிலர், மனவொருமையாலும்

தியானத்தாலும் மந்திர பலம் பெற்றிருப்பதாகக் கூறுவர். பூமியிலிருந்து மேலெழுந்து அந்தரத்தில் தொங்குவது, காதினல் சுவாசிப்பது போன்ற ஜாலங்களை அவர்கள் செய்துவருவதாக நம்புகின்றனர். வேறு சிலர் வானிற் பறந்து செல்வதாகவும், பறந்து மலைச் சிகரத்தை அடைவதாகவும், சிறு புழைகளில் நுழைந்து செல்வதாகவும் கூறுவர்.

லாமாக்களின் அற்புதமந்திர சக்தியைப்பற்றிப் பல கதைகள் கூறப்படுகின்றன. ஒரு லாமா செய்த அரசாங்க குற்றத்திற்காகக் கழுத்தைச் சுற்றியும் காலைச்சுற்றியும் பல பெருங் கற்களைக் கட்டி அவரை ஓராற்றில் தூக்கி விட்டு எறிந்தனர். சில நிமிடங்கள் கழித்து அவர் தவருமல் மூழ்கி யிறந்துபோயிருப்பர் என நினைத்துத் தூக்கிப் பார்த்தனராம்; ஆனல் அவர் உயிருடனிருந்தார். பெருங்கூச்சலிட்டு அவரை மறுபடியும் தூக்கி நீருள் எறிந்தனர். நெடுநேரம் கழித்து மறுபடி பார்த்தபோது லாமா உயிருடன் இருந்தார். கொலைசெய்ய வந்தவர் மிக்க திகைப்பும் திகிலும் அடைந்தனராம். மண்டியிட்டு அவரிடம் மன்னிப்பு பெற்றனரெனக் கூறுவர்.

மங்கோலியர் குதிரைச்சவாரி செய்வதையும் ஆடுமேய்ப்பதையுமே தொழிலாகக் கொண்டவர். மக்கள் தொகையுள் ஐந்தில் ஒருபங்கு லாமாக்கள். வைத்தியத் தொழிலால் பெருமையும் புகழும் பணமும் பெற முடியும். லாமாக்களில் பெரும்பாலோர் வைத்தியம் புரிவர். ஒருவருக்கு உடல் நலம் உள்ளவரையில் வைத்தியருக்குச் சம்பளம்

கொடுப்பது வழக்கம். ஒருவர் நோய்வாய்ப்பட்டால் சம்பளம் கொடுப்பது நிறுத்தப்பட்டு வைத்தியர் நோயாளி குணமடைகிறவரையில் அவன் வீட்டில் தங்கவேண்டும். மந்திரத்தின் மூலம் நோயைக் குணப்படுத்தலாமென்பதில் அவர்களுக்கு நம்பிக்கை மிகுதி. மருந்தையுண்டாலும் மந்திரத்திற்கே முக்கியத்துவம்கொடுப்பர். கசப்பு மருந்தை மகிழ்வோடு எளிதில் நோயாளியுண்பான். நோய் வருவதற்குக் காரணம், தாம் கடவுளைக் கோபமூட்டுவதாலே என அவர்கள் நம்புகின்றனர். பகலில் எப்பொழுதும் நோயாளியைத் தூங்கவிடமாட்டார். உடலில் 367 சதுரங்கள் இருப்பதாகவும், ஒவ்வொரு சதுரமும் ஏதோவொரு உறுப்பொடு தொடர்புபட்டிருப்பதாகவும் மங்கோலிய லாமாக்கள் நம்புகின்றனர்; ஆகவே நோய் வந்தால் அந்நோய் எவ்வுறுப்போடு தொடர்புள்ளது என்பதை யுணர்ந்து சதுரத்தின் மூலம் அவ்வுறுப்பைக் குணப்படுத்தவிரும்புவர். இடையிலோ வயிற்றிலோ கையிலோ நோய்வந்தால் குறிப்பிட்ட சதுரத்தைச் சிவக்கக் காய்ச்சிய ஊசியால் குத்தி நோயாளி இறக்கும் வரையிலோ, நோய் தீரும் வரை வரையிலோ சிகிற்சை செய்வர்.

**கதை சொல்பவர்:**—சீனாவில் இருப்பதுபோல் கதை சொல்வதையே பிழைப்பாகக் கொண்டவர் மங்கோலியாவிலும் பலருண்டு. பொது மக்களிடமும் மடங்களிடமும் இவர்களுக்குத் தனிச் செல்வாக்கு இருக்கிறது. பழங்கதைகளை இவர்கள் சொல்லும்போது கேட்போர் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு விடுகின்ற

னர். எளிய மக்களும் துறவிகளும் தாம் வாழும் இடங்களைப் பற்றிய பழஞ்செய்திகளை நன்கு அறிந்தவர். கதை சொல்பவர் நுட்பமானவிஷயங்களைக் கூடச் சொல்லாமல் இருப்பதில்லை; அவர்களைச் சூழ மக்கள் உட்காருவர்; பிரபல வீரர் பெயரைச் சொல்லும்போதே கேட்போர் முகம் ஒளிவீசும். தத்தம் முன்னோர் எவ்வாறு புகழ்பெற்றன ரென்பதைக் கேட்க மக்கள் அலுப்படைவதே இல்லை. கதை கூறுபவர், புத்திக்கூர்மை படைத்தவர். சொல்லும் கதை நீண்டதாவும் பாமரமக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் இருக்கும். அதனால் நாட்டில் அவர்களுக்குத் தனிப்பெருமையும் புகழும் செல்வாக்கும் உண்டு.

## வினாக்கள்

1. பாலைவனம் என்றாலென்ன?
2. சகாரா பாலைவனம் எவ்வாறு உள்ளது?
3. கோபி பாலைவனம் எப்படி இருக்கிறது.
4. பாலை நிலம் உண்டாவது எப்படி?
5. உலகில் வளமுள்ள நிலம் எங்கு இருக்கிறது; எப்படி?
6. பாலைவனம் தோன்றுவதற்கு மக்கள் காரணமாவரென்பது பொருந்துமா?
7. காடுகளை யழிப்பதன் விளைவு யாது?
8. பாலைவனம் தோன்றாமலிருப்பதற்குரிய வழி என்ன?
9. பாலைநில மக்களின் இயல்பென்ன?

10. கோபி பாலையை நாற்புறமும் சூழ்ந்துள்ளவை எவை ?

11. கோபி பாலையில் வாழும் மக்கள் எவர் ?

12. டினுஸர் என்ற விலங்கு எங்கேயிருந்தது ?

13. சீனவின் பெரும்சுவர் அதிசயப்பொருள் களில் ஒன்றுகும் எனக் கூறுதல் பொருந்துமா; எப்படி ?

14. சீனவின் பெருஞ்சுவரைக் கட்டிய அரசன் எவன் ? அதைக் கட்டுவதற்கு அவன் கொண்ட வழிகள் யாவை ?

15. மங்கோலியரது உணவு, உடை, பழக்க வழக்கம் ஆகியவற்றைத் தொகுத்து எழுதுக.

16. செங்கிஸ்கான் உலகத்தை நடுங்கச் செய்தது எவ்வாறு ?

17. மங்கோலியர் சீரழிந்தது ஏன் ?

## 4. வெற்றிக்கு வேண்டுவன

முன்னுரை: வெற்றிக்கு வேண்டுவன என்பது, நீவிர் அறிந்த வெளிப்படையான பொருள்தான். நீங்கள் ஒவ்வொருவரும் அதனைக் குறித்துச் சிறிதளவு சொல்லவும் ஆற்றலுடையீர். அதன் பொதுவான அம்சங்களை நீவிர் பலகால் கேட்டறிந்துமிருக்கலாம்; எனினும் அதற்கு உயிர் நாடியாக உள்ளதனை நும் மனத்துட் பசுமரத்தாணிபோல் அழுத்தமாகப் பதியும்படி இங்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

வெற்றிக்குரிய உறுப்புக்கள் 1. உழைப்பு;—முதன் முதலில் நம்மைச் சுற்றியுள்ள பொருள்களை உற்று நோக்குமின். இழும் என்ற ஒலியொடு ஓடும் அருவிகளும் வானளவு ஓங்கி வளர்ந்துள்ள மலைகளும் 'இடைவிடாமல் உழையுங்கள்' என்று ஓயாமல் நமக்கு அறிவுறுத்துகின்றன. எல்லாப் பொருள்களையும் நாம் கண்டு களிக்குமாறு ஒளி உதவுகின்றது. எல்லாப் பொருள்களும் ஒளியால் மின்னுகின்றன. அத்தகைய வொளி எங்கிருந்து வருகின்றது!, விளக்கிலிருந்து அல்லவா? அதனால் வீட்டில் உள்ள விளக்கினை உதாரணமாகக் கொண்டு, இதனைவிளங்கச்செய்கின்றேன்.

விளக்கு ஒளி தந்து மிளிர்வது, எண்ணெயும் திரியும் ஓயாமல் தத்தம் வேலையைச் செய்தலால்தான்; எண்ணெயும் திரியும் எரிவதன் பயனே ஒளியாகும்.

நீவிர் சோம்பியிருப்பின் உடனே அவ்வொளி, 'அழிந்துபோ' என்று நமக்கு அறிவுறுத்துகின்றது. நீவிர் உடல் நலங்கருதி, ஐம்புல நுகர்ச்சியில் ஆழ்ந்து, கொன்னே காலத்தைப் போக்கின் உமக்கு அதோகதிதான். நீவிர் உழைப்பதால் ஒருகால் உமக்கு இறப்பு நேரினும், அதுவே உம் பெயர் அழியாமலிருத்தற்குரிய உயர் நிலையை உண்டாக்கும். நீர் தேங்கிக் கிடக்கும் குட்டையையும், நீர் இடையறாது ஓடிக்கொண்டிருக்கும் ஓராற்றையும் நீவிர் உற்று நோக்குமின்; ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் உள்ள நீர், பளிங்குபோல் துலங்கிப் பருகத் தக்கதாய் இருக்கின்றது. குட்டையில் தேங்கிக் கிடக்கும் நீரோ, மிக்க நாற்றமுடைய சேறாய் அருவருக்கத்தக்க நிலையில் இருக்கின்றது. நீவிர் வெற்றித் தேவதையின் புதல்வராய்த் திகழ விரும்பின், இடையறாமல் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் செயலைப் பின்பற்றுமின்; ஒருவன் எண்ணெயையும் திரியையும் வைத்துக்கொண்டு அவற்றை எரியவிடாமலிருப்பின், ஒரு நலனும் அடையான். அதனால், நன்னீராற்றின் செயலைப் பின்பற்றி இடையறாது உழைமின்; தொடங்கிய செயல்களில் வெற்றிபெறுவீர். நாள்தோறும் தன்னம்பிக்கையோடு நல்லுழைப்பில் ஈடுபடுமின்; இங்ஙனம் நீவிர் உழைத்து வருவீராயின், தாழ்நிலையிலிருந்து மேல் நிலையினை அடைவது மிக மிக எளிது.

2. தியாகம் :—தூய்மையும் வெண்மையுமான பொருள்களை அனைவரும் விரும்புகின்றோம். அங்ஙனம் அவைகளை விரும்புவதற்குரிய காரணத்தை ஆராய்வோம். வெற்றிக்கு அறிகுறியாக விளங்கும் வெண்மைப் பொருளின் இரகசியத்தை ஈண்டு விவரிப்பாம். கருமை நிறமுள்ள பொருள்களை அனைவரும் வெறுத்துத் தள்ளுவதற்குரிய காரணத்தையும் ஆராய்வோம். பொருட் குணங்களை விவரிக்கும் விஞ்ஞான நூல்கள் (Physics) நிறங்களின் உண்மைத் தத்துவங்களை நமக்கு எடுத்துக் கூறுகின்றன; அஃதாவது, சிவப்பும் சிவப்பன்று, பச்சையும் பச்சையன்று, கருமையும் கருமையன்று; காணப்படும் நிறங்கள்யாவும் உண்மையாக நோக்குமிடத்து அவையல்ல என்று கூறிச் செல்கின்றன. ரோஜாப்பூ, வசீகரிக்கத்தக்க பல நிறங்களை வெளியிட்டுப் பிரகாசிக்கின்றது. சூரிய கிரணங்களின் பிற நிறங்களை அந்தப் பூ முழுதும் விழுங்கி, யாராலும் எவ்வளவு முயன்றாலும் நீட்டமுடியாத நிறத்தை அது வெளியிடுகிறது. பச்சிலையும் அம்மாதிரியே, தன் பசுமை நிறத்தை வெளி விட்டுப் பிரகாசிக்கின்றது. கருமையுள்ள பொருள்களோ எல்லா நிறங்களையும் விழுங்குமேயன்றி, ஒன்றனையும் வெளிவிடுவதில்லை. தியாகம், அறம் என்ற அரும் பெருங்குணங்கள் அப்பொருள்களிடம் இருப்பனவல்ல. ஒரு நிறத்தினையும் வெளிவிட அவை உதவா. அவை, தாம் பெற்றவற்றுள் எதனையும் தினையளவும் திருப்பிக் கொடுத்துதவுவதில்லை. தாம் பெறும் பொருளைப் பெற்றிருந்தும் பிறர்க்கீயா உலோபிக்குக் கரு நிறப்

பொருள் சமமாகும் என்று இயற்கை நமக்குக் கற்பிக்கின்றது. ஒரு பொருள் வெண்மையாகக் காணப்படுவதன் இரகசியம் என்னவெனில், அது தனக்கென வாழாமல், தான் பெற்றுள்ள அனைத்தையும் பிறர்க்கு உதவுவதே, வெண்மைப் பொருள்களுக்குள்ள இவ்வரிய குணத்தை நீவிர் கடைப்பிடித்தொழுகுமின்; வெற்றிகள் பல நுமக்கு வாய்க்கும்; அன்றியும் வெண்மையான பளிங்கு, முத்து, பனி முதலிய அனைத்தும் தூய்மை, நீதி முதலியவற்றிற்கும் அறிகுறியாய் விளங்கி நமக்கு அவைகளைப் போதிக்கும் பேராசிரியராக நிற்கின்றன. ஆகையால், நீவிர் அனைவீரும் தியாகமென்ற அரும் பெருங் குணத்தைப் பெற்று "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என நினைந்து வாழ்மின். ஒருகாலும் சுயநலங் கருதவேண்டா. உண்மைத் தியாகிகளாகத் திகழுமின். மரம் முளைத்து வளர்ந்து பயன்தர வேண்டின், விதை அழிந்து தானே ஆதல் வேண்டும்; அதனால், சுயநலத் தியாகமே நமக்கு வெற்றி பல தரும். தாம் பெற்ற ஞானத்தைப் பிறர்க்கு எவ்வளவுக் கெவ்வளவு எடுத்துப் போதிக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அது வளர்ச்சியுற்றோங்கும் என்பதை அனைவரும் தம் மனத்தில் பதிய வைத்திடல் வேண்டும்.

**3. தன்னை மறத்தல்:**—கல்விச் சாலையைச் சார்ந்த கழகங்களிற் சொற்பொழிவாற்றச் சமயம் நேரின், தம் மனத்தில் "நான் பேசுகிறேன்" என்ற முனைப்பு உண்டாக அச்சம் எழுந்து தம் பேச்சு வன்மை தடைபட்டுப் போவதை மாணவர் நன்கு

அறிந்துள்ளனர். நீவிர் எவையேனும் ஒரு வேலையைச் செய்யநேர்ந்தாலும் தம்மை மறந்து அவ்வேலையில் ஈடுபடுமின். நீவிர் எவையேனும் ஒரு ஆராய்ச்சி செய்யநேரிட்டால், அவ்வாராய்ச்சி மயமாகுமின். அவ்வாறுசெய்யின் வெற்றி பெறுதல் திண்ணம். "நான் என்ற அகங்காரம் அகலும் காலமே இன்பமெல்லாம் நண்ணும் காலம்."

ஒரு கதையின் மூலம் இதனை விளக்குகின்றேன்; கேண்மின். முன்னொருகாலத்தில், இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியாய் விளங்கிய அக்பரிடம் இராசபுத்திரர் இருவர் சென்று தமக்குவேலை கிடைக்கவேண்டினர். அக்பர், அவர் எத்தொழில்களில் வல்லவர் என்று கேட்டார். அவர், தாம் போர்புரிவதில் வல்ல வீரர் என்று கூறினர்; அக்பர், "அங்ஙன மாயின், நும் போர் வன்மையைக் காட்டுமின்" என்றார் உடனே அவ்விருவரும் தத்தம் வாளை அவற்றின் உறையினின்றும் உருவினர். போர் வேட்கை கொண்டனர். வலசாரி இடசாரியாகச் சுற்றி வந்து போர்புரிந்தனர். ஒருவர் மார்பை ஒருவர் குறிதவறாமற் குத்தினர். இருவரும் வீழ்ந்து மாண்டனர். அரசரும் பிறரும் அவரைப் போற்றினர்.

நாகரிகம் வளர்ந்த இக்காலத்தில் இவ்வண்ணம் உயிரைத் தியாகம் செய்ய வற்புறுத்துவதற்காக இக்கதையை யான் கூறவில்லை. அது கற்பிக்கும் உயர்ந்த நீதியினை அறிய எண்ணியே கூறினேன். அஃதாவது, மறந்து வேலையில் ஈடுபட்டால், வெற்றி அடைவது நிச்சயம்.

**4. உலகம் அன்பின் மயம்:**—காரியசித்தியைத் தருவது அன்பேயாம். அன்பே அதற்கு எல்லை. கை சுகமாக இருக்க வேண்டும் என்றால், பிற உறுப்புக்களோடு அதற்கு ஒற்றுமை இருந்தாகவேண்டும்; அஃது என்னை? என் உழைப்பால் சுகம் பெறுவதா என்று தனக்குள் எண்ணி வேலைசெய்யாமல் இருந்தால், வேறு உதவியின்றி மாய்ந்தொழிய நேரும். இப்படிச் சுயநலம் கருதிய கை, தன் வேலையைச் செய்யாமல், பிற உறுப்புக்களுக்கு உணவையும் கொடாது நிறுத்திவிட்டு, தன் திறமையால் கிடைத்த உணவைத் தானே ஏற்றுக் கொள்ளுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். இதனாலேயோ, குளவி முதலிய கொட்டுவதினாலேயோ கைபருத்து வீங்கலாம். அதனால் கைக்கு மிக்க தீங்கு விளையுமே தவிர நன்மை யாதொன்றும் விளையா. தான் பிற உறுப்புக்களுள் ஒன்று என்ற தன்னிலையை உணர்ந்து, அவைகளுடன் கூடி உழைக்க முற்பட்டிடுமேல் முன்னேறிச் சுகமடைய முடியும். இன்றேல் அதன் நிலை இரங்கத் தக்கதாகும்.

கூடிவாழ்தல், அன்பின் முதிர்ச்சியே யன்றி வேறன்று. கூடிவாழ்தலைப் பற்றி உங்களுக்கு அதிகம் தெரியும்; ஆகையால் அதை ஒட்டி அதிகம் கூற நான் விரும்பவில்லை. அந்த ஒற்றுமை நம்மிடம் உள்ள ஆழ்ந்த அன்பால் வளர்ச்சி பெறவே விரும்புகின்றேன். எல்லாரிடமும் அன்பு காட்டுமின்; நீவிர் நிச்சயம் வெற்றிபெறுவீர். ஒரு வாணிகன் தன்னிடம் சரக்குக்களை வாங்க வருபவரின் நலனைத் தன்னலம் போல் கவனியாமல் இருப்பானாயின்,

அவன் தன் வியாபாரத்தில் லாபம் சிறிதும் பெற மாட்டான். அவன், வியாபாரம் மேலோங்கி வளர வேண்டுமாயின் தன்னிடம் வருபவரிடம் அதிக அன்பு காட்டவேண்டும்; அவர்களை அவன் மனமார நேசித்தாகவேண்டும்.

**5.** மகிழ்ச்சி:—வெற்றி அளிப்பவைகளில் மகிழ்ச்சியும் ஒன்றாகும். உண்மையில், நீவிரனைவீரும் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர். முகங்களில் மகிழ்ச்சியால் உண்டாகும் புன்முறுவலை யான் காண்கின்றேன். நீவிர் நகை பொங்கும் மலர்கள். மக்களிடையே நீவிர் நகை அரும்பும் மொட்டுக்களாக விளங்குகின்றீர். நீவிர் மகிழ்ச்சியின் உருவம். இதனை நீவிர் இறுதி நாள்வரையிற் கைவிடாமற் போற்றுக. இதனை எங்ஙனம் இறுதிவரை கைவிடாமல் காப்பது என்பதை நுமக்கு விளக்குகின்றேன். உம் செயல்களுக் குண்டாகும் பயனை எதிர்பாராதீர். எதிர்காலத்தை நோக்கி நீவிர் கவலை கொள்ளவேண்டா; நீவிர் நாள் கோள்களை ஆராய்ச்சி செய்தலும் வேண்டுவதில்லை. வெற்றி தோல்விகளை நினைத்து ஏங்க வேண்டா. வேலைக்காக வேலை செய்மின். வேலையே வெகுமதி. சென்றதைக் கருதி வருந்தாமல், இனி வருவதைக் குறித்துக் கவலைப்படாமல், இப்போதுள்ள வேலையில் ஈடுபட்டு உழைமின், உழைமின்! இவ்வுணர்ச்சி நும்மை எக்காலமும் களிப்போடிருக்கச் செய்யும். விதையொன்று முளைத்துப் பயன் தரவேண்டுமானல், அதற்குக் காற்று, நீர், பூமி முதலியவற்றின் உதவி அவசியம். அதைப்போலவே மனமகிழ்ச்சியோடு வேலை

செய்பவருக்கு இயற்கையன்னை முன்வந்து பல உதவி புரிவாள். தன் கையில் உள்ளனவற்றைச் சாமர்த்தியத்துடன் உபயோகிப்பதே அறிவின் சக்தியாகும். அமாவாசைக் கருக்கலில் இருபது மைல் தூரம் உள்ள இடத்திற்கு நாம் செல்லும் அவசியம் ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். கையில் உள்ள விளக்குப் பத்து மைல் தூரமே பயன்படும்; ஆனால் இருட்டு என்ற எண்ணம் மனத்திலிருந்து மறையுமானால், விளக்கு இல்லையென்றாலும், குறித்த இடத்தை நாம் எளிதில் போய்ச்சேர முடியும். நாம் போகும் வழி யெல்லாம் ஒளியுடனிலங்கும். வேலையிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ளவனுக்கு, அசாத்தியமானது எதுவுமில்லை. ஆகவே நாம் வீணான கவலைகளைக் கொண்டு மகிழ்ச்சியை ஏன் இழத்தல் வேண்டும்? நீந்தத்தெரியாதவன் ஏரியில் விழுந்தாலும், அவனிடம் மனவுறுதி மாத்திரம் இருக்குமானால், உயிர் தப்பிப் பிழைக்கலாம். மனிதன் இனவெடை (Specific gravity), நீரினுடையிலும் இலேசானது; ஆகையால், நீர் மேல் மிதந்து அவன் தன் உயிரினைக் காப்பாற்றிக் கொள்ளுதல் கூடும். ஆனால் பாமரமக்கள் மனவுறுதியில்லாமல் கிலிகொண்டு நீரில் மூழ்கி இறக்கின்றனர். வருங்கால வெற்றியைக் குறித்து அடிக்கடி எண்ணிக் கவலைப்படுவதே தோல்விக்குக் காரணமாகும்.

எதிர்காலத்தைக் குறித்து எண்ணி எண்ணி மனம் வருந்தினால் மன அமைதி குன்றுவதோடு தொடங்கிய வேலையும் சித்தியடையாது. ஒருவன் தன்னிழலைப் பிடிப்பதற்கு முயல்வதை யொக்கும்

இவ் வெண்ணம். நிழலைப்பிடிக்க எல்லையில் காலம் அதனைத் தொடர்ந்து ஓடினாலும், அவனால் பிடிக்க முடியுமா, முடியாது. நிழலைப் பின்புறம் விட்டு, அவன் சூரியனை நோக்கி நிற்கட்டும். ஆ! அதே நிழல் அவன் பின்னால் ஓடிவரும். ஆகவே, எவன் வெற்றிக்கு மகிழாது தன் முதுகைக் காட்டுகின்றானோ, எதிர்காலத்தை எண்ணி எண்ணி எவன் கவலையில் ஆழாமலிருக்கின்றானோ, எவன் தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டுழைக்கின்றானோ, அவனுக்கு வெற்றி அக்கணமே உண்டாகும்; ஆகையால், வெற்றியினை எதிர்பார்த்து நீவிர் கவலைப்படுதல் வேண்டா. வெற்றியையே நும் வாழ்வின் எல்லையாகவும் கருதுதல் வேண்டா. அப்படியானால் நும் இருப்பிடத்தை நாடி வெற்றி வந்தடையும். நீதி மன்றத்தில், நீதிபதி, வாதிபிரதிவாதிகள், வழக்கறிஞர் முதலியோரை 'வருக' என்று தாம்பூலமிட்டு அழைப்பதில்லை. நீதிபதி நியாயமண்டபத்தில் வந்தமர்ந்ததும் அவர்களனைவரும் அவர் முன்னால் நிற்பர்; ஆகையால், தோழர்களே! நும் கடனை மனமகிழ்ச்சியோடு ஆற்றுமின். நீவிர் விரும்பிய வெற்றியெல்லாம் நும் அடிகளில் வந்தடையும் என்பது திண்ணம்.

**6.** அஞ்சாமை:—அடுத்தபடி, அச்சமின்மையைக் குறித்து மனத்தில் பதியும்படி எடுத்துக்கூறுவதோடு, அதனை அனுபவம் ஆக்கிக்கொள்ளுமின் என்று நுமக்கு வற்புறுத்துகிறேன். சிங்கங்களை ஒரே பார்வையில் வசமாக்கி விரும்பியபடி நடத்தலாம் பகைவரும் பார்க்கின்ற பார்வையில், பகைமை

தணிந்து நம்மிடம் நண்பராய் விளங்குவர். அஞ்சாமையைக் கைக்கொள்ளின், நாம் வெற்றி பெறுவது நிச்சயம். நான் இமயமலைச்சாரல்களில் திரிந்துள்ளேன். அங்குப் புலி, கரடி, ஓநாய் முதலிய கொடிய விலங்குகளையும், வேறு பல விஷ ஜந்துக்களையும் கண்ட துண்டு; அவைகளால் எனக்கு ஒருதீங்கும் எப்பொழுதும் நேர்ந்ததில்லை. அவைகளை உற்றுப் பார்ப்பேன். அவை என்னை நிமிர்ந்து நோக்கும். பிறகு அவை அடங்கி ஒடுங்கி வந்தவழியே செல்லும்; ஆகவே, நீவிர் எதற்கும் அஞ்சவேண்டா. அஞ்சாநெஞ்சராய் நீவிர் இருந்தால், நுமக்கு எவரும் தீங்கு செய்யார்.

புறு, பூனையைக்கண்டதும் தன் கண்ணை மூடிக்கொண்டு, அப்பூனை தன்னைப்பார்க்க முடியாது என நினைத்துக்கொள்ளுமோ என்னவோ தெரியவில்லை. இதன் பயன் என்ன? பூனை புறுவின் மேற்பாய்ந்து அதனைப் பிடித்துத்தின்று விடுகின்றது. தைரியசாலி, புலியை அடக்கிப் பழக்கிவிடுவான்; ஆனால் பயங்காளியைப் பூனையும் அச்சுறுத்தும்.

நடுக்கமுள்ள கை, ஒரு பாத்திரத்தில் உள்ள நீரைச் சிந்தாமல் மற்றொரு பாத்திரத்தில் ஊற்ற முடியாதென்பதை நீவிர் கண்டிருப்பீர்; ஆனால், அதனை நடுக்கமற்ற கை சிறிதளவும் சிந்தாமல் ஊற்ற முடிகின்றது. ஆகவே அஞ்சாமையின் உயர்ந்த சக்தியின் தத்துவத்தை இந்த "இயற்கை" நுமக்கு விளக்கமுறப் போதித்து விட்டது.

ஒரு சமயம் பஞ்சாப் போர்வீரனொருவன் கப்பலில் போகும்போது நோய்வாய்ப்பட்டான். வைத்

தியர். அவனைக் கடலில் எறிந்துவிடும்படி உத்தர விட்டார். அவ்வீரன் அதனை அறிந்தான். சாதாரணமானவருக்கும் கடலருகில்வரின் அஞ்சாமை பிறந்துவிடும். ஆகவே, அந்த வீரன் பேருணர்ச்சியால் தூண்டப்பட்டு அஞ்சா நெஞ்சத்தவனாய்த் துள்ளிக் குதித்து எழுந்தான். நேரே வைத்தியரிடம் சென்று, தன் கைத் துப்பாக்கியை அவர் முகத்திற்குநேரே காட்டி "நான் உண்மையில் நோயாளியா? அங்ஙனம் கூறின் இதே விநாடியில் நும்மைச்சுட்டுத் தள்ளுவேன்" என்றான். வைத்தியர் முன்பின் யோசனை செய்யாமல் அவன் நோயற்றவன் என்று நற்சாட்சிப் பத்திரம் அளித்து விட்டார். மனத்திடமின்மையே மிக்க பல வீனத்தை உண்டாக்கும். அதனை முற்றிலும் அகற்றுமின்; அஞ்சாதிருந்தால் எல்லாவன்மையையும் நீவிர் பெறலாம். என் வார்த்தைகளை நன்றாய் மனத்துட் பதிய வையுங்கள். எதற்கும் அஞ்சன்மின். மனவுறுதியோடு வாழ்மின். வெற்றி நிச்சயம்.

7. **தன் நம்பிக்கை:**—இறுதியாகக் காரியசித்தியின் உயிர் எது என்றால் தன் நம்பிக்கையே ஆகும் என்று நுமக்கு எடுத்துக் கூறுகின்றேன். யாரேனும் "தத்துவ போதனையை ஒரே வார்த்தையில் சொல்" என்று என்னைக்கேட்டால் "தன்னம்பிக்கை" என்று புகல்வேன். செவிசாய்த்துக் கேண்மின். "நீவிர் யார்?" என்பதை முதலில் அறிந்துகொள்ளுங்கள். நுமக்கேற்ற நலன்களை நீவிரே தேடியடைய முயல்வீராயின், எல்லாம் வல்ல இறைவனும் உமக்கு உதவிசெய்வது திண்ணம், திண்ணம். எல்லாம்

வல்ல இறைவனே நீவிர் என்ற உண்மையினை அனுபவத்திற் கண்டறியலாம். இஃது உண்மை. பரீட்சை செய்து பார்மின். நும் கால்களாலே நிற்க முயலுமின். முயன்றால் நும்மால் செய்து முடிக்க இயலாத காரியம் எதுவும் இவ்வுலகிலில்லை.

சிங்கம், மிருகேந்திரன் என்பதை நீவிர் அறிவீர். அது தன்னம்பிக்கையோடு வாழ்கின்றது; அதனால், அஃது எல்லா இன்னல்களையும் வென்று தைரிய சாலியாக விளங்குகின்றது. கிரேக்கரால் (யவனர்) "உலவும் மலைகள்" என்று முதல் முதலில் புகழ் பெற்று இந்தியாவின் காடுகளில் வாழும் யானை களோ, தங்கள் எதிரிகளுக்குப்பயந்தே வாழ்கின் றன. அவைகள் எப்போதும் கூட்டம் கூட்டமாகவே வாழும். அவைகள் தங்களுக்குள்ள வன்மையை அறிந்துகொள்ளாததால், தூங்கும்போது தங்களுள் ஒரு யானையைத் தலைவனாக நியமித்துத் தூங்கும். அவைகள் தங்களைப் பலமற்றவைகளென்று நினைப்பதால், அக்கூட்டம் பயந்து நடுங்குகின்றது. ஆனால், உண்மையில் உலவும் மலையான ஒரு யானை, பலசிங்கங்களைத் தன்னடியில் மிதித்துக் கொல்லும் சக்தியுள்ளது.

அறிவினை விளக்கமுறச் செய்யும் ஒரு நற்கதை யினை நுமக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன். இரண்டு சகோதரர் தம் முன்னோர் சொத்தைத் தங்க ளுக்குள் சமபாகமாகப் பங்கிட்டுக் கொண்டனர். சில ஆண்டுகள் சென்றபின் அவருள் ஒருவன் சொத்துக்களை யெல்லாம் இழந்து வறியவனானன். மற்றவன் தனக்கு இருந்த சொத்தைப் பன்

மடங்கு பெருக்கிப் பெருந் தனவந்தனானான். வறுமையுற்றவன் லக்ஷாதிகாரியாய் விளங்கும் சகோதரனைப்பார்த்து, "நீ எங்ஙனம், எம்முறையில் செல்வத்தை வளர்த்தாய்?" என்று, கேட்டான். அதற்கு அவன், "அண்ணா, நீ' போ, போ' என்றாய், நானோ 'வா, வா' என்று கூறினேன்," என்றான். இதன்பொருள் என்ன? ஒருவன் பஞ்சணைமேல் சுகமாய்ப் படுத்துக்கொண்டு வேலை யொன்றும் செய்யாமல், பணியாளரைக் கூவி "போ, போ" என்று ஆணையிட்டு வேலைவாங்கி வந்தான். மற்றவனோ, தன் கால்களாலே நின்று தன் வேலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து, வேலைக்காரரை விருப்பத்தோடு அழைத்து 'வா, வா' என்று சொல்லி வேலை வாங்கிவந்தான். ஆகவே, ஒருவன் தன்னம்பிக்கையோடு வாழ்ந்ததால், பல பணியாளர் சூழக் குறைவற்ற செல்வம் பெற்றுச் சுகமாய் வாழ்ந்தான். மற்றவன் இன்பத்தில் ஆழ்ந்து தன் கடமையைச் செய்வதில் சோம்பி; பணியாளரைப் 'போ, போ' என்று கட்டளையிட, அவர்கள் அவனை விட்டு நீங்கினர். பாக்கியலட்சுமியும் அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவனை விட்டு அகன்றனள் தோழரே, சகோதரரே, 'தன்விதிக்குத் தானே தலைவன்' என்பதை அறிந்து கொள்ளுமின். நாம் கடமையை ஆற்றாமல், புராண இதிகாசங்களைப் பக்தி சிரத்தையோடு போற்றுதல் பயனற்ற செயலாய் முடியும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற ஆன்றோர் வாக்கினை உள்ளத்தில் இருத்துவோம். சுகவாழ்வு அடிமை புகுத்திவிடும். ஆகவே,

தத்தம் கருமத்தைத் தவமுமல் செய்யின், விடுதலை யும் வெற்றியும் பெற்றுச் சுகமாய் வாழலாம். இதனை நன்ருய் ஆய்ந்து பார்மின். பன்முறை உள்ளத்தில் ஆய்மின். ஆய்ந்தறிந்தால் அஞ்ஞான இருளகல ஞான சூரியன் நும் இருதய கமலத்தில் உதயமாவான்; வெற்றியும் பெறுவீர்.

## வினக்கள்

1. மக்கள் எந்நிறப் பொருள்களின் குணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; ஏன்?
2. தன்னை மறத்தலாவது எது? எப்படி?
3. உலகம் அன்பின் மயமாவது எப்படி?
4. மகிழ்ச்சி வெற்றியளிப்பது எப்படி?
5. அஞ்சாமையே வன்மைகளெல்லாவற்றினும் தலையாயது; எப்படி?
6. ‘தன்னம்பிக்கையே காரிய சித்தியின் உயிர்’ எப்படி?

## 5. கைத்தொழிலும் தேச முன்னேற்றமும்

உலகத்தில் முன்னணியில் நிற்கும் தேசங்கள் யாவும் கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பதால்தான் அவை பிறநாடுகளால் புகழப்படுகின்றன. கைத்தொழில் மிகுந்த அந்நாடுகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத்தரமும், பிற நாடுகளைவிட உயர்ந்திருக்கிறது. ஆகவே தேசத்தில் இருக்கும் மக்கள் சுபிட்சம் நிறைந்த வாழ்க்கையை நடத்தவேண்டுமானல் அத்தேசம் கைத்தொழிலில் முன்னேற்றமடையவேண்டும் என்பது கூருமலே விளங்கும். கைத்தொழிலின் மூலமே உற்பத்தியைப் பெருக்க முடியும். உற்பத்தி பெருகுமானல் மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யமுடியும். அதனல் மக்கள் வாழ்க்கை நலம் உயரும்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் இயற்கை அன்னை மிகவும் தாராளமான முறையில் நடந்து கொண்டிருக்கிருள். இயற்கைச் செல்வம் இவ்வளவு இருந்தும் மக்களுட் பெரும்பாலோர் பட்டினி கிடக்கின்றனர். இது விசித்திரமாகத் தோன்றுமாயினும் உண்மையே. இதற்குக் காரணம் இந்தியாவின் பிற்போக்கான நிலைமையே; மக்களின் ஏழ்மை நிலைமையை மாற்றக் கருதினல் கைத்தொழில் முன்னேற்றத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இந்தியாவில் ஆண்டுதோறும் இரண்டுகோடியே எட்டு லக்ஷம் டன் நிலக்கரி, சுரங்கத்தினின்றும்

வெட்டி யெடுக்கப்படுகின்றது. இன்னும் 5000 கோடியிலிருந்து 6000 கோடி டன் வரை நிலக்கரி பூமியில் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியாவின் இரும்பு உலகத்திலேயே மிகவும் உயர்ந்த ரகமானது. இந்தியாவில்தான் உலகத்திலேயே மிக அதிகமாக **மாங்கனீஸ்** கிடைக்கிறது. உலகத்திற்கு வேண்டிய **மைக்கா,** இந்தியாவில்தான் முக்கால் பங்கு கிடைக்கிறது. புகையிலை, இந்தியாவில் விளைவதைப்போல் வேறெங்கும் விளைவதில்லை. இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரையே உலகில் மிக அதிகம். அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியாவில் பருத்தி விளைகிறது. உலகிலிருக்கும் ஆடுமாடுகளில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவிலே இருக்கின்றன. வேண்டிய அளவு கம்பளியும் தோலுமுள்ளன. இவ்விதமாக எல்லா விதத்திலும் கைத்தொழிலுக்குரிய மூலப்பொருள்களனைத்தும் இங்கேயிருந்தும் மெதுவாகவும் தடைப்பட்டுமே கைத்தொழில் இங்கு வளர்ச்சியடைந்துள்ளது. மேனாட்டில் 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியினால் இந்தியாவின் கைத்தொழில்கள் நாசமடைந்தன. அதன் காரணமாகக் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த மக்களிற் பெரும்பாலோர் விவசாயத்தை நாடினர். விவசாய மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்து வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பல பண்டங்களை நாம் இறக்குமதி செய்து வருகிறோம். 1911-ஆம் ஆண்டில் ஜே. என். டாடா அவர்களின் பெருமுயற்சியால் ஏற்பட்ட இரும்புத் தொழிற்சாலை ஒன்றைத் தவிர்த்து

வேறெதுவும் குறிப்பிடத்தக்கவளவில் தொழிற் சாலைகளெனச் சொல்ல இடமில்லை. பம்பாய். அகமதாபாத் முதலிய இடங்களில் சில பருத்தி எந்திர சாலைகளிருந்தன. அங்ஙனமே வங்காளத்தில் சில சணல் எந்திரசாலைகள் இருந்தன.

இவ்வளவு குறைந்தவளவில் கைத்தொழில் முன்னேற்றமடைவதற்குக் காரணம் பல. இந்நாட்டில் இருக்கும் மக்கள் தகுந்த முறையில் தொழில் துறையில் பயிற்சி பெறவில்லை.

பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வல்லமையுள்ள ஆங்கில அரசாங்கம், பிற்காலத்திற்குத் திட்டம் வகுக்காமல் நம் தேசத்தை வெறும் விவசாய நாடாகவும், மக்களைப் படிப்பற்றவராகவும் வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக விருந்தது. தொழில்களைத் தொடங்குவதற்கு மூலதனம் இந்நாட்டிலிருந்து போதிய அளவு வெளிவரவில்லை. கைத்தொழிலிற் சிறந்த தலைவரெனக் கூறவல்ல மக்கள் ஒரு சிலரே இருந்தனர். அவர்களுக்கும் பெருமித வெற்றியடைவதற்குரிய கருவிகள் கிடையாமையோடு இடையூறுகளே மிகுந்து நின்றன. இந்நிலையைத் திருத்துவது எங்ஙனம்? முதலில் நம் நாட்டில் இருக்கும் நடை முறையையும் கொள்கைகளையும், முன்னேற்ற மடைந்துள்ள பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம் நாட்டிற்கும் அந்நாடுகளுக்கும் மலைக்கும் மடுவுக்குள்ள வேறுபாடு இருப்பது நன்கு புலனாகும். நாம் வாழும்காலம், கைத்தொழிலுக்குரியதேயாகும். ஒழுங்குபட்டமுறையில் இக்கைத்தொழில்கள் நம் நாட்டில் அமைக்கப்படா

மையால் நாம் மூன்று வழிகளில் நஷ்டமடைந்துவருகிறோம். பலதிறப்பட்ட தொழில்களில்லாமையால் வருமானக்குறைவு ஏற்பட்டிருப்பது ஒன்று; தேசத்தைப் பகைவரிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளும் வகையில் தயாராக இல்லாமலிருப்பது இரண்டு. கைத்தொழில் முன்னேற்றமடைந்துள்ள பிற நாடுகளில் மக்கள் அனுபவிக்கும் இன்பங்களை நம் நாட்டினர் அனுபவியாமலிருப்பது மூன்று. வருந்தத்தக்க இவ்வுண்மைகள் பிற்காணும் குறிப்புக்களிலிருந்து நன்கு புலனாகும்.

படித்த மக்களின் எண்ணிக்கை :—

| தேசம் | மக்கள் தொகை | சத வீதம் |
|---|---|---|
| 1. இந்தியா | 388·8 மிலியன் | 9·5 % |
| 2. இங்கிலாந்து | 50·7 மிலியன் | 76 % |
| 3. அமெரிக்கா | 130·3 மிலியன் | 75 % |

இதிலிருந்து மேல்நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கல்வி எவ்வளவு குறைந்த வளவிலிருக்கிறது என்பதை நன்கு உணரலாம். இதை ஒழிப்பதற்கு ரஷ்யாவிற் கையாண்டதுபோல 5 வருடத் திட்டம் ஒன்று போட்டு ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தி ஒரு தலைமுறை யளவிலாவது அமல் நடத்தவேண்டும்.

கைத்தொழிலிற் போடப்பட்டிருக்கும் முதல்:—

| தேசம் | முதலீடு | தலைக்கு எவ்வளவு |
|---|---|---|
| 1. இந்தியா | 750 கோடி | 19 ரூபாய் |
| 2. இங்கிலாந்து | 7,067 கோடி | 1,485 ரூபாய் |
| 3. அமெரிக்கா | 23000 கோடி | 1,765 ரூபாய் |

கைத்தொழில்கள் வளருவதற்கு வேண்டிய முதல், பிற நாடுகளைப்போல் இந்நாட்டில் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்படவில்லை என்பது நன்கு உணரப்படும்.

தொழில்:—

| தேசம் | ஜனத்தொகை | சதவீதம் | |
|---|---|---|---|
| | | கைத்தொழில் | விவசாயம் |
| 1. இந்தியா | 388·8 மிலியன் | 10·2 | 67 |
| 2. இங்கிலாந்து | 50·7 மிலியன் | 47·2 | 8 |
| 3. அமெரிக்கா | 130·3 மிலியன் | 31·2 | 22 |

இதிலிருந்து இந்தியாவில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களின் தொகை மிகவுமதிகமென்பதும், கைத்தொழில்வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் புலனாகும்.

தலைக்குச் சராசரி வருமானம் :—

| தேசம் | கைத்தொழில் | விவசாயம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. இந்தியா | 12 ரூபாய் | 48 ரூபாய் | 60 ரூபாய் |
| 2. இங்கிலாந்து | 463 ரூபாய் | 68 ரூபாய் | 531 ரூபாய் |
| 3. அமெரிக்கா | 830 ரூபாய் | 219 ரூபாய் | 1,049 ரூபாய் |

இப்பொழுது விவசாயத்தைக் காட்டிலும் கைத்தொழில்களே மிகுந்த ஊதியத்தைக் கொடுக்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

இந்தியாவின் ஜனத்தொகை விரைவில் பெருகி வருகிறது; ஆகவே மனித சக்தியை உபயோகப்படுத்திக் கைத்தொழிலையும் பெருக்கினால் தான் தேசத்தைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து காக்கமுடியும். இந்த யுத்தத்தில் (1939-45) ஒரு உண்மை வெளிப்பட்டது; இந்தியாவில் குடிவளம் மிகுந்திருந்தும், பேரளவில் கைத்தொழில் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய உதவிகள் பலவிருந்தும், தன்னைக் காத்துக்கொள்ளப் பிற நாடுகளையே எதிர்நோக்க வேண்டியிருந்தது. விவசாயமே அதிகமாகவுள்ள எந்நாடும் எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய இராணுவபலத்தையோ, உயர்தர வாழ்க்கை நிலையையோ அடைதல் மிகவும் கஷ்டம்; ஆகவே இந்

நிலையிலிருந்து இந்தியாவை முன்னேற்ற மடையச் செய்ய வேண்டுமானால் கீழ்க்கண்ட முறைகளைக் கையாள வேண்டும்.

(1) படிப்பின் மூலமாகவும், தொழில் மூல மாகவும் திறமையாக வேலை செய்யும் சக்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

(2) தேசத்தின் சுபிட்சத்திற்கு எதிராக இருக் கும் பிற்போக்கான பொருளாதார சக்திகளை மாற்றியமைக்கவோ கைவிடவோ வேண்டும்.

(3) தேசத்தின் இயற்கைக் கருவிகளையும், மூல தனத்தையும், மக்களின் சக்தியையும் தொழில்களி லீடுபடச் செய்ய வேண்டும். கைத்தொழிலிலும் விவசாயத்துறையிலும் சமமான அளவில் மக்களை ஈடுபடச் செய்தல் நலம்.

முதலிற் கூறிய நிபந்தனைகளை வெற்றிபெறச் செய்யவேண்டுமானால் மக்கள் இப்பொழுதிருக்கும் கல்வி நிலையிலிருந்து பெரிதும் முன்னேறவேண்டும். இதற்குக் கட்டாயக் கல்விமுறை அநுஷ்டானத்தில் வரவேண்டும். தொழிலாளரின் புத்தித் திறமையை நேர்மையான முறையில் வளர்க்கவேண்டும். தன் னுடன் வேலைசெய்யும் பிற உழைப்பாளிகளோடு தகுந்த முறையில் நடந்துகொள்ளச் செய்ய வேண்டும். மேனாடுகளில் அறிவும் ஆற்றலும் தன் முயற்சியும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக் கியமாக விசுவாசமும் நாணயமும் தன்னலமற்ற தன்மையும் சாமர்த்தியமும் கருதப்படுகின்றன. நூற் றுக்கு 67-பேர் நம் நாட்டில் இன்று ஜீவனத்திற்கு விவசாயத்தையே நம்பியுள்ளனர். பிற தேசங்

களில் பார்க்கப் போனால் நூற்றுக்கு மிக அதிகமாக 33-பேரே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆகவே விவசாயத்திலிருந்து கைத்தொழிலுக்கு மிகுந்த அளவில் மக்களை எப்படி மாற்றுவது என்பதே முக்கியமாகும்.

1901-ஆம் ஆண்டிற்கும் 1941-ஆம் ஆண்டிற்குமிடையே நமது ஜனத்தொகை ஒன்பதரை கோடி பெருகியிருக்கிறது. இதற்குத் தகுந்தவளவில் உற்பத்தியைப் பெருக்கவும் மக்களின் வருமானத்தை வளர்க்க உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மேனுடுகளின் உதாரணத்தைப் பின்பற்றினல் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் அதிகமான மக்களைக் குறைக்கவேண்டும். அப்படிச் செய்வதனல் விவசாயத்திலிருந்து விலக்கப்படும் அம்மக்களுக்கு வேறுவித தொழில்களைக் கண்டுபிடிக்கவேண்டும்.

இப்பொழுது விவசாயத்தில் குழுமியிருக்கும் அதிகப்படியான மக்களை, கைத்தொழில்கள் மட்டும் தாங்கிக்கொள்ள முடியாது என்று கூறுகின்றனர் சிலர். பெருந் தொழிற்சாலைகளை நாட்டில் ஏற்படுத்தினல் அதன் மூலமாகவும், அத்தொழில்களை அடுத்து ஏற்படும் உபதொழில்கள் மூலமாகவும் மக்களுக்கு வேலையைக்கொடுக்க முடியும். சமப்பட்ட பொருளாதார திட்டத்தில் விவசாயத்தைக் காட்டிலும் கைத்தொழிலே இலாபகரமானது.

**இக்காலக் கைத்தொழில்களை மூன்று தொகுதிகளாகப் பிரிக்கலாம்:—**

1. எஞ்ஜினீயரிங் (Engineering)

2. பௌதிக இரசாயனத் தொடர்புள்ள தொழில்கள்

3. பிற தொழில்கள்

(1) எஞ்ஜினீயரிங் சம்பந்தப்பட்ட தொழில்களில் கீழ்க் கண்டவை சேரும் :—இரும்பு, எஃகு, விவசாயக் கருவிகள், ரெயில்வே என்ஜின்கள், இராணுவ சம்பந்தப்பட்ட வெடிமருந்து போன்றவையும், மோட்டார், ஆகாய விமானத் தொழில்கள், மின்சார சம்பந்தமுள்ள தொழில்கள் முதலியனவும்.

(2) பௌதிக இரசாயனத் தொடர்புள்ள தொழில்கள் :—மருந்து, சாயம், தோல் பதனிடும் சாமான்கள், உரம், காகிதம், சிமெண்ட், கண்ணாடி, பீங்கான், ரப்பர், தோல், சர்க்கரை உற்பத்தி, தீப்பெட்டி முதலிய கைத்தொழில்கள்.

(3) பிற தொழில்கள் :—பருத்தி, கம்பளி, பட்டு, சணல் முதலிய தொழில்கள், கப்பல் கட்டுதல், சுரங்கத் தொழில், உலோகத் தொழில்கள், மரச் சாமான், கடியாரம், புகையிலை, தேயிலை, காபி முதலியவை.

வேறு பல தொழில்களில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தைக் கொண்டு பார்த்தால்,

1. இலட்சக்கணக்கான மூலதனத்தைக் கொண்டு தொடங்கும் பெருங் கைத்தொழில்கள்.

2. நடுத்தரக் கைத்தொழில்கள்.

3. சிறு அளவில் அமைக்கப்படும் தொழில்கள் எனப் பிரிக்கலாம்; பெரும் கைத்தொழிற் சாலைகள் நாட்டிலிருந்தால் வெளிநாடுகளிலிருந்து இறக்கு

மதி செய்யும் பொருள்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து அதன் மூலமாகப் பணம் வீணாவதைத் தடுக்கலாம். இதற்கு அரசாங்கத்தின் பேராதரவு மிக மிக அவசியம். நடுத்தரத் தொழில்களைத் தொடங்கத் தனிப்பட்டோர் முயற்சியே போதுமானது. சிறு அளவில் மூலதனங்கொண்டு அமைக்கப்படும் குடிசைக் கைத்தொழில்கள் கிராமத்திற்கு உகந்தவை. வேலையற்றுக் கிடக்கும் இந்நாட்களில் விவசாயிகள் இக் குடிசைக் கைத்தொழில்களின் மூலம் தம் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம்.

தொழிற்சாலைமுறை வந்ததுமுதல் உற்பத்தியில் புரட்சிகரமான பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அதுவும் மின்சார சக்தியைப் பயன்படுத்தத் தொடங்கிய பின் உற்பத்திவிலை மிகவும் குறைந்துவிட்டது. ஒரு தொழிற்சாலை, கட்டடம், மின்சார சக்தியால் இயங்கும் இயந்திரங்கள் கொண்டதாம். மிருகங்களைக் கொண்டும் கைவன்மையாலும் செய்துவந்த பழையமுறைகளைக் காட்டிலும் தொழிற்சாலை முறையானது மிக விரைவிலும் குறைந்த செலவிலும் சாமான்களை உற்பத்திசெய்யச் சாத்திய மாக்கியுள்ளது. பேரளவில் சாமான்களை உற்பத்தி செய்வதால் அவைகளின் விலையை மிகுதியாகக் குறைக்க முடியும். போக்குவரவு சாதனங்களிலும் வளர்ச்சி ஏற்பட்டிருப்பது தொழில் முறையினுல் தான். ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு முன் சில முக்கிய விசாரணைகள் செய்ய வேண்டும். எந்தச் சாமானை நாம் உற்

பத்தி செய்யப்போகிறோமோ, அந்தச் சாமான் களுக்கு இலாபம் தரக்கூடியபடி விற்கும் கடைகள் இருக்கவேண்டும். அச்சாமான்களைச் செய்வதற்கு வேண்டிய கருவிகளும் மூலப்பொருள்களும் அருகி லேயே இருக்கவேண்டும். கட்டடம் கட்டுவதற்கும் எந்திரங்கள் வாங்குவதற்கும் இலாபம் வரும்வரை தொழிலாளருக்குச் சம்பளம்கொடுக்கவும் மூலதனம் வேண்டும்.

இக்காலக் கைத்தொழிலுக்கு முக்கியமாக வேண்டியவை :—

| | |
|---|---|
| (1) முதல் | (5) தொழிலாளர். |
| (2) கடை அல்லது மார்க்கட் | (6) கருவிகள். |
| (3) சக்தி | (7) நிர்வாகம். |
| (4) எந்திரம் | |

ஒரு தொழிற்சாலையைத் தொடங்கும் முன் வேலை நடத்துவதற்குரிய கருவிகளைப் பற்றிப் பரி சீலனை செய்ய அனுபவமுள்ளவர் யோசனையைத் தெரிந்துகொள்ள வேண்டும். பேரளவில் மூலதனம் வைத்து, தொழிலைத் தொடங்குவது பலரால் முடியும் செயலன்று; ஆகவே, தொழிலைத் தொடங்குவோர், மூலதனத்தைச் சிறு பகுதிகளாக்கிப் பலரைப் பணம் போடும்படிச் செய்து பங்குகளைப் பொது ஜனங்களுக்கு விற்றுவிடுவர். இச்சிறு பகுதிகளுக் குப் 'பங்கு' என்று பெயர். இப்பங்குகளை எல்லோரும் எளிதில் வாங்கமுடியும். இப் பங்குதாரர் தங்களுட் சிலரை நிர்வாகஸ்தராக ஒவ்வோராண்டும் தேர்ந் தெடுக்கின்றனர். இந் நிர்வாகஸ்தர், தொழிலை நடத்துவதற்குப் பொறுப்பாளியாவர்; ஆகவே இந் நிர்வாகிகள் தீர்க்க தரிசனமும் நாணயமும் தொழில்

திறமையுமுள்ளவராக இருக்கவேண்டுவது அவசியம். நிலக்கரி, எண்ணெய், விறகு, நீராவி, மின்சாரம் முதலியவற்றால் இயந்திரங்களை இயக்குவதற்கு வேண்டிய சக்தி கிடைக்கிறது. எண்ணெய் பெற்றிருந்த பதவியை நிலக்கரி பிடித்துக் கொண்டது; ஆனால் இப்பொழுதோ நிலக்கரியையும் தள்ளிவிட்டு மின்சார சக்தி முன்னேறிக் கொண்டு வருகிறது. ஒரு தொழிற்சாலை நடத்துவது மிகக் கடினமான செயலாகும். வெற்றிகரமாக நடத்துவதற்கு முக்கியமானது தொழிற்சாலையில் உபயோகிக்கும் மூலப்பொருள்களை மலிவான விலையில் வாங்குவதும் சாமான்களை முற்றுப் பெறச் செய்து இலாபத்திற்கு விற்பதுமே. போட்டியிருக்குமிடங்களில் சாமான்களின் தரத்தை உயர்த்தியும், அளவை அதிகரித்தும், விலையைக் குறைத்தும் விற்றால்தான் விற்பனை செய்ய முடியும்.

திறமை வாய்ந்த நிர்வாக அதிகாரி (Manager) தொழிற்சாலைக்குப் பெரும் ஆஸ்தி ஆவார். உற்சாகமும் திறமையும் நாணயமும் கொண்டவரும் பழக்கப் பட்டவருமான ஒருவரை வேலைக்கமர்த்திக் கொள்வதே மிகவும் அவசியம். அத்தொழில் முறைகளை நன்கு கற்றறிந்து கொள்ளுவதற்கு முதலிலிருந்தே ஒரு சிலரைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்குப் பயிற்சியளிப்பது இன்றியமையாததாகும். உயர் தரக்கலாசாலைகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் வெளிவரும் மாணாக்கரை இவ்வித வேலைக்கு அமர்த்திக்கொள்ளுதல் நல்லது. நாள்தோறும் அல்லது

மாதந்தோறும் ஆகும் வரவு செலவுக் கணக்குக்களைச் சரிவர எழுதிவைத்தல் நலமாகும். வருடமுடிவில் நிர்வாகஸ்தர் பங்குதாரருக்கு அத்தொழிலின் வேலை முறையைப் பற்றி ஒரு யாதாஸ்து சமர்ப்பிக்க வேண்டும். இந்த யாதாஸ்து, அவ்வருடம் நடந்தேறிய முக்கியமான வியாபார நுட்பங்களையும், ஆஸ்திகளையும், கடனையும் தனித்தனியே குறிப்பிட்டு அவ்வருடத்தில் ஏற்பட்ட இலாப நஷ்டத்தைக் காட்டும். நிர்வாகஸ்தர் நிகர இலாபத்தை எவ்விதம் பங்கிடவேண்டுமென்பதை அறிவிப்பார். தொழில் நிர்வாகத்தில் புதுப்புது முறையான முன்னேற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. சமீப காலத்திற் சிக்கனமாகக் குறைந்த செலவில் அதிக உற்பத்தி ஏற்படும் முறைகள் பல காணப்பட்டிருக்கின்றன. தொழிலாளரை அன்பும் ஆதரவும் பெருக நன்கு நடத்தவேண்டும். அவர்களும் தொழிலில் பங்குதாரர்; இலாப நஷ்டத்தில் பங்குண்டு என்பதை நன்கு உணரவேண்டும்.

குடிசைத் தொழில்கள் நாட்டில் ஒருமுக்கிய ஸ்தானத்தைப் பெறவிரும்பினல் அதற்கு அரசாங்கத்தின் ஆதரவு மிக அவசியம். நூற்றுக்கு 67 பேருக்கு மேல் விவசாயத்தை நம்பியிருக்கும் இந்நாட்டில், கைத்தொழில் வாழ்க்கை வலுப்படவேண்டுமானல் கிராமங்களிலுள்ள மக்கள் தங்கள் கடமையும் உரிமையும் இன்னவென வுணர்ந்து உழைத்தாக வேண்டும். கிராமங்களிலுள்ள மக்கள் வீணைக் கழிக்கும் காலங்களை ஊதியம் தரும் வண்ணம் இலாபகரமான வழியில் மாற்றியமைக்கக் குடி-

சைத் தொழில்கள் மிகமிக அவசியம். இக்குடிசைக் கைத்தொழில்களைத் தொடங்குவதற்கு வேண்டிய மூலதனம் கருவிகள் முழுப்பொருளாக்கப்பட்ட சாமான்களுக்குக் கடைகள் (Market) முதலியவை வேண்டுவனவாகும்; ஆகவே அரசாங்கம் நேராகவோ கூட்டுறவு பாங்குகளின் மூலமோ வட்டியில்லாமல், சிறு தவணைகளில் திரும்பியளிக்கும் வண்ணம் மூலதனத்தை முன்னதாகக் கொடுக்கவேண்டும். குடிசைக் கைத்தொழிற் சாமான்களை விற்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தர வேண்டும்.

ஆராய்ச்சி நிலயங்கள் புதிதாக நிறுவப்பட வேண்டும். கைத்தொழில் முன்னேற்றத்துக்குரிய ஆராய்ச்சி நிலயங்களின் உதவி சொல்லுந்தரமன்று. அவ்வாராய்ச்சி நிலயங்கள் மூலமே தொழில்களில் புதுமுறைகளை நுழைக்க முடியும்.

தொழில்களைத் தொடங்குவதற்கு மூலதனமானது மக்களிடமிருந்தே வரவேண்டும். அதற்கு மக்களின் சேமிப்பு அவசியம். ஆகவே சிறுசிறு துளிகளாக இருந்தாலும் அவைகள் பல சேர்ந்தே பெருவெள்ளமாவது போல் மக்கள் தங்களால் இயன்றதைச் சேமித்து வைத்துக்கொள்ளுதல் நலம். இதற்குப் போஸ்டாபீஸுகளில் சேமநிதிகள் இருக்கின்றன. தேசியச் சேமநிதி இருக்கிறது. ஓரணவுக்குக் கூட ஸ்டாம்புகள் விற்கப்படுகின்றன. இவ்விதம் பதினாறு ஸ்டாம்புகள் சேர்ந்தபின் அதை ஒரு ரூபாய்க்கு மாற்றிக்கொள்ளலாம். ஆகவே, ஓரணாவைக்கூட அலட்சியம் செய்யாமல் அதையும் சேமித்துவைத்தல் நலம். இங்

னம் நாட்டிலுள்ள மக்களெல்லோரும் சிக்கன வாழ்வை மேற்கொண்டு சேமிப்பை அதிகரித்தால் அச்சேமிப்பு நிதியைக்கொண்டு பெரும் தொழிற் சாலைகளை ஏற்படுத்தமுடியும். தொழிற்சாலைகளை நாமே உற்பத்திசெய்து கொள்ளமுடியும். நம்முடைய பணம் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் நம் நாட்டிலேயே தங்கும். மக்களுக்கு வேலை கிடைக்கும்; வருமானம் மிகும்; வாழ்க்கைத் தரம் உயரும்; எனவே தேசம் செழிக்க வழியேற்படும்

## வினாக்கள்

1. தேசமக்களின் சுபிட்ச வாழ்க்கைக்குக் வழி எது?
2. கைத்தொழிலின் முன்னேற்றத்திற் பாரத புத்திரர் கவனம் செலுத்துவது எதற்காக?
3. இந்தியாவில் கிடைக்கும் கனிப் பொருள்கள் எவை?
4. இந்தியாவில் தொழிற்சாலைகளெனக் கூறத் தக்கன எவ்வெவை?
5. கைத்தொழில் முன்னேற்ற மடையாததற்குரிய காரணங்கள் எவை?
6. இந்தியாவில் படித்த மக்களின் தொகை, கைத்தொழிலிற் போடப்பட்டிருக்கும் மூலதனம், தொழிலாளர், தலைக்குச் சராசரி வருமானம் இவற்றை விளக்குக.

## 6. வசனநூல் வரன் முறை

பண்டைக்காலத்தில் நம் பாஷையில் உரை நடை நூல்கள் இல்லை. மேனாட்டார் கூட்டுறவால் நம் தாய்மொழியில் சில வசன நூல்கள் வெளிவந்தன. இலக்கியம் நிகண்டு சோதிடம் மருத்துவம் பிறகலை நூல்களெல்லாம் செய்யுளிலேயே இயற்றப் பட்டன; ஆனால், முற்காலத்தில் உரை நடையும் செய்யுள் நடையும் விரவிய தகடூர்யாத்திரை, பெருந் தேவனார் பாரதம், சிலப்பதிகாரம் போன்ற சம்பு (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்) காப்பியங்கள் சில இருந்தன. தொல்காப்பியச் செய்யுளியலி லும் உரை (வசனம்) பற்றிய சூத்திரம் உண்டு.

எனவே, தனிமையில் வசன நூல்கள் தமிழில் முற்காலத்தில் இல்லை எனத் திட்டமாகச் சிலர் கருதுவது பொருந்துமா?

உலகில் எங்குமே முற்காலத்தார் யாவரும் செய் யுளையே பெரிதும் போற்றிக் காத்துவந்தனர். முன்னைய தமிழரும் அவ்வாறே செய்யுள் வடிவிலே நூல்களை அமைத்தனர். நல்லிசைப் புலவர்க்கு வசனம் எழுதத் தெரியாதெனக் கருதலாகாது. அவர்களுக்கு ஆற்றல் உண்டு என்பதில் ஐயம் கொள்ள இடம் சிறிதும் இல்லை. இறையனாரகப் பொருள் உரைகாரர் முதலியோர் வசன நடை எழுதுவதில் தேர்ந்தவரென நம்ப இடமுண்டு. வசன நடையில் நூல்கள் எழுதுவது முற்காலத்தில் அவ்வள வாகப் போற்றப் படாமையால் அது தோன்று வதில் தடை நேர்ந்திருக்கலாம். சைனரும், வைணவ

ரும் வட மொழியும் தமிழுங் கலந்த 'மணிமிடை பவளம்' என்ற பெயருடன் எழுதியுள்ள ஸ்ரீபுராணம், திவ்யப் பிரபந்த வியாக்யானம் போன்ற வசன நடை நூல்கள் பல எழுதிப் போந்தனர்.

இனி, முற்காலத் தமிழர் வசன நடையில் நூல்கள் எழுதாமைக்கு உரிய காரணங்கள் எவையாக இருக்கலாம் என்பதை இங்கு ஒருசிறிது ஆராய்வோம்:—

வசன நூல்கள் எழுதுவதற்குத் தக்க வசதிகளும், கருவிகளும் பல இன்று உள்ளன. எழுதுகோல், மை, காகிதம். பென்ஸில் முதலிய கருவிகள் எளிதில் இப்பொழுது கிடைத்துள்ளன. ஆனுல் முற்காலத்திலோ இக் கருவிகள் இல்லை. (i) பனையோலை முதலியவற்றுள் எழுத்தாணியால் எழுதுவது எளிய செயலன்று; ஆகையால் எழுத்து வேலையை எவ்வளவு குறைத்துக் கொள்ள இயலுமோ அவ்வளவில் குறைத்துக் கொள்ள முற்பட்டனர். அதனுல் சுருங்கச் சொல்லல் என்ற நூற்புணர்ப்பை மேற்கொண்டனர். (ii) அக்காலத்தில் அச்சு யந்திரமுதலியன இல்லை. அச்சிடப்பட்ட நூல்களும் இல்லை. (iii) அக்காலத்தார் கற்க விரும்பியவற்றை மனப்பாடம் செய்து வந்தனர். மாணவர் நல்லாசிரியரை யடுத்து, சிறந்த நூல்களை மனப்பாடமாகவே கற்றுவந்தனர். (iv) அவ்வாறு மனப்பாடம் செய்வதற்கு வசன நடையில் அமைந்த நூல்கள் ஏற்றன வல்ல. செய்யுள் நடையே சிறந்தது; ஆகவே தமிழர் எல்லா நூல்களையும் செய்யுளிலேயே இயற்றினர்.

பண்டைக் காலத்தில் வசன நூல்கள் தமிழில் இருந்திருக்குமானல் நம் நாடு பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்திருக்கக் கூடும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டு மொழியில் உள்ள வசன நூல்கள் இன்றியமையாதவை. மேனுடுகளில் நெடுங்காலத்திற்கு முன்னரே வசன நூல்கள் தோன்றின. அந் நாட்டினர் பல கருத்துக்களை யாவரும் எளிதில் அறிந்து கொள்ளத்தக்கபடி பல நூல்களை யாத்தனர். அதனுலே அந்நாடுகள் முன்னேற்ற மடைந்தன. இக்கருத்தை மனத்துட் கொண்டே மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள்,

"வசன காவியங்களால் மக்கள் திருந்த வேண்டுமேயல்லாமல் செய்யுட்களைப் படித்துத் திருந்துவது அசாத்தியம் அல்லவா ? ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்குமானல் அந்தத் தேசங்கள் நாகரிகமும் நற்பாங்கும் அடைந்திருக்கக் கூடுமா? அப்படியே நம் சுய பாஷையில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிறவரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்.'' என்று பிரதாப முதலியார் சரித்திரத்தில் எழுதியிருக்கிருர். அவ்வாறே திருத்தணிகை விசாகப் பெருமாளையர், தாம் எழுதிய பாலபோத இலக்கணம் என்னும் நூலின் பாயிரத்தில்,

"இலக்கண இலக்கிய கணித பூகோள நூல்களையெல்லாம் இக்காலத்து இத்தேசத்தை ஆளுகின்ற இங்கிலீஷ்காரரும் அவர்கள் வசிக்கும் கண்டத்தில் உள்ள ஏனையோரும், செய்யுளில் இயற்றிக் கற்பிப்பதைவிட்டு வசனங்களிலே தெளிவுற இயற்றிச் சிறு

வருக்குக் கற்பித்துக் கொண்டு வருகின்றனர். அதனால் அக்கண்டத்தில் வாழும் சிறுவர், சில நாட்களிலேயே பல நூல்களைக் கற்றுப் பல விஷயங்களையும் உணர்ந்து பல தொழில் துறைகளிற் செயலாற்றும் திறமுடையராகின்றனர்.

" இத் தேசத்தார் அந்நூல்களை யெல்லாம் செய்யுளிலேயே இயற்றி அவற்றிற்குத் திரிசொற்களால் உரை எழுதிச் சிறுவருக்குக் கற்பித்து வருகின்றனர். இவ்வாறு செய்யுட்களில் இயற்றப்பட்ட நூல்கள், நிகண்டு முதலிய கருவி நூல்களைக் கற்றாலன்றிக் கற்கப் படாவாம்; ஆகவே, அவற்றுள் ஒரு நூலைக் கற்பதற்கு நெடுநாள் செல்லுகின்றது. செல்லவே பல நூல்களைக் கற்றுணர்ந்து எத்தொழில்களையும் செய்யத் தக்கவர்களாவதும் அரிதாம்.

" இதனால் இந்நாட்டுச் சிறுவர் தங்கள் வாழ்நாள் வீழ்நாள்படாமற் சில நாட்களில் அப்பல நூல்களையும் கற்றறிந்து எத்தொழில்களையும் செய்யத் தக்க வல்லமை அடைவதற்கு அந்நூல்களை யெல்லாம் உலக வழக்கியற் சொற்களால் (உரை) வசனமாகத் தெளிவுறக் கல்விச்சாலைகளிலே உபயோகமுறும் படிச் செய்தல் நன்று.........."

மேற்கூறிய பகுதிகளில் நாடு நாகரிகமடைந்து நலம் பெறுவதற்கு வசன நூல்களே பேருதவியாயிருக்கின்றன. மேனாடுகள், நாகரிகமும் செல்வமும் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் வசன நூல்களே. அந்தோ! இத்தகைய அழுத்தமும் புதுமையும் பொருந்திய வசனம் எழுதுவாரில்லையே என்று

ஏங்குவார் பலருண்டு. ஆகவே, வசன நூல் எத்துணைப் பயனளிக்கவல்லது என்பது விளங்கும்.

முற்காலத் தமிழர் உரைநடையில் நூலெழுதும் வழக்கத்தைப் பல்லாண்டுகளாக விட்டு விடவே நாளடைவில் வசன நூல்கள் எழுதும் ஆற்றலை இழந்து விட்டனர். இக் குறைபாட்டினை மேனாட்டார் நன்கு எடுத்துக் காட்டியிருக்கின்றனர். உவின்ஸ்லோ தொகுத்த தமிழ் இங்கிலீஷ் அகராதியின் முகவுரையில்,

"தமிழ் வசனம் எழுதும் பழக்கம் இன்னும் ஆரம்ப தசையில் இருக்கிறது. விரைவாகவும் சரமாரியாகவும் தமிழிற் கவிபாடக் கூடிய புலவர் பலர், வசனநடையிற் சில வாக்கியங்களையும் எழுத வல்லமையற்றிருக்கின்றனர்." என்று கூறியிருக்கின்றனர்.

மார்டாக் துரையவர்கள், தமிழைப்பபற்றிக் கூறும்போது,

"மருத்துவம் கணிதம் இலக்கணம் நிகண்டு எல்லா நூல்களும் (உரைகளைத்தவிர) செய்யுளிலேயே இயற்றப்பட்டுள்ளன. வசனநடையில் நூலியற்றும் வழக்கம் மேனாட்டார் தொடர்பால் தோன்றியதாகும்" என்று கூறினர். இவையனைத்தும் உண்மையே. இந்திய மொழிகளிலேயே வசனநடை நூல்கள் மிகக்குறைவாக உள்ளன. மேனாட்டார் தொடர்பால் அது வளர்ச்சி பெற்றது.

தமிழில் தனிவசன நூல், முதன் முதலில் மேனாட்டறிஞராலேயே இயற்றப் பெற்றுள்ளது என்பது எவரும் மறுக்கமுடியாது.

முதல் முதலில் இயற்றப்பட்ட வசன நூல் எது; எப்போது எவரால் இயற்பெற்றது?

பதினாறும் நூற்றாண்டில் தமிழில் வசனநூல்கள் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன; ஆயினும் பதினெட்டாம் நூற்றாண்டில்தான் முதன் முதல் வசனநூல்கள் தோன்றின. அதுவே கிறிஸ் தவ வேதோபதேசம் என்பது. அதன்பின் கிறிஸ் தவ வணக்கம் என்னும் நூல் வெளிவந்தது. அப்போது மேனாட்டுப் பாதிரிமார் தமிழ் கற்கச் சில நூல்களை அச்சிட்டனர். 17-ஆம் நூற்றாண்டில் ராபர்ட் நோபிலி என்னும் தத்துவபோத சுவாமி சில வசனநூல்களை இயற்றினர். அக்காலத்திலேயே அருளானந்தர் என்பவரும் சில வசனநூல்களை எழுதினார். 18-ஆம் நூற்றாண்டில் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் சில வசனநூல்களை இயற்றினார். இவர் காலத்திலேயே வேறு சிலரும் வசன நூல்களை இயற்றிவந்தனர். சிறப்பாக ஸீகன்பால் என்பவரைப்போன்றவராவர். திருவாவடுதுறை யாதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ மாதவச் சிவஞான முனிவரும் சில வசன நூல்களை எழுதினர்.

19-ஆம் நூற்றாண்டிலேயே வசனநூல் சிறப்படையத் தொடங்கியது; ஆயினும் இருநூற்றாண்டுகள் வரை தமிழில் வசனநூல் பெரிதும் வெளிவரவில்லை. அந்நூற்றாண்டில் வசனநூல்கள் அளவின்றி இயற்றப்பெற்றன. இடையில் 200 ஆண்டுகள் வசன நூல்களின் வளர்ச்சி தடைப்பட்டதற்குக் காரணம் என்ன? அக்காலவரசியலில் கிளர்ச்சிகள் பல தோன்றின. பல அரசர் அங்கங்கே தலை தூக்கினர். சாதாரண மக்களே அவ்வாறு அரசராயினர்; ஒருவரோடொருவர் சண்டையிட்

டொழிந்தனர். நாளடைவில் பிரஞ்சு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர் இட்ட சண்டைகளும், கர்நாடக நவாபுக்களின் யுத்தங்களும், மராட்டியரின் படையெடுப்பும், ஐதர்அலி திப்பு சுல்தான் கலாபங்களும் ஆகிய அரசியற் குழப்பங்கள் பற்பல தோன்றின. அக்காலத்து மக்கள் பட்டபாடுகள் கொஞ்சமன்று. மக்களுக்குக் காவலென்பதே இல்லை. இந்நிலையிற் கல்வி பெருகுவது எவ்வாறு? கிறிஸ்தவப் பாதிரிமாரும் சைவ மடாதிபதிகளும் கல்வியில் ஊக்கஞ் செலுத்தி வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றூண்டில் ஆங்கில அரசாங்கம் நிலைபெறலாயிற்று; உள் நாட்டுக் குழப்பங்கள் ஒழிந்தன. மக்கள் காவல் பெற்றனர். நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலைத்தன. மக்களும் கல்வி கற்பதில் ஊக்கத்தோடு கருத்தைச் செலுத்தலாயினர். வசன நூல்களின் இன்றியமையாமையை யுணர்ந்தனர். நூதன முறையில் வசன நூல்கள் பலவற்றை இயற்றினர். பல்வேறு இடங்களிற் கலாசாலைகள் பல தோன்றின. மேனாட்டினர் தமிழ் பயில வசனநூல்கள் பல இயற்றப்பட்டன. கிறிஸ்தவ ,மதச் சார்பாகப் பல நூல்கள் வெளிவந்தன. அவைகளெல்லாம் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன.

சென்னைக் கல்விச் சங்கம் (Madras College) என்னும் சபை தோன்றியது; பல நூல்களை அது வெளியிடத் தொடங்கியது. சென்னைப் பாடசாலைப் புத்தகச் சங்கம் 1850-ல் தோன்றி வசன நூல்கள்

பலவற்றை எழுதி வெளியிட்டது. நாளடைவில் பத்திரிகைகள் பல வெளிவரலாயின. இவ்வாறு பற் பல வழிகளில் வசன இலக்கியங்கள் தமிழில் வெளி வந்தன.

'வசன நடை எப்படி இருக்கவேண்டும்; எவ்வித சொற்களைப் பயன்படுத்தவேண்டும்; என்ன என்ன இலட்சணம் அமைந்திருக்கவேண்டும்' இந்தக் கேள்விகளுக்கு ஒருசிலர், "பேசும் பேச்சள வாகவே வசனநடை எழுதுதல் நலம்; அதுவே அதற்குரியது. உயிருள்ள மக்களுக்கு நேரும் இன்ப துன்பம், மகிழ்ச்சி கவலை, கோபம் சாந்தம், பொறுமை இவைகளுக்கு இடையே தாமாகவே தோன்றும் சொற்களிலேயே சுவை, வளைவு, வண் ணம், வடிவு, அழகு, வண்மை எல்லாம் கொண்ட நடைவேற்றுமையுண்டு என்பர். வேறு சிலர், "அப்படி எழுதினல் அஃது இலக்கியமாகுமா? ஆழ்ந்த கருத்துக்களுக்கும் பேசும் பேச்சுக்கும் நெடுந்தூரம் உண்டே? பேசுவது போலவே எழுதுவதென்றால் அதில் நடைமாறுபாடுகளுக்கு இடமிராவே? உலகமொழிகள் எல்லாவற்றிலுமே பேச்சுமொழி வேறு; எழுத்து நடை வேறாகவே உள் ளன. பிறமொழிகளில் எவ்வாறிருந்தாலும் தமிழில் பேச்சு எழுத்து நடைகள் வேறுபட்டிருப்பதே சிறப்பாகும்" என்பர்.

எந்தக் கருத்தையேனும் பேசப் புகுவோர் தத்தமக்குள் எவ்வெவ்வாறு பேசுவரோ அவ்வவ் வாறு அமைய எழுதுவதே சிறந்த உரை நடையாகும். எல்லாவிஷயங்களையும் எல்லோரும்

பேசமாட்டார். பேசும் ஒருவர், சமயசந்தர்ப்பங்களுக்குத் தகவே பேசமுற்படுவர். இக்காரணமே உரைநடை வேறுபாட்டுக்கு மூலமாகும். இஃது, இலக்கியவுண்மை முறையுமாகும். பேச்சு நடை வேறு; எழுத்து நடை வேறு என்று எண்ணுவது தவறு; "சிறிது ஊன்றி யோசித்துப் பார்த்தால் பேசும் பேச்சே எழுத்தாகும்" என்பது மேல்நாட்டு நல்லறிஞர் பலர் கருத்தாகும்.

அவசரமும் எழுத்தறிவின்மையும் சோம்பலும் கவனக்குறைவும் இலக்கணப் பிழையும் உருவச் சிதைவும் சேர்ந்த கொச்சை மொழிகளின் ஒலிப் பதிவே பேச்சு நடை என்று எண்ணிவிடலாகாது.

மொழிகளின் வடிவம் திருத்தமாக இருப்பது அவசியமே; இயல்பாக மனத்துள் பொங்கும் வேகங்களாலும், எதிரில் நிற்கும் மக்களின் முகத்திற் காணும் உணர்ச்சி வேகத்தின் பிரதியாகப் பொலியும் வடிவழகுகளாலும் நடப்பதே பேச்சு நடை.

அழகும் அழுத்தமும் வேகமும் உயிரும் உள்ள சிலசொற்கள் இலக்கணத்தையும் வெல்லும் வல்லமை பெற்று விடுவதுண்டு.

உண்மையோடு அழகும் பயனும் உண்டாக வேண்டுமானால் தள்ளத் தக்கனவற்றைத் தள்ளி, உயிருடன் தாண்டவமாடும் உண்மைகளைத் தேர்ந்து திருந்தஎடுத்து அமைக்க வேண்டும்.

பல்வேறு விஷயங்களை அறிந்தும் ஆராய்ந்தும் வரும் தமிழ் மக்கள், தாம் பொதுவாகப் பேசும் போது முழுத்தமிழிற்பேசினால் தமிழ்மொழி வளரும். விஷயங்களைப் பேசும்போது பொருத்தமான

தமிழ்ச் சொல் தெரியாத இடத்திலும், மறந்தசமயத்திலும், வாதப் பிரதிவாதம் செய்யுமிடத்திலும் அறிவையும் ஞாபகத்தையும் செலவழித்துத் தமிழ் மொழிகளைத் தேடிப் பயன்படுத்தாமல் எளிதிற் கிடைக்கக் கூடிய ஆங்கில முதலிய பிற மொழிச் சொற்களை எவ்வித அச்சமுமின்றி இடை யிடையே கலந்து பேசித் தமிழைக் கொலை செய்ய முற்படுகிறோம்.

உலகவழக்கில் தமிழ் வசனம் வளம் நிறைந்து விளவும் அழகும் வேகமும் பெற வேண்டுமேல் பேச்சில் அங்கசேஷ்டைகளை விலக்கி, மொழிகள் வாயிலாகவே பொருளை வெளிப்படுத்தும் வழக்கம் தோன்ற வேண்டும்.

## வினக்கள்

1. முற்காலத்தில் தமிழில் இருந்த உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் நூல்கள் எவை?
2. மணிமிடை பவளமாவது எது ?
3. தமிழர் வசனநடையில் நூல்கள் எழுதாமைக் குரிய காரணங்கள் எவை ?
4. அயல் நாடுகள் முன்னேற்றமடையக் காரணம் என்ன ?
5. மாயூரம் வேதநாயகரும், திருத்தணிகை விசாகப்பெருமாளையர் என்போரும் வசன நூல்களைப் பற்றிக் கொண்ட கருத்துக்கள் எவை ?
6. உவின்ஸலோ, மார்டாக் கூறியிருப்பன யாவை ?
7. 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் வசன நூல்கள் எழுதியவர் எவரெவர்
8. வசனநடை எப்படி இருக்க வேண்டும்.
9. எவற்றைப் பேச்சுநடை என்று எண்ணலாகா.
10. தமிழைக் கொலைசெய்பவர் யாது செய்கின்றனர்.

## 7. சீவக சிந்தாமணி

சிந்தாமணியின் அமைப்பும் உவமை முதலிய வற்றின் வகைகளும் பிற்காலத்தில் உண்டான பல காப்பியங்களுட் காணப்படுகின்றன. பெரும்பற்றப் புலியார் நம்பி திருவிளையாடலைவிடப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் அதிகமாகப் படிக்கப்பட்டு வருவதற்குக் காரணம் அது சீவக சிந்தாமணியை இலக்கிய அமைப்பில் அதிக மாகத் தழுவியிருப்பதே என்று நினைப்பதில் தவறில்லை.

தமிழில் பல சிந்தாமணிகள் உள்ளன; சோதிட, வைத்திய, வேதாந்தச் சிந்தாமணிகள் இருக்கின்றன; ஆயினும் "சிந்தாமணி" என்றால் அத்தொடர் சீவக சிந்தாமணியைத்தான் சிறப்பாகக் குறிக்கும்.

தமிழில் பஞ்ச காவியங்கள் என்று வழங்கும் ஐந்து நூல்களுட் காலத்தால் முற்பட்டவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்பர்; ஆனால் வழக்கில் சீவகசிந்தாமணியைத்தான் முதலிற் சொல்லு கிறோம். இவ்வழக்கு அதன் பெருமையையே விளக்குகின்றது.

நச்சினார்க்கினியர் என்னும் புலவர், சிந்தாமணிக்கு உரையெழுதியிருக்கிறார். அவர் மிகச் சிறந்த உரையாசிரியர்; சிறந்த அப்புலவர் உரை எழுத எடுத்துக்கொண்டதும் சீவக சிந்தாமணியின் பெருமையைப் புலப்படுத்தும். அவர் மிகவும் சிரமப்பட்டு, சைன சம்பிரதாயங்களை அறிந்து சிந்தாமணிக்கு உரை எழுதினாராம். பலநூற்

பயிற்சியுடைய நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணியின் பெருமையை அறிந்து அதற்கு உரை எழுதுதலை மேற்கொண்டார்.

ஐரோப்பியர் பலர் தமிழைக்கற்று இதன் பெருமையைப் பாராட்டியிருக்கின்றனர். வீரமா முனிவர் என்ற ஒரு பெரிய பாதிரியார் தமிழைக் கற்றவருள் ஒருவர். அவருடைய இயற்பெயர் 'பெஸ்கி' என்பது; அவர் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்றுக்கொண்டார். அவர் ஓரிடத்தில் தமிழ்ப் புலவருக்குள் சீவக சிந்தாமணி ஆசிரியர் சிறந்தவர் என்று கூறியிருக்கிறார். முன்னூல்களின் விளைவாய்ப் பின்வந்த நூல்களின் கருத்தாயமைந்த பெருங் காப்பியமே இந்நூல்.

நன்னூல் உரையில் தன்மையாற் பெயர் பெற்ற நூலுக்கு உதாரணமாகக் 'சிந்தாமணி' கூறப்பட்டிருக்கிறது. சிந்தாமணி என்பது தேவலோக அரதனத்தின் பெயர். அது நினைத்தவெல்லாம் தரும்; அதைப்போல் இந்நூலும் பல பயன்களைத் தரும். சீவக சிந்தாமணியிற் கூறப்படும் கதாநாயகனை சீவகனிடத்தில் பல அருமைக் குணங்களைக் காண்கிறோம்; "அருள், வலி, ஆண்மை, கல்வி, அழகு, அறிவு, இளமை, ஊக்கம், திருமலியீகை, போகம், திண்புகழ், நண்பு, சுற்றம், ஒருவரிவ்வுலகில் யாரே" (1165) எனப் பாராட்டப்படுகின்றான். துன்பப்படுவோரிடத்தில் அவன் இரங்கி உபகாரம் செய்கிறான். "சிந்திப்பவ ரவலமறு சீவகன்" (1084) ஆசிரியரிடத்தில் பணிவாக நடந்து கொள்ளுகிறான். தனக்கு உதவி புரிந்த யாவரிடத்தும் நன்றியறிவுடன்

இருக்கிறான். தான் பிறந்த இடமாகிய சுடுகாட்டை அழித்து, அங்கே பல கட்டடங்களைக் கட்டி நாள்தோறும் பல குழந்தைகளுக்குப் பால் கொடுக்கச் செய்விக்கிறான்.

இந்தக் காப்பியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களும் சொல்லப்படுகின்றன. இந்நூலின் கடைசிப் பகுதி முக்தியிலம்பக மென்பதாகும். சீவகன் இறுதியில் துறவை அடைவதாகக் கூறப்படுகிறது. இழந்த அரசைப் பெற்று இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த சீவகன், ஒருநாள் ஒரு தோட்டத்திற்குச் சென்றான். அங்கே ஒரு குரங்கு பலாப்பழமொன்றைப் பறித்துக் கொணர்ந்து பெண் குரங்கினிடம் கொடுத்தது; அதனை அது தின்பதற்குள் தோட்டக்காரன் அப்பழத்தை அதனிடமிருந்து பிடுங்கிக்கொண்டான். அக்காட்சியைக் கண்டவுடன் சீவகனுக்கு வைராக்கியம் தோன்றியது. 'நாம் பெற்றிருக்கும் இந்தச் செல்வம் ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாறுவதுதானே' என்று அவன் எண்ணினான். புத்தர் பெருமான் சிறிய விஷயத்தை அறிந்து துறந்தது போலச் சீவகனும் இந்தக் காட்சி காரணமாகவே துறந்தான்.

இந்தக் காவியத்திற்கு 'மணநூல்' என்ற பெயர் உண்டு. இதில் எல்லா விஷயங்களும் மணங்களாகவே உள்ளன. முதலில் சீவகன் படிக்கிறான்; கல்விக்குத் தெய்வமாகிய நாமகளை மணந்ததாக முதல் இலம்பகம் கூறுகின்றது. கோவிந்தையாரிலம்பகத்தில் வெற்றி பெற்றதைச் சொல்லும்போது

விஜயலட்சுமியை மணந்தது பற்றி அஃது அங்ஙனம் அமைக்கப்பட்டது. பூமியை ஆண்டான்; அது மண்மகளிலம்பகம் எனப்பெயர் பெற்றது. பின்பு சீவகன் பல பெண்களை மணந்து கொள்ளுகிறான். கடைசி இலம்பகத்தில் அவன் முக்தி பெறுதல் கூறப்படுகிறது, அங்கும் முக்தி மகளை அவன் மணம் செய்து கொண்டதாகவே சொல்லப்படுகிறது.

திருத்தக்கதேவரைப் பற்றிய வரலாறுகள், கற்பனை வகையைச் சேர்ந்தனவாகும்; இருப்பினும் குற்றமில்லை; அக்கற்பனை வாயிலாக நாம் பெறும் உணர்ச்சி, தேவர் பிறப்பதற்கு ஏற்ற நிகழ்ச்சியென எண்ணும்படி இருத்தல் இன்றியமையாததென்பது நல்லறிஞர் கருத்தாகும்.

லார்ட் டெனிஸனது ஜீவிய சரித்திரத்தை ஒரு முறை தாகூர் படிக்க நேர்ந்ததாம். பாவம்! இவர் தேடியதொன்றும் அவ்வரலாற்றுள் கிடைக்கவில்லையாம். மனத் தாங்கலுடன் தமது ஏமாற்றத்தை விமர்சனமொன்றில் வெளியிட்டிருக்கிறார்.

நம் நாட்டுப் பழைய மரபின் சிறப்பும் அவருக்கு அப்பொழுது புலனாயிற்றாம். சரித்திர ஆராய்ச்சி முறையையும் புறக்கணித்து விட்டு வேண்டுமென்றே கற்பனைச் சித்திரங்களை வைத்துக் கவிஞரின் வாழ்க்கை வரலாறுகளை அமைப்பதன் கருத்து மிக்க மகிழ்ச்சியைத் தோற்றுவித்ததாக இவரே கூறுகிறார்:—

"நம் நாட்டுக் கவிஞரது சரித்திர நிகழ்ச்சிகளே நமக்குத் தெரியாவிட்டாலும் குற்றமில்லை; அதனால் வருந்த இடம் இருப்பதாக எனக்குத்

தோன்றவில்லை. வான்மீகி முனிவரைப் பற்றி நாம் உணர்ந்த கதைகளைச் சரித்திர நிகழ்ச்சிகளுக்கு ஒப்பான நிலையில் எவரும் ஏற்றுக்கொண்டு விடவில்லையே. ஆயினும் ஒன்றுமட்டும் சந்தேகமில்லாமல் தெளிவாகின்றது. கவிஞரது உண்மையான நிலைமை விவரிப்பவை இக்கற்பனை நிகழ்ச்சிகளே; வாசகர் இதயங்களைத் தேடி அலையும் கவிப் பண்புகளை இம்மாதிரியான வரலாறுகளில்மட்டும் காண முடியும்; ஒருகால் உண்மையான வாழ்க்கை வரலாறுகளிருப்பினும் அவைகளில் இவ்விதச் சுவை காண்பதரிது" என்பதே.

நம் நாட்டுக் கவிஞர் பலரைப்பற்றி வழங்கும் கதைகளுக்கு அளவேயில்லை. நடக்கக்கூடாத விதங்களிலும் செய்திகள் பல அவர்களைப் பற்றிப் பரவியுள்ளன; ஆயினும் அவர்களுடைய வாக்கின் இனிமையைப் பருகிய எவரும், அளவற்ற உவமைகளையும் சொன்னயங்களையும் விருத்தங்களின் வேலைப்பாடுகளையும் திருவருட் செயலின்றிச் செய்திருக்கவே முடியாது எனக் கூறுவர்.

இக்காப்பியத்திற்கு அடிப்படையாக உள்ளவை, வடமொழியில் வாதீப சிம்மன் எழுதிய க்ஷத்திர சூடாமணியும் கத்ய சிந்தாமணியுமே ஆகுமென்பர். இவ்வாதீப சிம்மன் காலம் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டாகும். ஸ்ரீ புராணக் கதைப் போக்குக்கும் இந்நூலுக்கும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இந்த நூலாசிரியராகிய திருத்தக்கதேவர் சமணர்; அருக சரணம், சித்த சரணம், சாது சரணம்,

தர்ம சரணம் என நான்கு பிரிவாக வணக்கம் கூறு வர். அவர் தம் ஆசிரியரை அருக சரணம் பாடித் தரும்படிக் கேட்டார். அவர் இயற்றித் தந்தார். பின்பு சித்த சரணத்தைத் திருத்தக்கதேவர் இயற்றித் தம் ஆசிரியரிடம் காட்டினார். தம் பாட்டைவிட அது சிறந்ததாக இருந்ததைக் கண்ட குரு, அவர் பாடிய சித்தசரணத்தை முதலில் வைத்துப் பின்பு தாம் எழுதிய அருக சரணத்தைச் சேர்க்கச் சொன்னார். தேவரும் ஆசிரியர் கட்டளைக்கு அடங்கி அங்ஙனமே செய்தாரென்பர்.

சிந்தாமணியில், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, தேவார திருவாசகம், பெருங்கதை, சிலப்பதிகாரம் முதலிய நூற்கருத்துக் களும் பல அருமையான உவமைகளும் உருவகங் களும் வந்துள்ளன.

காந்தருவதத்தையார் இலம்பகத்தில், 'துன்ப முற் றவர்க்கலால், இன்பமில்லை' (579) என்று ஓரி டத்து இருக்கிறது. இந்தக் கருத்து மிகவும் அரு மையானது. துன்பம் உற்றால்தான் இன்பம் தெரி யும். முதலிலேயே இன்பம் இருந்துவிட்டால் அதன் அருமை தெரியாது.

"துன்பம் வந்த காலத்தில் நகுக" (509) என்று ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கிறது. திருக்குறளில் இடுக்கணழியாமை என்னும் அதிகாரத்துட் கூறப் பட்ட பல கருத்துகள் மிகவும் அழகாக இங்கே எடுத்தாளப்படுகின்றன. துன்பத்தை இன்பமா கக் கொள்ளும் நிலைமையை இங்கே கூறியிருத்தல் அறிந்து மகிழத்தக்கது. இன்பமும் துன்பமும்

மனத்தால் விளைவனவே. ஒன்றை இன்பமாக நினைத்துவிட்டால் அஃது இன்பமாகவே இருக்கும். இந்தச் சிறந்த கருத்தைச் சிந்தாமணியில் (500) காண்கிறோம்.

சீவக சிந்தாமணியைப் படிப்பதனால் நாம் பல கருத்துக்களை அறிந்துகொள்ளலாம். எந்தக் காப்பியமாயினும் அவற்றிலுள்ள பொது விஷயங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

நூலாசிரியர் உணர்த்தக் கருதும் சமய நுட்பங்களைத் தாமியற்றும் நூல்களிடம் ஏற்ற பெற்றித் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறுவர். துறவியரும் பிறரைப்போல் இன்பத்துறைக் கருத்துக்களைத் தாம் செய்யும் நூல்களில் இனிது எடுத்தோதுவதில் வெற்றிபெறமுடியும்; அரசரோ பிறரோ ஆசைவழிப்பட்டுக் காமக்களியாட்டயர்ந்து நிற்பரேல் அழிவது திண்ணம்; எல்லா மக்களும் வாழ்வாங்கு வாழ்ந்து முடிவில் துறத்தற்குரியர்; அரசர் முதல் அனைவரும் விரும்பிக் கற்கும் அளவு தமிழின்பம் செறிய நூலியற்றலாம். இன்பத்துறையில் இனிது களிக்கும் இளைஞரும், முற்றத் துறந்த தூயோரும் பெரிதும் பேணிக் கற்றற்குரியது இந்நூல்; கற்றோர் சொல்லக் கல்லாதாரும் விரும்பிக் கேட்கும் உறுதிப்பொருள் நான்கையும் விளக்க எடுத்துக்காட்டாக நூல் செய்யலாம் என்பன போன்றவற்றை உணருகிறோம்.

இந்நூல் காப்பியநலத்திற் சிறந்தது. கற்போர்க்குத் தமிழ்ச்சுவை பெருக நல்கும் சிறப்புடையது. கற்பாருளத்தே கவர்ச்சி தோற்றி அறிவாராய்ச்

சிக்கு இன்பம் பயக்கும் நலஞ் சிறந்திருப்பது. பிற மொழிகளில் ஊறிக்கிடக்கும் உண்மைகளை மொழி பெயர்த்துத் தாய்மொழியை வளம்படுத்துவதில் மேனாட்டினர் பேருழைப்பும் பெருமுயற்சியும் கொண்டு இடையறாது பணத்தைச் செலவுசெய்து பாஷையை வளமுற வளர்த்து வருவதால் உலக மொழிகளாக அந்நாட்டு மொழிகள் ஓங்கிவிட்டன.

நம் தாய்மொழி முன்னமே வளம்பெற்றிருப்பதால் இனியும் அதை வளம்படுத்த வேண்டிய அவசியமே இல்லை என நினைப்பது தவறு. பிற மொழிகளிலிருந்து நூற்கருத்துக்களைக் கடன்பெறப் பின்வாங்குவது கால வளர்ச்சியை அவமதிப்பதாகும்.

இலக்கியத்திற்கு மிக்க செல்வாக்கை ஊட்ட மேனாட்டினர் எத்தனையோ முறைகளைக் கையாளுகின்றனர். அவற்றுள் நாகரிகமான வழியில் குண குற்றம் (விமர்சனம்) எழுதுவது ஒரு சிறந்த முறையாகும். மூலத்தைக் காட்டிலும் மும்மடங்கு அழகுடன் விளங்குவன சில விமர்சனங்கள். தமிழில் அம்மாதிரி ஒன்றேனும் உண்டோ? இல்லை. மேனாட்டு விமர்சனம் மூலக்கருத்தை மட்டில் விளக்குவதாக இல்லை. கருத்து உருவாவதற்குத் துணை புரிந்த அகக் கருவிகள் புறக்கருவிகள், அவற்றின் லட்சணம், கலாஸ்தானம், கருத்தின் அடிப்படை, அது பரிமளிக்கும் விதம், வர்ணனைகளின் இன்றியமையாமை, பாத்திர குணகுண பரிசீலனை ஆகிய இவற்றை நன்கு எடுத்து விளக்கிக்காட்டுவது.

மொழியிலக்கணத்தை விளக்குவதைக் காட்டிலும் கருத்தின் அடிப்படை இலக்கணத்தையும்

கலைக்குரிய இடத்தையும் விளக்குவது உண்மையில் சிறந்த பணியாகும்.

காலவியல்பும் அதற்கு ஏற்றதே. எதை எடுத்தாலும் காரணகாரிய வுலையிலிட்டு அதன் கூட்டுக்களையெல்லாம் பிரித்துப் பிரித்து ஆராயும் பழக்கம் இப்போது மலிந்துவிட்டது. எவையேனும் ஒரு நூலை எடுத்துக்கொண்டால் சில கலை அளவைகளை அறுதியிட்டு அந்நூலைப் பரிசீலனை செய்வதாயின் அதனல் விளையும் பயன் இவ்வளவு அவ்வளவு என்பதில்லை. புத்தம் புதிய ஆக்கத்திற்கு வேண்டுவன எவ்வளவோ வழிவகைகள் புலனாகும்.

தெள்ளூற்ற தமிழ் அமிழ்தின் சுவைகண்டிங்கமரர் தம் சிறப்புக் காணத் தமிழன்பர் விழைவாராக!

சீவகன் வரலாற்றிற்கு உறுப்பாகச் சிறுசிறு நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆற்றொழுக்காகச் செல்லும் சீவகன் வரலாற்றில் இவை இடையிடையே கலந்து நின்று, படிப்போருளத்தில் சலிப்புத் தோன்ருவண்ணம் பயன்படுகின்றன; ஆதலின் இவை மூலக்கதையோடு தொடர்புற்று காப்பியச்சுவைக்கு ஆக்கம் பயக்கும் திறத்தைக் காணுதல் நலமாகும். மலையின் ஓரிடத்தே தோன்றும் சிற்றருவி பலவற்றின் கூட்டுறவால் பேராருகி நாட்டார்க்கு நலம் பயப்பதுபோல, ஒரு பெருங் காப்பியத்துள் பிண்டித்து நிற்கும் தலைமக்கள் வரலாறு சிறிதளவினதே; ஆயினும் இடையிடையே வந்துசேரும் கிளைக்கதைகளே காப்பிய வரலாற்றுக்குச் சிறப்பும் ஆக்கமும் தருவனவாம்; எனினும் எடுத்த வரலாற்றைச் சிக்குப்படுத்தி, படிப்

படியாக அச் சிக்கலை யறுத்து முடிவெய்துவிக்கும் நூற்புணர்ப்புமுறை இந்நூலில் இல்லை.

இடையீடுகளால் கலக்குண்டு தெளிவுறுவதே வாழ்க்கைக்குச் சிறப்பு இயல்பு; அதனை உருவகப் படுத்திக் காட்டும் பொறுப்பு, காப்பியப் பண்பாதலால் அதனைச் செய்யாமலொழிதல் காப்பியங்கட்குப் பெருங்குறைவே ஆகும்.

ஆழ்வாரும் சைவசமய குரவர் பலரும் பாவினப் பாடல்களைச் செய்தனர்; கற்றோரும் மற்றோரும் அவற்றை நயந்து பேணுவதைச் சைனர் கண்டனர். ஆகவே, காப்பியம் இயற்றும் வழியாகச் சமணசமயக் கருத்துக்களை நாட்டு மக்களிடை பரப்பக் கருதியே இத்தகைய நூல்களை எழுதினர்.

யாப்பு நெறியே யன்றிச் சைவத்திருமுறைகளிலும் பெருங்கதையிலும் வரும் சொற்களும் சொற்றொடர்களுமாக மிகப்பல சிந்தாமணியில் காணப்படுகின்றன. இவர் காலத்து வழங்காத புதுச் சொற்றொடர்களையும் நூதனமாகப் படைத்திருக்கிறார். வேத வழக்கொடுபட்ட கதைகளுள் இந் நூலுட் பயில்வன பல. சிவன் திருமால் முருகன் முதலிய வைதிக தேவர்களின் வரலாறுகள் உவமைகளாகப் பற்பல இடங்களில் எடுத்தோதப்படுகின்றன. சைனசமய நுண்பொருளை மக்களிடையே பரப்பும் நோக்கத்தால் இவ்வாறு செய்யப் பட்டிருக்கலாம்.

வேற்றுநாட்டவர் கூட்டுறவும் ஒழுகலாறுகளும் மிகப் பலவாய்க் கலந்துவிட்டமையால் அக்கலப்பின்

பயனாக இந்நூலில் வேறுபாடு சிலவேனும் தோன்றி யிருக்குமென எவரும் எதிர்பார்க்கலாம். அவ்வாறு எதிர் பார்ப்பவரெல்லோரையும் தேவர் பெரிதும் ஏமாற்றிவிடுகிறார்.

செல்வப் பொருளே இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது; சிறப்பைத்தருவது என்ற இக் கருத்தை.

"இம்மியன நுண்பொருள்க ளீட்டிநிதி யாக்கிக்
கம்மியரு மூர்வர்களி றேடைநுதல் சூட்டி" (495)

"உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழும்; விளை யாததனி னில்லை" (496)

"செய்கபொருள் யாருஞ்செறு வாரைச்செறு கிற்கு
மெஃகுபிறி தில்லையிருந் தேயுயிரு முண்ணு
மையமிலை யின்பமற னோடவையு மாக்கும்
பொய்யில்பொரு ளேபொருள்மற் றல்லபிற பொருளே"
(497)

"எட்டானும் பத்தானு மில்லாதார்க்
கிவ்வுலகி லின்பமேபோல்" (1540)

என்ற செய்யுட்களில் வற்புறுத்திக் கூறி விளக்குவது காண்க.

இல்லறச் சிறப்பை எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளா ரென்பதை,

"ஒருவனுக் கொருத்திபோல உளமகிழ்ந் தொளியின்
வைகி" (2377)

இன்புறுதலே வாழ்க்கை நலம் தருவது.

"வேற்றடங்கண் தாமாடு நாடகங், கண்டு வாழாதவர்
வாழ்க்கை யெல்லாஞ் சவரர் வாழ்க்கையே" (1655)

"............இயைவ தன்றே, லாக நோற்றிட் டடங்க லாண் மைக் கழகென்பவே" (1657) என்பவற்ரு லறியலாகும்.

இன்ப துன்பங்கள் மக்கள் வாழ்க்கையில் இயல் பாகவே மாறி மாறி வந்து வருத்து மென்பதை,

"ஆக்கமுங் கேடு முற்றீ ரடிகளே யல்லிர் மேலைப்
பூக்குலா மலங்கல் மாலைப் புட்கொடியாற்கு முண்டே"
(1727) என்பதனல் விளங்கும்.

பழவினையில் நம்பிக்கையும், பிற நன்னெறி களும் ஒருவருக்குத் துன்பம் வந்து சுடும்போது நன்கு விளங்கு மென்பதை.

"நல்வினை யுடைய நீரார் நஞ்சுணி னமிர்த மாகும்
இல்லையே லமிர்து நஞ்சா மின்னதால் வினையினுக்கம்"
(2314)

"அகப்படு பொறியி னுரை யாக்குவா ரியாவ ரம்மா
மிகப்படு பொறியி னுரை வெறியராச் செய்ய லாமோ"
(2315)

"............இருவினை சென்று தேய்ந்தாற், பரிவுற்றுக்
கெடாமற் செல்வம் பற்றியா ரதனை வைப்பார்" (2316)

"நல்லவை புரியுமாந்தர் நாந்தகம் பிழைத்து வீழா
அல்லவை புரியு மாந்தர்க் கத்திர மொன்றும் வாயா
வெல்வதோ குணத்தின் மிக்கார் வெற்றிலை விடினும்
[வேலாம்
இல்லையேவென்றிதீமை யிடங்கொண்டமனத்தி னூர்க்கே"
(815)

"வெல்வது விதியி னுகும்" (2317)

அரசர், எவற்றைச் செய்யினும் அமைச்சரோடு ஆய்ந்தே செயலாற்றுவர்.

"நாவலர்சொற்கொண்டார்க்கு நன்கலால் தீங்குவாரா"
(206)

" கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலும்" (1921)

என்பனவற்றால் லறியலாம்.

"ஒற்றர் தங்களை யொற்றறி ஞய்தலும்" அரசரியல்பு; இவ்வொற்றர் போன்றவர்க்கு, பிறரறியா வகையில் சிறப்புச் செய்வதை கோவிந்தராசன் செயலால் உணரலாம்.

அரண்மனையில் குப்பாய மிலேச்சர் (431) பணி புரிந்து வந்தனர்.

அரசர் உண்ணும் உணவு முதலியவற்றைப் பறவைகளுக்கும் குரங்குகளுக்கும் முன்னே உண்பித்துத் தூய்மை கண்டபின்பே உண்பது வழக்கம்.

வெற்றி மேதகவு கல்வி படை நாடு முதலிய பலவும் மிக்க பொருளுள்ள அரசர்க்கே கை கூடுவனவாம்.

" மன்னர் தம் வெகுளி வெந்தீ மணிமுகில் காண மின்னிப்
பொன்மழை பொழியி னந்தும்" (1117)

என்பதும் (1923) ஈண்டு உணரத் தக்கது.

அரசர்சிங்காசனத்திலிருக்கும்போதுகையில்செங்கழுநீர் மலரைப் பிடித்திருப்பது (429,1887,2358) வழக்கம்

அரசரைத் தேவரை யொப்ப மக்கள் கருதி வந்தனர்;

" பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திவர்" (246)

கொடுங்கோ லரசன் ஆளும் நாட்டில் மழை யின்ரும்; வறுமை மிகும்; உயிர்கள் நோயுற்று அழியும்; மகளிர் கற்பை இழப்பர். (255)

வேற்றரசருடன் நட்புற் ருெழுகுதற்கு அடையாளமாக இருவர் நாட்டிற்கும்.

"நெல்லும் பொன்னும் வழங்குமின்" (2150)

எனத் தெரிவித்தல் இயல்பாம்.

வேந்தன் துணை செய்த சான்ருேர்க்கும் வீரர்க்கும் நாட்டு மக்களுக்கும் சீரிய நலங்கள் பல செய்வான்; இளவுடையான் - இளவரசு (2568) பட்டத்தையும் ஏனையோர்க்கு ஏனுதிப் பட்டமும் கணையாழியும் நல்குவான்.

அரசிளங்குமரர் பிறநாடு சென்று இயற்கை நலங்களைக் காண்பது தமக்குரிய சிறந்த செயலாக மேற்கொண்டிருந்தமை இனிது விளங்கும்.

"வீடெனப் படும்வினை விடுதல் பெற்றது" (2846)

"வீடே முடிக விப் பிறவி வேண்டேம்"

"ஒல்லெ னுயர் தவமே செய்ம்மி னுலகத்தீ, ரெல்லீரும்" (742)

"தவமு மில்லை, தானமு மிழவென்பாரும் நரகம தடைவர்"

என்பவற்ருல் மோட்சச் சிறப்பும் தவச்சிறப்பும் விளக்கப் படுதல் காண்க.

"பிரிவிற் ருேன்றிய போன்பெ னப்படும்
எரியின் மூழ்கியி றந்துப டுங்கோலோ" (2327)

"காத லாளுட லுள்ளுயிர் கைவிடி
னேத மென்னுயி ரெய்தி யிறக்குமற்
றூதலா லழிவொன்றில னல்லதூஉம்
மாதர் விஞ்சையும் வல்லளு மல்லளோ" (1631)

"இதுபோலு மிவ் வேட்கை வண்ணம், சென்றே படினுஞ் சிறந்தார்க்கு முரைக்க லாவ, தன்று யரிதா யகத்தே சுட் டுருக்கும் வெந்தீ, ஒன்றேயுலகத் துறுநோய் மருந் தில்லது" (1962)

"நிறையாது மில்லை நெருப்பிற்சுடுங் காம முண்டேல் குறையா நிறையி னொருகுன்றியுங் காமமில்லை, பறையா யறையும் பசப்பு" (1963)

"பெருமநீ வேண்டிற் றல்லால் வேண்டுவ பிறிதொன் றுண்டோ, ஒருமைநின் மனத்திற் சென்றே னுவப்ப தேயுவப்பது" (2093)

"சிறியவர் செய்த தீமை, புலம்பலர் பொறுப்ப ரன்றே பெரியவர்" (2088)

"புலவர்கள் புகழக் கன்மே, னிற்பர்தம் வீரந் தோன்ற நெடும் புகழ் பரப்பி" (2302) வீரர் தம் புகழைப் பரப்பிப் புலவர் பாடக் கல்லாகி நிற்பர் எனக் கூறுவர்.

வீரர்தம் மார்பிற் பட்ட வேலைப்பிடுங்கு மிடத்து அது வளையக்கண்டு அதனை வீழ்ந்து கிடக்கும் களிற்றுக்கோட்டுக் கிடையே கொடுத்து வளைவு திருத்திப் போர் செய்வர்.

"புண்ணிடங் கொண்ட வெஃகம் பறித்தலின் பொன் னனார்தம், கண்ணிடங் கொண்ட மார்பில் தடாயின காது வெள்வேல், மண்ணிடங் கொண்டயானை

மணிமருப் பிடையிட் டம்ம, விண்ணிடை மள்ளர் கொள்ள மிறைக்கொளி திருத்தினானே" (284)

"நெஞ்சகம் நுழைந்த வேலைப் பறித்து வாய்ப்புண்ணை ணீட்டி, வெஞ்சமம் நோக்கி நின்று மிறைக்கொளி (2293) திருத்தினனாகப் பகைவர் அதைக் கண்டு அஞ்சி ஓடினர்.

வீரர் போரிற் பட்டுத் துறக்கம் புகும் கருத்தால் செம்பொன்னை வாயுளிட்டுக் கொள்ளும் வழக் கொன்று கூறப்பட்டுள்ளது:—

"தெய்வதம் வணங்குபு செம்பொன் வாயுளிட்
டெய்கணைப் படுமழை சிதறி யெங்கணும்
மொய்யமர் மலைந்தனர் முருகு விம்முதார்ச்
செய்கழற் சீவகன் வாழ்க வென்னவே" (778)

"கச்சையுங் கழலும் வீக்கிக் காஞ்சனத் தளிவம் வாய்க் கிட்டு..........அம்புதின்ன நாளிரை யாகலுற்றார்" (2303)

பலமொழிகளைப் பேசும் மக்கள் நகரக் கடைத் தெருவில் நெருங்கி யிருந்தன ரென்பதை, "முட் டிலா மூவறு பாடை மாக்களால், புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய, மட்டிலா வளநகர்" (93) என்பதனா லறியலாம்.

யவனர் கைவினை செப்பும் பேழைகளும் பிற வும் இந்நூலில் குறிக்கப்படுவதால் மேனாட்டுப் பல பண்டங்கள் வியாபாரங் கருதி வந்திருந்தமை யறியலாகும்.

"கொணர்ந்தன பண்டம் விற்ற கொழுநிதிக் குப்பை யெல்லா, முணர்ந்துதன் மதலையேற்றி யொருப்படுத் தூர்க்கு மீள்வான்" (505) என்பதால்

MADURA TAMIL SANGAM

இந் நாட்டு வணிகர் கப்பல் மூலம் கடலில் மேனுே சென்று வியாபாரஞ் செய்து வந்தமை யறிகிரேம்.

கடலில் புயல்வந்து மோதுவதை,

"முகில்க ளீண்டித் தூங்கிருள் மயங்கியான்று
விளிப்பதுபோல மின்னி வெடிபட முழங்கிக் கூற்று
மொளித்துலைந்தொழிய வெம்பியுரறி நின்று
இடிப்பதும்"

"எண்டிசை வளியுமீண்டி யெதிரெதிர்கலாவிப்பவ்வம்
கொண்டுமே லெழுவ தொப்பச் குளிறி நின் றதிர்ந்து
மேகம்
தண்டுளி பளிக்குக் கோல்போல் தாரை" (508)
யாகச் சொரிவதும் கூறப்பட்டுள்ளது.

"குருமித்து மதலை பொங்கக் கூம்பிறப்பாய்ந்து வல்லே
நிருமித்தவகையினேடி நீர் நிறைந்து" மூழ்கும் (512)
எனக் கப்பல் உடைந்து அழிவதை விளக்குகிருர்.

நகரின் மதிலில் பல்வகை எந்திரப் பொறிகள் உள்ளன; அவை யவனரால் செய்யப்பட்டவை;

"தம் புலங்களால் யவனர் தாட்படுத்த பொறியே"
(103) என்பதாலறியலாம்.

இந்நூலில் பொற்பணி செய்பவரும், சங்கறுப் பவரும், மணிகடைபவரும், பொன் வெள்ளிகளால் கலஞ் செய்வோரும், ஆடை நெய்பவரும், பூத் தொடுப்போரும், பல்வகைச் சித்திர வேலைகளமைந்த அணிகளும், உடைகளும், விதானங்களும், நெடுமாட வீதிகளும் பிறவும் குறிக்கப் படுகின்றன.

அயல் நாடுகளிலிருந்து ஆடையணிகள் ஏற்று மதி இறக்குமதி யாவன (967) கூறப்படுகின்றன.

நீரணிமாடம் போன்ற நாவாய்களும், நிலத்திற் செல்லும் பல்வகை வண்டிகளும், விளையாட்டு

வுகைகளுள், நீர் விளையாடல், பந்தாடல், கழங்காடல், ஊசலாடல், அம்மனையாடல், பொழில் விளையாட்டு, சுண்ணமிடித்தல் முதலியனவும் பலபடியாகச் சிறப்பிக்கப் படுகின்றன. கோழி, ஆட்டுச் சண்டைகள் (73,120) கூறப்படுகின்றன.

கற்புடை மகளிர் பல்லி சொற்கேட்டலும், (1909) கண்ணிடன் ஆடலும், (1156) கூடலிழைத்து நோக்கலும், (1037) கிளி (2044) முதலியவற்றைத் தூது விடுதலும் வழக்கில் இருந்தன. முல்லைக் கொடியை வளர்த்து (1268) அது முதலில் பூத்த பொழுது விழா அயர்தல், வீட்டுள் குழந்தைகள் இருக்குமிடத்தே விளக்கேற்றி அதனை அக்குழந்தைகளுக்குக் காவலாகக் கருதுவது வழக்கம்.

கன்னிப் பெண்கள் மனத்தே வேட்கையை எழுப்பிப் பின் கைவிட்டு நீங்கும் ஆடவர், குட்டநோயால் வருந்தி நரகத்துட் குளிப்பர் என்ற உண்மையை விளக்குகிறார். செல்வர் வீடுகளில் வாழும் கன்னிய மகளிர் பிறரால் எளிதிற்காணற்கு அரியராவார்; இதனை,

"பொன்னணி திகிரியஞ் செல்வன் பொற்புடை
கன்னிய மகளிரிற் காண்டற் கரியன
நன்மணி புரித்தன வாவி நான்குள" (1210)

என்பதனாலறியலாம்.

கன்னிய மகளிர் மனத்தே வேட்கை எழுவதும் உண்டு; ஆயினும் அஃது எவ்வகையாலும் வெளிப்படாது; அவரால் நன்கு மறைக்கப்படும்; இவ்வுண்மையை.

"இன்னிசை யுலகந் தன்னு ளென்பெயர் சேறவின்றாய்க்
கன்னிய மகளிர் நெஞ்சிற் காமம்போற் கரக்க" (1861)

என்றுள்ள தொடரா லுணர்க.

மகளிரை மணம் புரிவியாது வைத்திருத்தல் பாவம் என்ற வழக்கை. "..........கன்னியம் மடந் தைமா ரணிநலம், முற்றினுரை நீடுவைப்பின் மூள்கும் வந்து பாவமும், குற்ற மற்று மாகும்" (1998) என்பதனல் விளக்குகிறார்.

மகளிர்க்கு உயிரினும் மானமே சிறந்ததென்ற நூல்வழக்கைப் பல்லிடங்களிலும் வெளிப்படக் கூறுகிறார்.

"பெண்பா லவர்க்கட் கணியாய்ப் பிரியாத நாண்" (1961)

"நாண்மெய்க் கொண்டீட்டப் பட்டார்" (1119)

"நாண் சுமக்க லாத நங்கை" (2443)

"நாண் முதற் பாசந் தட்ப நடுங்கினர்" (470)

இந்நாணமே உருவாக உடைய கற்புடை மகளிர், கண்ணைக் கவரும் பொருளைக் காண நேர்ந்தால் நேரே நின்று காணவிரும்பார். தம்மை மறைத்து ஒரு கண்ணல் காண்பர்.

"புல்லிய கொம்பு தானோர் கருவிளை பூத்த தேபோல்
ஒல்கியோர் கொம்புபற்றி யொருகணல் நோக்கி
நின்றாள்" (319)

"பாகமே மறைய நின்ற படைமலர்த் தடங்கணல்லார்
நாகம்விட்டெழுந்து போந்த நாகர்தம் மகளி
ரொத்தார்" (460)

"செம்பொன் தூணையே சார்ந்து நோக்கும், ஊழ்படு
காதலானை யொருபிடி நுசுப்பினளே" (1452)

கொழுநருடன் கூடி வாழும் நற்குடிப் பெண்டிர் மகிழ்ச்சியைப் பின்வருமாறு கூறிவிளக்கியிருக்கிறார்:—

" முனிவரும் போகபூமிப் போகமுட்டாது பெற்றும்
தனியவ ராகி வாழ்தல் சாதுய ரதனினில்லை
கனிபடு கிளவி யார்தம் காதலர் கவானில் துஞ்சில்
பனியிரு விசும்பிற் றேவற் பான்மையிற்று" (553)

" மாட மாமணிச் சிவிகையின் மயிலென விழிந்தார்
வீடுகண்டவர் போன்று மின்னிடு கொடியனையார்"(2379)

" வீடு மலியுலகினர் போல விளையாடுந்
தோடுமலி கோதையொடு துதைந்தவரை மின்போ
லாடுகொடி யணிந்தவுய ரலங்கல் வரைமார்பன்" (2483)

கன்னிகைகள் விவாக காலத்தில் தம் உடலிலும் கூந்தலிலும் ஒரு வகை நறுமணம் கமழவிளங்குவரென்பதை.

" புணர்மருப் பியானையின் புயல்கொள் மும்மதம்
மணமகள் கதுப்பென நாறும்" (1621)

" ............ஒருநாளவன் போகிப், பொழிலின் மிக்கதனிற்
புக்கான் மணமகளிர்போற் பொலிந்ததே" (1648)

" நான மண்ணிய நன்மண மங்கையர்
மேனிபோன் றினிதாய் விரை நாறிய, கானம்" (853)

என்று கூறுவதால் விளங்கும்.

கற்புடைமகளிர் நலத்தைப் பல வகையால் எடுத்து ஓதுகிறார்:—

ஆற்றிற் பெருக்கெடுத்துப் போந்த நீர் சிறு வாய்க்கால்களின் வழியே சென்று பரந்த வயல்

களில் பாய்ந்து அடங்கித் தெளிந்திருக்கும் செயற்கு அடக்கமுடைய கற்புடைமகளிரையே விதந்து.

"குலத்தலை மகளிர்தம் கற்பிற் கோட்டகம்
நிலைப்படா நிறைந்தன பிறவு மென்பவே" (41)

கற்பின் உறுதியை மலையின் திண்மைக்கு உவமையாக்கி.

"குலத்தலை மகளிர்தம் கற்பின் திண்ணிய
அலைத்துவீ ழருவிக ளார்க்குஞ் சோலைசூழ்
வலத்தது வனகிரி" (1210) என்று கூறுகிருர்.

பொன்னும் முத்தும் மணியும் கூடைகளிலே நிரப்பிவைப்பர்; ஆசிரியர் உயர்ந்த பீடத்தில் இருந்து பொன்னேலையில் பொன்னூசியால் எழுத்துக்களை எழுதித் தந்து கல்வி கற்பிப்பது வழக்கமென்பதை,

"அரும்பொனு மணியு முத்துங் காணமுங் குறுணியாகப்,
பரந்தெலாப் பிரப்பும் வைத்துப் பைம்பொன்செய்தவிசினுச்சி, யிருந்து பொன்னேலை செம்பொனூசியாலெழுதி யேற்பத், திருந்து பொற் கண்ணியாற்குச் செல்வியைச் சேர்த்தினரே." (369) என்பதாலுணர்த்துதல் காண்க.

கற்கப்படும் கல்வித்துறையை, கீழ்வரும் செய்யுள் ஒருவாறுணர்த்தும்:—

கலையின தகலமுங் காட்சிக் கின்பமும்
சிலையின தகலமும் வீணைச் செல்வமும்,
மலையினி னகலிய மார்ப னல்லதிவ்
வுலகினி விலையென வொருவ ஞயினுன்" (411)

குழந்தைகளை நீராட்டி மருந்தூட்டி நாவழித்து மூக்குயர்த்திச் சீராட்டும் திறத்தை, "காடியாட்டித்

தாரய்ச்சாறுங் கன்னன் மணியும் நறுநெய்யும், கூடச் செம்பொன் கொளத் தேய்த்துக் கொண்டு நாளும் வாயுறீஇப், பாடற் கினிய பகுவாயுங் கண்ணும் பெருக வுகிருறுத்தித், தேடித் தீங்தேன் திப்பிலிதேய்ங் தண்ணு வுரிஞ்சி மூக்குயர்த்தார். (2703)

எனவிரித்துக் கூறுகிறுர்.

தாமரைப் பூவில் அன்னப் பிள்ளை கிடப்ப நீரலைகள் அதனை அசைப்ப அப்பிள்ளை யுறங்கும் காட்சியை நமக்கு உணர்த்து முகத்தால் தாயர் தம் குழந்தைகளை உறங்கச்செய்யும் செயலை உவமை யாக அமைத்து அழகிய தொருபாட்டால் (931) தெரி விப்பது காண்க.

கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் விளக்கேற்றி விழாவயர்தல் (256) உண்டு. சோதிட நூலுக்குத் தலைமை கொடுக்கப்பட்டு வந்தது, முரசறைவோர் முதலில் நாட்டார்க்கு உறுதிப் பொருள் களின் நன்னெறி எடுத்தோதுவர் என்பது வழக் கரும். அந்தப்புரத்தே மகளிர் ஆணுடை உடுத்து வாளேந்திக் காவல் புரிவர். நகரத்தவர் வேனில் நுகர்ச்சி குறித்து சோலையிடத்தே தங்கி இன்புற்று நீர்விளையாடியும் உண்டாடியும் இன்புறுவர். விரும் பினுரிடம் கண்ணேட்டமும், வெறுக்கப்பட்டாரிடம் நலங் காணுமையும் உலக இயற்கை. எவரும் பெற்ற தம் மகளைத் தாமே வலியச் சென்று தாரார்; புகழும் பழியும் பெறுதற்கு மக்களும் தேவருமே உரியர்; தமையனும் தம்பியும் எதிரெதிராக உட்காந்து உணவு கொள்ளவேண்டும் என இவ்வாறு மிகப்பல வழக்காறுகளைத் திருத்தக்க தேவர் எடுத்தோதுவர்.

## வினாக்கள்

1. பிற்காலக் காப்பியங்கள் சிந்தாமணியால் அடைந்த வளர்ச்சி என்ன?
2. சிந்தாமணி என்னாமல் சீவக சிந்தாமணி என இந்நூலுக்குப் பெயர் வழங்கக் காரணம்என்ன?
3. சீவக சிந்தாமணியின் சிறப்பு எவ்வெவ்வாறு விளங்கும்?
4. சிந்தாமணி என்பதன் பொருள் என்ன?
5. சீவகனிடத்திற் காணும் நற்குணங்கள் யாவை?
6. புத்தர் பெருமானைப் போன்றவன் சீவகன் எனக் கூறுதல் எம்முறையில் பொருந்தும்?
7. இந்நூலை மணநூல் என்றல் ஏற்குமா? எப்படி?
8. தாகூர், டென்னிஸனது வாழ்க்கை வரலாற்றைப் படித்து எழுதிய விமர்சனத்தில் குறிப்பிட்டிருப்பது யாது?
9. சிந்தாமணி மொழிபெயர்ப்பு நூலே என்பதை எவ்வாறு உணரலாம்?
10. திருத்தக்கதேவர் பழைய நூல்களில் சிறந்த அறிவு படைத்தவர் என்பது பொருந்துமா? எப்படி?

THE MADURA TAMIL SANGAM